# எழுவான்

## சிறப்பு மலர்



கலாசார விழா – 2021/2022

வெளியீடு
**கலாசார பேரவை**
பிரதேச செயலகம்
மண்முனை தென் எருவில்பற்று - களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவான்

## சிறப்பு மலர்

## பிரதேச கலாசார விழா - 2021/2022

வெளியீடு

**கலாசார பேரவை**

பிரதேச செயலகம், மண்முனை தென் எருவில்பற்று

களுவாஞ்சிகுடி.

அனுசரணை

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**


கிழக்கு மாகாணம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவான்
## சிறப்பு மலர்

# Ezhuvaan

Special Publication to express the
Cultural Day -2021/2022




நூலின் பெயர் : எழுவான்

வெளியீடு : கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி

அனுசரணை : பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்,
கிழக்குமாகாணம்,
திருகோணமலை.

அட்டைப்படம் : திருமதி. ரினுஜா சிவசங்கர்

பக்கங்கள் : 80

கணனி
வடிவமைப்பு : த. சங்கர்

அச்சுப்பதிப்பு : வணசிங்க அச்சகம்,
மட்டக்களப்பு.



**மலர் வெளியீட்டுக் குழு**

1. திருமதி. சத்தியகௌரி தரணிதரன்
2. திருமதி. ராதிகா கருணாகரன்
3. திரு. தா.கோபாலகிருஸ்ணன்
4. கலாபூசணம் செ.டானியல்
5. திரு. நா.நாகேந்திரன்
6. திரு. க.கயல்வேந்தன்
7. திரு. த.ரமீஸ்குமார்

**ஆலோசகர்**

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
பிரதேச செயலாளரும், கலாசார பேரவைத் தலைவரும்.
பிரதேச செயலகம், மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி.

**Editorial Board**

1. Mrs. Sathyagowry Tharanitharan
2. Mrs. Rathika Karunakaran
3. Mr. T. Gopalakrisnan
4. Kalaboosanam S. Daniel
5. Mr. N. Nahendren
6. Mr. K. Kayalventhan
7. Mr. T. Rameeskumar

**Advisor**

Mrs. Shivapiriya Vilvaratnam
Divisional Secretary
Manmunai South Eruvil pattu
Kaluwanchikudy



**Published By**

Cultural Federation
Divisional Secretariat
Manmunai South Eruvil pattu
Kaluwanchikudy.

Department of Cultural Affairs
Eastern Province, Trincomalee.



இம் மலரில் இடம்பெறும் ஆக்கங்கள்
அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாகும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டின் கிழக்கே மட்டு நகரின் தென் பகுதியில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம் வருடா வருடம் தனது பிரதேச மக்களின் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்வுகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் பிரதேச கலாசார விழா மற்றும் 'எழுவான்' சிறப்பு மலர் வெளியீடு என்பவற்றை நடாத்தி வருகின்றது. இவ்வருடமும் பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படவிருக்கும் 'எழுவான்' சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி.

வளர்ந்து வருகின்ற நவீன யுகத்தின் தாக்கத்தால் நமது பாரம்பரியப் பண்பாட்டு நிகழ்வுகள் மக்கள் மத்தியில் மருவிக் கொண்டே வருகின்றன. தாங்கள் தற்காலத்திற்குப் பொருத்தமான வகையில் கலாசார விழாவையும் அது தொடர்பான நூலையும் வெளியிடுவது வரவேற்கத்தக்கது. கலாசாரமே மனிதனை பண்புள்ளவனாக மலரச் செய்கின்றது. ஏட்டறிவு அல்ல!

இந்நூல் வெளியீடானது தற்கால இளைய சமுதாயத்தினர் மத்தியில் நமது பாரம்பரியக் கலைகள், நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்ள வழிவகுக்கும். 'எழுவான்' சிறப்பு மலர் வெளியீடு இனிதே நடைபெற பிரதேச செயலாளர் மற்றும் கலாசார பேரவை அனைவருக்கும் தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றோம்.

**சுவாமி தக்ஷஜானந்தர்**
பொது முகாமையாளர்
ஸ்ரீ இராமகிருஸ்ண மிஷன்
மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்கத்தின் புதிய கொள்கைக்கு அமைவாக சட்டத்தை மதிக்கும் குணநலம் கொண்ட ஒழுக்க நெறியான சமூகத்தைக் காப்பதில் கலை, கலாசார இலக்கிய துறைகளின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

அதன் அடிப்படையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவையினால் நடாத்தப்படும் கலாசார விழா - 2021/2022 தொடர்பாக வெளிவரும் "எழுவான்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இப் பூகோள யுகத்தின் கடுகதிப் பாதையாக இணையத்தளங்களின் இயக்கம் பூகோளப் பாய்ச்சலுக்கு உரமூட்டும் காலமிது. இவ் விரைவான பாய்ச்சலுக்கு ஈடு இணையாக எமது கலைஞர்களினதும், கலை நுட்பங்களினதும் தனித்துவ அடையாளங்களைப் பேணுவதுடன் தேவைக்கேற்ப மேலும் கூர்மைப்படுத்தி இவ் விரைவான பாய்ச்சலுக்கு உள்வாங்கக் கூடிய செயல்திட்டங்களையும் செயற்படுத்த வேண்டியது கலாசார பேரவையின் கட்டாய பணியாகும்.

இப் பிரதேசத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று இங்கு 99% வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமிழர்கள். இவர்கள் தான் நிரந்தர வதிவிடத்தையும் சொத்துரிமையையும் கொண்டுள்ளார்கள். இவ்வாறான பிரதேசத்தின் கலாசார விழாவும் "எழுவான்" சிறப்பு மலர் வெளியீடும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதை நான் நன்கறிவேன்.

இவ்வேளையில் கலாசார விழாவும், "எழுவான்" சிறப்பு மலர் வெளியீடும் சிறப்பாக நடந்தேற உழைத்த பிரதேச செயலாளர், மற்றும் கலாசார பேரவையினர் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

**க.கருணாகரன்**

அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலாளரும்

மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார அலுவல்கள் திணைக்கள
பணிப்பாளர் அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

மேலைத்தேய நாகரிக சமூக பண்பாட்டு பாரம்பரியங்கள் அனைத்தும் மகாபாரதத்தின் வழிவந்தனவாக நம்பப்படுகின்றன. அதில் ஆய கலைகளும் கணிசமான அளவு பங்கு வகிக்கின்றன. அத்துடன் பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள் ஊடாக முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் விவாதத்திற்குரியனவாக விளங்குகின்றன. புராதன பண்டிதர்கள் உலகை ஒரே கலைக் கூடமாக நோக்கினர் அவர்கள் அவற்றை உலகளாவிய கலை, சிற்பம், நன்னெறி, கலையும் விஞ்ஞானமும் என ஐந்தாக வகைப்படுத்தினர். அவ் அழகியற் கலை, கவின் கலை என்பன கலை இலக்கிய நூல் வடிவங்களாக தொழினுட்ப கலாசாரம் ஒன்றை நோக்கி முன்னேறியுள்ளன. அவ்வாறானதொரு பின்னணியில் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் கலாசார பேரவையினால் எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஆய்ந்தெடுத்து மதிப்பீடு செய்து பாராட்டி கௌரவிக்கும் மாபெரும் விழாவை முன்னிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக வருடந்தோறும் எழுவான் என்ற மலரை வெளியிட மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் எடுத்த முயற்சியானது வர வேற்கத்தக்கது இதன் மூலம் கலையாக்கத் திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்துப் படைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளையும் மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தில் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்களுக்கு கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இவ்விழாவினை வெற்றிகரமாக நடத்துவதற்காக பல்வேறு வழிகளிலும் பங்களிப்புக்களை நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் விருதுகளைப் பெற்றுக்கொள்கின்ற எழுத்தாளர்களுக்கும் மற்றும் கலைஞர்களுக்கும் உளங்கனிந்த நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தரணி அனோஜா கமகே**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



மண்முனை தென் எருவில் பற்று பிரதேச மக்களின் பாரம்பரிய, பண்பாட்டு அம்சங்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவையினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதேச கலாசார விழாவிலே மண்ணின் பெருமை கூறும் ஆக்கங்களைத் தாங்கி வழமை போல இவ்வருடமும் 'எழுவான் சிறப்பு மலர்' வெளியீடும் இடம்பெற இருக்கின்றது.

1996 ஆம் ஆண்டு முதன் முதலாக முகிழ்த்த இம்மலர் இவ்வருடங் கவிதை, கட்டுரை, நாட்டாரியல், வரலாற்றியல், மொழியியல், மண்வாசனை கூறும் அம்சங்களைத் தாங்கி வரும் கதம்ப மலராக வெளிவரவுள்ளது. இம்மலர் வெளியீடு சிறப்புற நிகழ்ந்தேற எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்**<br>
பணிப்பாளர்<br>
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



பாரம்பரிய வாழ்வியல் முறைமைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், மற்றும் பாரம்பரிய கலைகள் உயிர்ப்புடன் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச கலாசாரப் பேரவையினால் வருடாவருடம் நடாத்தப்படும் கலாசார விழாவும் அதன் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் 'எழுவான்' சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறுவது பாராட்டுக்குரியது. பிரதேச கலாசார விழா சிறப்புற நடைபெறவும், விழா ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் 'எழுவான்' சிறப்பு மலர் சிறப்புற வெளி வரவும் எனது வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

மனிதர்களின் உடல், உளம்சார் சமநிலைக்கு "ஆடுதல், பாடுதல், சித்திரம் கவி" ஆகிய ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவது அவசியமானதாகும். கலைகளின் ஆற்றுகை மற்றும் பேணுகையில் பாரம்பரிய இலக்கிய மரபுகளைப் பேணுவதுடன், நவீன இலக்கிய முயற்சிகளை வளர்ப்பதும், ஆவணப்படுத்துவதும் அவசியமான ஒன்றாகும். தொடர்ச்சியான ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளே இளஞ்சந்ததியினர் மத்தியில் எமது கலை கலாசார விழுமியங்களை அறிமுகப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான சிறந்த வழிமுறையாக அமைகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை புறங்களில் ஒன்றான மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம் பல அறிஞர்களையும், கல்விமான்களையும், நிருவாக அதிகாரிகளையும், சிறந்த கலைஞர்களையும் தன்மைந்தர்களாக கொண்ட வளங்கொழிக்கும் பூமியாகும் நாட்டுக் கூத்துக்களும், நாட்டார் பாடல்களும் பட்டி தொட்டியெங்கும் ஒலித்துக் கொண்டு இருக்கும்.

பிரதேச எல்லைக்குட்பட்ட தரைத்தோற்றம் மற்றும் அப்பிரதேசம் கொண்டுள்ள வளங்களை நோக்குமிடத்து இந்நூலுக்கு 'எழுவான்' என பெயரிடப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகும். விழாவின்போது முதுகலைஞர்கள் 05 பேரும், இளங் கலைஞர்கள் 02 பேரும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய முயற்சிகள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படவும் அதன் மூலம் எமது பிரதேசத்தின் தனித்துவம், இருப்பு, கலை கலாசார விழுமியங்கள் என்பன நிலை நிறுத்தப்பட வேண்டும். காத்திரமான ஆவணமுயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலாளர், விழாக்குழுவினர், கலாசார பேரவையினர், கலாசார உத்தியோகத்தர் உட்பட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சரண்யா சுதர்சன்**
மாகாண பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை தென் எருவில்பற்று
உதவி பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச்செய்தி



மண்முனை தென் எருவில்பற்று பிரதேச மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த பாரம்பரிய சடங்கு முறைகள், சம்பிரதாய நிகழ்வுகள், பண்பாட்டு விழுமியங்களை தொகுத்து ஆவணப்படுத்தும் முயற்சியில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை வருடாவருடம் வெளியிடும் எழுவான் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனித உணர்வுகளை மேம்படுத்தி மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு தூண்டுகோலாக அமைவன கலைகளே. கலாசார நிகழ்வுகள் சமூகங்களுக்கிடையேயும், இனங்களுக்கிடையேயும் நட்புறவையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு உறுதுணையாக அமைந்து விடுகின்றன.

தற்கால நாகரிக மோகத்தினால் தமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் சீர்குலைந்து செல்கின்ற இக்கால கட்டத்தில் அவற்றை ஆவணப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் வகையிலும், அத்துறைகளில் ஈடுட்டு வருகின்ற கலைஞர்களை கௌரவிப்பதையும் நோக்காகக் கொண்டு கலாசார பேரவையினால் நடாத்தப்படும் கலாசார விழாவில் எழுவான் சிறப்பு மலர் வெளியீடானது பிரதேச திறமைசாலிகளின் அறிவு மற்றும் படைப்பாற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கு துணைபுரிகின்றது.

இம்மலர் வெளியீட்டிற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பும் ஆலோசனையும் வழங்கிய மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


**திருமதி. சத்தியகௌரி தரணிதரன்**
உதவி பிரதேச செயலாளர்
மண்முனை தென் எருவில்பற்று
களுவாஞ்சிகுடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் ஆசிரியரிடமிருந்து



வருடந்தோறும் எழுந்து வரும் எழுவான் சஞ்சிகையானது, கொரோனா என்ற இருள் உலகெங்கும் வியாபித்ததால் தாமதித்து எழுந்தாலும் தற்போது எங்கள் உள்ளத்தை எழுவான் கனிவிப்பதில் மகிழ்வுறுகிறோம். இவ்வெழுவானின் கதிர் வீச்சினைப் பரப்புவதற்கு, ஆர்வலர்களின் ஆற்றலைத் தூண்டிய எமது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரது அரும் முயற்சியின் நிமித்தம், இச்சஞ்சிகை உங்கள் கையில் தவழ்வதால், அவரது ஊக்கத்தைப் பாராட்டுகின்றேன்.

எமது மண்முனை தென் எருவில்பற்று பிரதேசமானது, கலையிலும், பண்பாட்டியல் அம்சங்களிலும் சிறந்து விளங்குகின்றது. ஒரு பிரதேசத்தின் மண்வாசனையை மணம் பெறச் செய்து மகிழ்விப்பது நாட்டார் இலக்கியங்களும், மரபுவழி வழக்காறுகளுமேயாகும். இவ்வாறான அழியாச் செல்வங்களை நம் முன் படைக்க ஆர்வமுறும் பல்வழிப் படைப்பாளிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தோடு எமது பகுதிக் கலாசார பிரிவானது, வருடாவருடம் பாடசாலை மட்டம், ஏனைய இளம் எழுத்தாளர்கள் மட்டம், பெரியோர்கள் மட்டம் எனப் பல்வேறுபட்ட போட்டிகளை நடாத்தி முன்னிலைப்படுத்தப்பட்டு அவற்றை இவ்விதழுக்குக் கொண்டுவருவதால் அனைவரும் வாசித்து, அறிந்து, தெளிந்து, உள்ளங் களி கூருவதற்கும் இது ஒரு களமாக அமைகின்றது.

எனவே இச் சஞ்சிகை வெளிவருவதற்கு ஆற்றுப்படுத்திய எமது பிரதேச செயலாளருக்கும், மிகவும் அருமுயற்சி காட்டிய கலாசார பிரிவினருக்கும், எழுத்தாளர்களுக்கும், பத்திரிகைக் குழுவினருக்கும், ஏனைய வழிகளில் உதவி நல்கிய பேருள்ளங்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் செய்ந்நன்றியுள்ளவனாக நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளேன்.

**தா.கோபாலகிருஸ்ணன்.** எம்.ஏ.<br>
கலாசார பேரவை<br>
மண்முனை தென் எருவில்பற்று<br>
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அணிந்துரை

வயலும் வயல் சார்ந்த வெளிகளையும், நிலத்தை மறைக்கும் வெற்றிலை தோட்டங்களையும் தன்னகத்தே கொண்ட அழகிய பதியாம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்தின் பாரம்பரிய கலைகளையும், மரபுகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் மறந்து விடாது அவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் முயற்சியில் பிரதேச கலாசார பேரவையினால் வருடாவருடம் கலாசார விழாவும் அதனை மேலும் சிறப்பிக்கும் வகையில் எழுவான் சிறப்பு மலரும் வெளியிடப்படுகின்றது. இக் கலாசார விழா எழுவான் சிறப்பு மலரானது இலைமறை காயாக இருக்கும் திறமைசாலிகளையும், அவர்களது அறிவு மற்றும் படைப்பாற்றல்களையும் வெளிக்கொண்டு வருகின்ற ஓர் ஆவணமாகும். கலைஞர்களின் ஆக்கங்களை சுமந்து வரும் இம் மலர் பல அம்சங்களை தாங்கி வருகின்றது. கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், இலக்கிய விழா போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களின் விபரங்கள், கௌரவிக்கப்படும் மூத்த, இளங் கலைஞர்களின் விபரங்கள் எனப் பல அம்சங்கள் இம் மலரில் இடம் பெறுகின்றன.

இப் பிரதேசத்தில் கலைத்துறைக்கு பங்காற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வானது இவ் விழாவின் சிறப்பம்சமாகும். கடந்த 2018ம் ஆண்டு களுதாவளை கலாசார மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் கலாசார விழாவும் எழுவான் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெற்றது. இவ் விழாவில் மூத்த கலைஞர்கள் ஐவரும், இளங்கலைஞர்கள் இருவருமாக ஏழுபேர் கௌரவிக்கப்பட்டனர். அதே போல் 2019 இலும் கூட இக் கலைஞர் கௌரவிப்பு இடம்பெற்றிருந்தது. தொடர்ச்சியாக 2021 இலும் நாடகம், கிராமிய இசை, சமயம் (அறநெறி), சிற்பம், பாரம்பரிய வைத்தியம் போன்ற துறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய ஐந்து மூத்த கலைஞர்களும், ஆக்க இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய இரு இளங்கலைஞர்களுமாக ஏழுபேர் கௌரவிக்கப்படுவது மகிழ்ச்சியானது.

மண்முனை தென் எருவில்பற்று கலாசார பேரவையானது கலை இலக்கிய கலாசார துறையை மேம்படுத்தும் பொருட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மூத்த, இளங் கலைஞர்களை பாராட்டி கௌரவிப்பதை நோக்காக கொண்டு ஏற்பாடு செய்யப்படும் கலாசார விழாவானது மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார முன்னேற்றத்திற்கும், கலைஞர்களின் மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருப்பதுடன் சிறந்த பண்புடைய கலாசார ஒழுக்கமுடைய சமூகத்தை உருவாக்குவதற்கு இவ்விழா ஏதுவாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

இவ் விழா சிறப்பு மலர் வெளியீட்டிற்காகவும் கலாசார பணிகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மலர் வெளியீட்டு குழுவினர், எழுவான் சிறப்பு மலருக்கான ஆக்கங்களை வழங்கிய பிரதேச கலைஞர்கள், விழாவினை சிறப்பாக நடாத்திய பிரதேச கலாசார பேரவையினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்**
பிரதேச செயலாளரும், கலாசார பேரவைத் தலைவரும்,
மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை தென் எருவில்பற்று

## பிரதேச கலாசார கீதம்

மண்முனை தென் எருவில்பற்று
மக்கள் சுற்றம் தொழில் வளம்
எண்முனையுஞ் சூழ்கவென்று
இறைவணக்கம் செய்திடுவோம்
கண்நிறை கலை வளம்
பொன்வளம் புகழ்வளம்
விண்வரை நிரந்தரம்
வீங்கி வாழ வேண்டுவோம்.....

குருக்கள்மடம் எருவில் செட்டி
பாளையம் களுதாவளை
குருமண்வெளி களுவாஞ்சி
குடி மகிழூர் ஒந்தாச்சி
மடத்துடன் மாங்காடு
துறைநீலாவணை கல்லாறு
செழுத்த தேற்றாத்தீவுப்
பிரதேசம் ஒன்றாய் வாழ்கவே....

பொங்கு தங்க மண் விளைந்த
துங்க நென்மணிக் கதிர்
எங்கு மெங்கள் கொடைகளென்று
ஏந்தி நிற்கும் வயல் வளம்
தங்கு மெழில் மண்முனை தென்
எருவில் பற்றிலங்கையின்
மங்கிடாத கண்ணொளியாய்
வளரவேண்டும் வாழ்கவே...
வாழ்கவே.... வாழ்கவே

வானுயர்ந்த தென்னை மரத்
தோப்பு வாழை பலவினம்
தேனிறைந்த மாவினம்
தித்திக்கும் பலாவினம்
பாணிறைந்த கால் நடைப்
பட்டி கோழிப் பண்ணைகள்
ஊண் விளைந்த வளங்களாக
ஓங்கிப் பரவி வளர்கவே

செஞ்செழிப்பு வதனமும்
சிவந்த இகழ்ப் பதனமும்
தந்து நிற்கும் வெற்றிலைத்
தோட்டம் இங்கு தனிக்கொடை
வந்தவரை வாழவைக்கும்
மரக்கறி வகைத் தோட்டமும்
கொண்ட எங்கள் மண்வளம்
குறைவிலாது வாழ்கவே
வாழ்கவே... வாழ்கவே...

ஊரி பாட நண்டு நடனம்
ஆடி மகிழும் கடல் வளம்
சேர வாழும் வலைஞர் வெள்ளை
நீறு தரும் விளைஞர்கள் வெள்ளை
காரியக்காண் பார்வையுள்ள
கருணையின் பொற்கொல்லர்கள்
சீறிய சிற் றூழியர்கள்
சிறந்து விளங்க வாழ்கவே

ஆசிரியச் சேவகர் நெல்
ஆலை கல்விச் சாலைகள்
அருமை நெசவுச்சாலை பல
கருமம் உயர் கழகங்கள்
மாசில் மேசன் தச்சன் மேலும்
வகை வகை தொழிலாளர்கள்
தேசம் போற்ற நன்மை பெற்றுத்
திகழ வேணும் வாழ்கவே.
வாழ்கவே.... வாழ்கவே....

கருமம் ஓங்கத் தருமம் ஓங்கக்
காரியங்கள் ஆற்றிடும்
பிரியமான பிரதேச
செயலகமும் ஓங்கவே
கருணையுள்ளம் கடவுளுள்ளம்
திறமைச் சேவை நலவுளம்
பெருமையோடு எங்கள் மண்ணில்
பெருக என்று வாழ்கவே...

தண்டமிழும் சகல மதப்
பண்பழகும் கொண்ட நம்
பண்டையோர் வரன் முறையை
அண்டி யடி ஒற்றியே
என்றுமுள இன்பநிலை
நின்று பொருள் கொண்டு நல்
ஏற்ற வாழ்வில் இனிமை நிலவ
இறைவனருள் வேண்டுவோம்....
வேண்டுவோம்... வேண்டுவோம்....

மண்முனை தென் எருவில்பற்று
மக்கள் சுற்றம் தொழில் வளம்
எண்முனையுஞ் சூழ்கவென்று
இறைவணக்கம் செய்திடுவோம்
கண்நிறை கலைவளம்
பொன்வளம் புகழ்வளம்
விண்வரை நிரந்தரம்
வீங்கி வாழ வேண்டுவோம்

ஆக்கம் : **எஸ். இளையதம்பி** பெரியகல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார பேரவை
## உறுப்பினர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| **தலைவர்** | :- | திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்<br>பிரதேச செயலாளர் |
| **உப தலைவர்** | :- | திரு. க. கயல்வேந்தன்<br>கவிஞர் |
| **செயலாளர்** | :- | திருமதி. ராதிகா கருணாகரன்<br>கலாசார உத்தியோகத்தர் |
| **பொருளாளர்** | :- | திருமதி. அருந்ததி சிவரெத்தினம்<br>முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| **கணக்காய்வாளர்** | :- | திரு. சா. விக்னராஜா<br>கணக்காளர் |
| **இணைப்பாளர்** | :- | திருமதி. சத்தியகௌரி தரணிதரன்<br>உதவி பிரதேச செயலாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| கலாபூசணம் தேனூரான் தருமரெத்தினம் | - | கலைஞர் |
| கலாபூசணம் செ.டானியல் | - | ஓவியர் |
| திரு. தா. கோபாலகிருஸ்ணன் | - | எழுத்தாளர் |
| திரு. நா. நாகேந்திரன் | - | எழுத்தாளர் |
| திருமதி. றூத்சந்திரிகா சுரேஸ் | - | எழுத்தாளர் |
| திரு. க. ரவிப்ரியா | - | எழுத்தாளர் |
| திரு. மா. திருநாவுக்கரசு | - | கலைஞர் |
| திரு. க. விஸ்வலிங்கம் | - | எழுத்தாளர் |
| திரு. க. சோமசுந்தரம் | - | கலைஞர் |
| திரு. க. சிவபாதம் | - | கலைஞர் |
| திரு. த. ரமீஸ்குமார் | - | கவிஞர் |
| திரு. ந. கனகரெத்தினம் | - | கவிஞர் |
| திரு. க. கௌசிகன் | - | எழுத்தாளர் |
| செல்வி. ப. அனோஜா | - | கவிதாயினி |
| திரு. வ. சக்திவேல் | - | ஊடகவியலாளர் |
| திருமதி. விஜயலக்சுமி இராமச்சந்திரன் | - | ஓய்வு பெற்ற ஆசிரியர் |
| திரு. ச. செல்வபிரகாஸ் | - | தலைவர், தேனுகா கலைக்கழகம் தேற்றாத்தீவு |
| திரு. மா. புருசோத்மன் | - | தலைவர், கலைக்கமல் கலாமன்றம் |
| திருமதி. சுஜீவா விக்னேஸ்வரன் | - | தலைவர், பரதாஞ்சலி நாட்டியாலயம் |
| செல்வி. சி.சரணியா | - | தலைவர், பரதகலாஞ்சலி நாட்டியாலயம், |
| திரு. பொ. சிவகுமார் | - | தலைவர், ஐங்கரா கலைக்கழகம் |
| திருமதி. காமினி இன்பராசா | - | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. தெ. உதயசுதன் | - | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஏ. விஜிதரன் | - | கிராம உத்தியோகத்தர் |
| திருமதி. குமுதினி பரமசிவம் | - | இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. பக்தகௌரி மயூரவதனன் | - | கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ப. ராஜதிலகன் | - | கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. வ. பிரசாந்த் | - | கள இணைப்பாளர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவானின் உள்ளே...


1. பிரதேச பண்பாட்டம்சங்களின் இன்றைய நிலை
2. தமிழர்களின் பாரம்பரிய கொம்பு வழிபாடு
3. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கண்ணகி வழிபாடு
4. அருகி வரும் கிராமிய நாடகம் மட்டக்களப்பு மகிடிக் கூத்து
5. நாட்டார் பாடல்களில் கிராமிய மக்களின் உணர்வுகள் வெளிப்பட்டுள்ள விதம்
6. எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களில் ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றங்கள்
7. நோயற்ற வாழ்விற்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படும் மூலிகைகள்
8. எமது சுகத்தை நாமே சம்பாதிக்க வேண்டும்
9. வாழ்வை வளமாக்கும் வாஸ்து
10. காசி என்று இந்து மக்களால் போற்றி அழைக்கப்படும் வாரணாசி தலம் பற்றிய ஒரு விளக்கம்
11. மறைந்து போகும் முதுசொம்
12. அழகான கூந்தலுக்கு யோகா
13. பழமொழிகளும் உவமைத் தொடர்களும்
14. தம்பி உழைக்கிறான் - சிறுகதை
15. மஞ்சளின் மகிமை
16. உழைப்பே உயர்ச்சி..! - கவிதை
17. விடியுமா...? - கவிதை
18. தோலுக்கு மினுக்குமில்லை...! - கவிதை
19. இழு சுருக்காகுமோ நம் நட்பு - கவிதை
20. மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்தில் புகழ் பூத்த ....
21. 2019இல் நடைபெற்ற கலாசார, இலக்கிய விழாவின் போது ...
22. மண்முனை தென் எருவில்பற்று கலாசார பேரவையினால் ...
23. பிரதேச இலக்கியவிழா பெறுபேறுகள்
24. பிரதேச இலக்கிய விழா - 2020/2021
25. நன்றி நவிலல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச பண்பாட்டம்சங்களின் இன்றைய நிலை



### முகவுரை

ஒரு இனத்தின் நடத்தைகளை அடிப்படையாக வைத்து வாழ்க்கையை நடத்தும் முறைகளே பண் பாடுகளாகும். இது முந்தைய சந்ததியில் இருந்து அடுத்த சந்ததி பெற்றுக் கொள்ளும் ஒரு செல்வமாகும். நடத்தைகளை பண்பாடு அல்லது கலாசாரம் என்று சொன்னாலும் நீர் எனும் போது அது நன்னீரையே குறித்து நிற்பது போலவே நடத்தைகளே பண்பாடு என்று போற்றுவதே பல அறிஞர்களினதும் கருத்துமாகும்.

ஆனால் தற்காலச் சூழலில் பல இன மத கலாசார நம்பிக்கைகளையும் அவற்றின் மரபணுக்க ளையும் பின்பற்றுவோர் எமது பிரதேசத்தில் வாழ்வதாலும் இன்றைய விஞ்ஞான கல்வி வளர்ச்சி யாலும் நடை உடை பாவனைகளாலும் மக்களின் வாழ்க்கை தரத்தில் ஏனைய நாட்டு கலாசாரங்களும் சற்று வேரூன்றி வருவதுடன் அதனால் பண்பாடுகள் மாற்றமடைந்தும் அருகிக்கொண்டும் வருவதையே உணரமுடிகிறது.

### பண்பாட்டைப் பேணுவதன் அவசியம்

ஒரு இனத்தை அடையாளப்படுத்துவது அவ்வினத்தின் பண்பாடுகள்தான். பெரும்பாலும் தமிழ் இனத்தையே எமது பிரதேசம் உட்கொண்டி ருந்தாலும் இங்கே பல மதத்தினர் வாழ்வதனால் அவரவருடைய மத நம்பிக்கைகள் மரபுகள் கலாசாரங் களின் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப் படுவதுடன் கலப்புத் திருமணங்களினூடாகவும் வெளிநாட்டு உடை பாவனைகளின் மோகம் காரண மாகவும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன

எமது நடத்தைகள் அனைத்திலுமே பண்பாடு தங்கியுள்ளது சிறப்பாக எமது பெயர், உடை, உணவு, உறையுள், உபசரிப்பு முறை, உறவு முறை, உறவாடும் முறை, பெரியோரைக் கனம் பண்ணும் விதம், நமது சடங்குகள், விழாக்கள் ஒழுக்க முறைகள் அனைத்தி லும் பண்பாடு தங்கியுள்ளது.

### திருமணம் சம்பந்தமான பண்பாடுகள்

எமது வாழ்வில் திருமணம் முக்கியமான ஒன்றானாலும் அதில் தாலி கட்டுதல் மிக பிரதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. தாலி கட்டும் போது எவ்வளவு மாற்றத்தை இன்று காண்கின்றோம்.

கணவனே மனைவியின் கழுத்தில் தாலி கட்டுவதே முறையாகும். அத் தாலிக் கொடியை ஏதோ வொரு வகையில் பணம் பெற்று அவரே செய்கின்றார். பின்னர் தனது வீட்டிலும் சில மணித்தியாலங்கள் வைத்திருக்கின்றார்கள்.

ஆனால் தாலி கட்டும் போது மண மேடையில் மணமகன் தாலிக் கொடியை பிடிக்க பின்னால் நிற்கும் பெண்களே சுரையை பூட்டுகின்றனர். இது உண்மையில் கணவன் தானா தாலி கட்டினாரா என்பதை உணர்த்தவில்லையா? தானே கொடியை செய்து தனது வீட்டில் வைத்திருக்கும் போது கொடியின் சுரையை எப்படி பூட்டுவது என்ற பயிற்சியை வீட்டில் வைத்து எடுத்திருந்தால் கொடி கட்டும் போது தவறி விழுந்தால் அவமானம் அல்லது கெட்ட சகுனம் என நம்பி பெண்களைக் கொண்டு சுரையை பூட்டுவது சிறந்த பண்பாடா? சற்று சிந்தியுங்கள்.

அத்துடன் ஏன் தாலி கட்ட வேண்டும் என்று சிந்திக்கின் றோமோ? தாலி கட்டும் போது 'ஓ பாக்கியவதியே நான் இந்த மாங்கல்யமாக எக்காலமும் உன்னுடன் இருப்பேன். நான் சிரஞ்சீவி யாக வாழ்வதற்கு நீ நூறாண்டு வாழ வேண்டும். நாம் இனி இரு வரல்ல ஒருவர். உனக்கும் எனக்கும் இந்த மாங்கல்யம் எந் நேரமும் இதை நினைவூட்டிக் கொண்டி ருக்கட்டும்.' என்று மணமகன் வாழ்த் திக்கட்ட சபையில் உள்ளவர்களும் இதையே நினைத்து மலர் அட்சதை தூவி வாழ்த்துகின்றனர்.

**மாங்கல்யமே மணமகளின் உயிர்.**

மேலும் தாலி கட்டிய பின் பால் பழம் கொடுப்பது ஏன் என சிந்தித்தால் நாம் இருவரும் பாலும் பழமும் போல உள்ளத்தாலும் உடலாலும் கலந்து ஒருவரை யொருவர் பேணிக்காத்து இந்த பால் பழம் போல கலந்து வாழ்வோம் என நினைத்து ஒருவருக்கொருவர் ஊட்ட வேண்டும். இதன் போது இனி மேல் எங்கள் வாழ்வு இருவருக்குமே. அந்தரங்க வாழ்வாக வேறு நபர்களின் தலையீடு இன்றி இருக்க வேண்டும் என்பதற்காகவே மறைத்துப் பிடிக்கப்படுகின்றது. அது கூட சரியாகத்தான் இடம் பெறுகின்றதா?

மணவறையில் கணவனின் ஆடை எப்படி இருக்க வேண்டும் எனில் பட்டு வேட்டி, தேசிய சால்வை, தலைப்பாகை அணிந்து இருப்பதுதான் தமிழர் பண்பாடு. ஆனால் மணமகனோ சர்வானி போன்ற வேற்று இன உடைகளை அணிவது வெட்கப் பட வேண்டாமா?

மேலும் திருமண நிகழ்வொன்றில் மண மக்களை அறுகரிசி போட்டு வாழ்த்துவது எமது பிரதேச கடவுள் வழிபாட்டுடன் இணைந்த ஒரு பண் பாடாகும். ஏனெனில் அறுகரிசியில் முனை உடையாத பச்சரிசியும், மஞ்சளும், அறுகும் கலந்திருக்கும். இதில் அரிசிதான் எமது வாழ்வுக்கு மூலாதாரமான உணவு மஞ்சள் மங்கலத்தையும், தூய்மையையும் தருவது. அறுகு விரைவாக வளரக் கூடிய ஒரு பூசைப்பொருள் இதனால் நீங்கள் எப்போதும் உண வுக்கும் குறைவில் லாமல் மற்றவர்களையும் வாழ வைத்து மஞ்சள் போல மாங்கல்யமாய் புனிதமாய் அறுகு போல சந்ததி விருத்தி பெற்று வாழ்வீர் கள் என நினைத்துதான் வாழ்த்துவதும் ஆனால் இம்முறை மாறி அரிசியை எறியும் நிலைக்கு மாறியுள் ளது என சிந்திக்கிறோமா?

மேலும் அம்மி மிதித்து அருந்ததி காட்டுவதும், கண்ணாடியில் இருவரையும் பார்க்கச் செய்வதும் கூட பிரதேச பண்பாடு தான். நாம் இருவரும் கற்பு நெறியில் தவறாது வாழ்வோம் என்ப தையும் இருவரது உள்ளங்க ளும் இத்துடன் ஒன்றாய் இணைந்து விட்டது என்ற கருத்தையும் வெளிக்காட்டவே அவை செய்யப்படுகின்றது.

இத்துடன் எமது சகல நிகழ்வு களின் போதும் மங்கல விளக் கேற்றும் வேளையில் இறைவனை நினைத்து எல்லோரும் எழுந்து நிற்கவும் செய்வதுடன் சகலரும் இறை சிந்தனையுடன் நிற்பதே பண்பாடு. ஆனால் கடவுள் வணக்கத் திலும் சிலர் சப்பாத்துடன் நிற்பதைக் காண்கின்றோம். இதனால் தமிழ் பண்பாடுகள் குறிப்பாக எமது பிரதேச

> **"தாலி கட்டும் போது 'ஓ பாக்கியவதியே நான் இந்த மாங்கல்யமாக எக்காலமும் உன்னுடன் இருப்பேன். நான் சிரஞ்சீவியாக வாழ்வதற்கு நீ நூறாண்டு வாழ வேண்டும். நாம் இனி இருவரல்ல ஒருவர். உனக்கும் எனக்கும் இந்த மாங்கல்யம் எந் நேரமும் இதை நினைவூட்டிக் கொண்டிருக்கட்டும்.' என்று மணமகன் வாழ்த்திக்கட்ட சபையில் உள்ளவர்களும் இதையே நினைத்து மலர் அட்சதை தூவி வாழ்த்துகின்றனர்."**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகள் எப்படி அருகிக்கொண்டு வருகின்றன என்பதைச் சிந்திப்போமா?

## சமூக பண்பாடுகள்

இதன் கீழும் பிறப்பு முதல் இறப்பு வரை பல தனித்துவப் பண்புகள் காணப்பட்டன. இவை பற்றி பல நூல்களில் காண முடிகின்றது. சில உதாரணங்களாக வீட்டில் பிறப்பின் போது ஆண் பிள்ளை என்றால் வீட்டிற்கு மேலாக உலக்கை எறியும் வழக்கமும், பெண் பிள்ளை என்றால் விளக்குமாறு எறியும் வழக்கமும் இருந்தது. ஆனால் இன்று பெரும்பாலும் வைத்தியசாலைகளிலேயே குழந்தை பெற்றெடுக்கும் முறைமைகள் வளர்ச்சி கண்டுள்ளதால் இவை அருகி விட்டன என கூறலாம். எனினும் குழந்தை பிறந்த பின் சாஸ்திரம் கேட்டல், பெயர் வைத்தல், பத்தியச் சோறு தாய்க்கு கொடுத்தல் என்பன இடம் பெறுவதும் பிள்ளைக்கு காத்தனம் ஏற்படும் போதெல்லாம் இரும்பு போடுதல், திருநீறு சாத்துதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல் போன்றவைகளும் இரவில் குழந்தையை வெளியில் கொண்டு செல்வதனால் கரித்துண்டொன்றை காதில் வைத்துக்கொண்டு செல்வதும் முறையாகும்.

மேலும் குழந்தை பிறந்து முப்பதாம் நாள் மருங்கைக் கொண்டாட்டம் நடைபெறும் போது தாய் மாமன் உட்பட உறவினர்களை அழைத்து காது குத்தி, தொட்டில் கட்டி, அரைஞாண் பூட்டி கொண்டாடுவதோடு குழந்தைக்கு அன்று தான் பெயரும் சூட்டுவார்கள். இத்துடன் மொட்டை அடிப்பதும் வழக்கம்.

குழந்தைக்கு பல் முளைக்கும் போது அதைக் கண்டவுடன் பல்லுக்கொழுக்கட்டை சொரிவதோடு அதைச் சிறப்பாகவும் நடத்துவதுண்டு. இதை தவிர மக்களிடையே மனையடி சாஸ்திரம் பார்த்தல், மை போட்டுப்பார்த்தல், சித்த வைத்தியம் செய்தல், மந்திரக் கலையை பின்பற்றுதல், விஷக்கடி வைத்தியம் பார்த்தல் ஆகியவையும் பண்பாட்டில் ஒவ்வொரு முறைப்படியே காணப்பட்டன.

இவை போலவே பெண் குழந்தை பூப்படையும் காலத்தில் இடம் பெறும் விழாக்கள். மரண சடங்குகள், ஏனைய வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் கிராமிய வழி முறைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் ஏற்பவே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இவை அனைத்திலும் இன்று பாரிய மாற்றங்கள் காணப்படுகின்றன.

## பிரதேசத்தின் பாரம்பரிய கலைகள்

இவை தனித்துவமானவை, கலை இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த வகையில் மேற்கொள்ளப்படுவனவாக உள்ளன. இவற்றுள் மிக சிறப்பானவைகளாக வசந்தன் கூத்து, பறை மேளக்கூத்து, மகுடிக்கூத்து, குரவைக்கூத்து, கும்மி, கொம்புமுறி, கரகம், காவடி வடமோடி தென்மோடி நாட்டுக்கூத்துக்கள் என்பவைகளும் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் எப்படி ஆரம்பித்து அரங்கேற்றம் செய்யப்பட்டு மேடையேறுகின்றன என்பவைகள் எல்லாம் மக்களிடையே தங்களின் பண்பாடுகளை வெளிப்படுத்துவனவாகவே அமைந்திருந்தன.

ஒவ்வொரு நிகழ்விற்குமான மேடை அமைத்தல், ஆரம்பம், பங்குபற்றுவோர் விபரம் அரங்கேற்றம் என்பவைகள் எல்லாம் நமது பிரதேச பண்பாட்டம்சங்களில் கலந்திருந்தன. இவை பற்றி பலரது ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவை தவிர கிராமியக்கவிகள் பாடும் இசை முறைமை போன்றவைகளுடன் கும்மிப்பாடல், ஊஞ்சல் பாடல், மீன்பிடி பாடல்கள் போன்றனவும் பல விதமான பாரம்பரிய விளையாட்டுக்களும் காணப்பட்டன. இவைகள் எமது பிரதேச பண்பாட்டம்சங்களாகவே நிலவின.

### மாற்றத்திற்கான காரணங்கள்

1. இன்றைய கல்வி முறை வளர்ச்சி
2. சகல இனத்தவர்களினதும் பண்பாடுகளால் மக்கள் ஈர்க்கப்பட்டமை.

ஏனைய பண்பாட்டம்சங்கள் இலேசானதாகவும் இருப்பது குறிப்பாக ஏனைய இனங்களின் உடை முறைமைகள் எமது பிரயாணத்துக்கு இலகுவானவைகளாகவும் இருப்பதே நாம் அந்நியர் ஆட்சியின் போது போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் நிருவாகக் கட்டமைப்பின் கீழ் வாழும் போது அவர்களது கல்விமுறை வளர்ச்சியாலும் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியாலும் நாம் உயர்வடைந்தது மட்டுமன்றி பன்நாட்டுப் பண்பாடுகளையும் கலந்து இலேசான முறைகளில் நம்பிக்கைகளையும் வாழ்க்கை முறைகளையும் அமைத்துக் கொண்டுவிட்டோம். இவை பிரயாணத்திற்கும் தொழிற்கடமைகளின் போது பணிபுரிவதற்கான வழிமுறைகளாகவும் அமைந்துள்ளன. இதனால் இம்மாற்றத்தை முழுமையாக பிழை என்று கூறவும் முடியாது.

## முடிவுரை

இருப்பினும் எமது பிரதேச பண்பாடுகளை மக்கள் பாதுகாத்து பேணி இனிவரும் சமுதாயத்துக்கும் இட்டுச்செல்ல சூழ்நிலைக்கேற்ற சில நடவடிக்கைகளை எடுப்பதற்கு எமது பிரதேச கலாசார பேரவையினரும் ஆலோசகர்களும் நன்கு சிந்தித்து உரிய நடவடிக்கைகளை வருடாவருடம் சிறப்பாக எடுத்து வருவது போற்றத்தக்கதாகும்.

கலாபூசணம் சைவப்புலவர்
**இரத்தினம் கோபாலப்பிள்ளை**
தேற்றாத்தீவு வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர்களின் பாரம்பரிய
# கொம்பு வழிபாடு


**மீ**ன்பாடும் தேனாட்டின் பண்டையகால பாரம்பரிய வழிபாடுகளில் ஒன்றாகவும், பக்திநெறி ததும்பும் விளையாட்டுக்களில் ஒன்றாகவும், விளங்குவது சில இடங்களில் கொம்புமுறி என்றும், சில இடங்களில் கொம்முறி வழிபாடு என்றும் கருதப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை, தேற்றாத்தீவு, மண்டூர், மகிழடித்தீவு, சித்தாண்டி வந்தாறுமூலை போன்ற இடங்களிலும் பழங் காலத்தில் இவ்வழிபாடு நடந்ததாகவும் முதியோர்கள் கூறுகின்றனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலைக் கிராமத்தில் அங்கு இறுதியாக கடந்த 2016 ஆம் ஆண்டு மழை வேண்டி இவ்வழிபாடு இடம்பெற்ற பின்னர் மழை பெய்ததாகவும், அக்கிராமத்து பெரியோர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியான மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் இறுதியாக 1997 ஆம் ஆண்டு இவ்வழிபாடு நடைபெற்றிருந்தது. பின்னர் இடைப்பட்ட அசாதாரண சூழல்கள் காரணமாக நடைபெறாமல் போனதன் பின்னர், 17 வருடங்கள் கழிந்த பின்பு கடந்த 2014 ஆம் ஆண்டு இவ் வழிபாடு மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தது.

கொம்புமுறி வழிபாடானது, கண்ணகி வழிபாட்டோடு தொடர்புபட்டது, கொம்புமுறி வழிபாட்டின் தோற்றம் கண்ணகி வரலாற்றோடு தொடர்புபடுத்தப் படுகின்றது. நீதி தவறிக் கோவலனை கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கியும் மதுரை மாநகரினை எரியூட்டியும் சீற்றம் தணியாத கற்புக்கரசி கண்ணகியின் சீற்றத்தை தணித்து அவளைக் குளிர்விப்பதற்காக மதுரை நகரின் இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் வடபுறம் இருந்தோர் வடசேரி என்றும், தென் புறம் இருந்தோர் தென்சேரி, என்றும் பிரித்து மஞ்சள் கொம்பெடுத்து முதன் முதலில் கொம்பு விளையாடினர் எனக் கூறப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> நீதி தவறிக் கோவலனை கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கியும் மதுரை மாநகரினை எரியூட்டியும் சீற்றம் தணியாத கற்புக்கரசி கண்ணகியின் சீற்றத்தை தணித்து அவளைக் குளிர்விப்பதற்காக மதுரை நகரின் இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் வடபுறம் இருந்தோர் வடசேரி என்றும், தென் புறம் இருந்தோர் தென்சேரி, என்றும் பிரித்து மஞ்சள் கொம்பெடுத்து முதன் முதலில் கொம்பு விளையாடினர்

இதனைப் பின்பற்றி கொம்புமுறி வழிபாடு ஒரு கண்ணகி வழிபாட்டு முறையாக பழங்காலம் முதல் மட்டக்களப்பு மக்கள் போற்றி வந்துள்ளனர். புரட்டாதி, ஐப்பசி, மாதங்களில் ஒரு பருவகால வழி பாடாக இவ் வழிபாடு காலாகாலமாக நடாத்தப்பட்டு வருகின்றது.

பழைய கிராமங்களிலும், மக்கள் உருவாகிய புதிய கிராமங்களிலும், அவை பின்பற்றிய சில இடங்களிலும் கார்த்திகை, பெரும்போகம், பருவமழை பெய்கின்ற பொழுது கொம்புமுறி வழிபாடு இடம் பெற்றிருந்தமையை அறியக்கூடியதாகவுள்ளது.

இதைவிட நோய் நொடி இன்றியும், மழை வேண்டியும், செல்வம் செழிப்புற்று விளங்கவும் கண்ணகிக்கு நேர்த்தி வைத்து கொம்புமுறி வழிபாட்டு மரபு இருந்து வந்துள்ளது.

இங்கு தந்தை வழியிலே சேரி(வாரம்) பிரித்துக் கொள்கின்றனர். தந்தை வடசேரியாயின் பிள்ளைகளும் அச்சேரியாய் இருப்பர். தாய் மாற்றுச்சேரியில் இருப் பதுவும் உண்டு.

கொம்பு வழிபாட்டை பெருவிழாவாக கொண் டாடுவதற்கு இவ்வழிபாட்டில் இடம் பெறும் ஏனைய நிகழ்வுகள் முக்கிய காரணங்களாக அமைகின்றன. அவையாவன:-

- போர்த்தேங்காய் அடித்தல்
- ஆரம்ப நடவடிக்கை
- கொம்பு நேர்தல்
- வாரம் பொரிதல்
- வசந்தன் ஆடல்
- ஏடகம் கட்டி ஊர் சுற்றுதல்
- கொம்புக்கு மந்திரக்கிரியை செய்தல்
- கொம்பு தட்டெடுத்தல்
- வசை பாடல்
- குளிர்த்தி ஆடல்

## கொம்பு விளையாட்டு பொருட்கள்

### கொம்பு

இங்கு வளைவான "ட" வடிவில் அமைந்த "கம்பு " கொம்பு எனப்படும். இதற்கு கரையாக்கு, விளினை, விடத்தல் ஆகிய மரங்களினுடைய வேரோடு சேர்ந்த தண்டுப்பகுதி பயன்படுத்தப்படும். கொம்புகளை இம்மரங்களில் இருந்தும் இவற்றின் வேர்களில் இருந்தும் மரமும் வேரும் இணைந்தவையாகவும் வெட்டியெடுப்பர். கொம்புகளை வெட்டும் போது மேற்பகுதி அல்லது தலைப்பகுதி ஒரு அடி வரை நீண்டதாகவும் கீழ்ப்பகுதி அல்லது கடைக்கால்ப் பகுதியை ஒன்றரை அடி நீளம் வரை அறுத்தெடுப்பர். கொம்பின் மேற்பகுதியை தலையென்றும் முடக்குப் பகுதியை கழுத்து என்றும் அதற்கு கீழ் கொம்புகள் பொருந்துகின்ற பகுதியை மார்பென்றும் கீழ்பகுதியை கடைக்கால் என்றும் குறிப்பிடுவர். கொம்புகளை தெரிந்தெடுக்கும் போது தென்சேரிக் கொம்பு செங்கோண மாகவும், வடசேரி கொம்பு சற்று விரிந்த விரிகோண மாகவும் இருக்கக் கூடியதாக பார்த்துக் கொள்ளுவர்.

### பில்லி

கொம்பு வழிபாட்டின்போது கொம்புடன் இணைத்து வரியப்படும் தடி பில்லி எனப்படும். இதற்கு கரையாக்கு, முதிரை, விளினை, பாலை வெள்ளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்காலி முதலிய பாரம் கூடிய மரங்களை பயன் படுத்துவர். ஏறத்தாழ 10 அங்குலம் சுற்றளவுள்ள கம்புகள் இதற்கு பொருத்தமானவை. இதனோடு இணைக்கப்படும் அடையைக் காட்டிலும் இது இருபுறமும் 6 அங்குலம், வரையும் நீளம் கூடியதாக விருக்கும். பொதுவாக 4 அடி அல்லது 4.25 அடி நீளமானதாக பில்லிகள் அமைந்திருக்கும்.

### அடை

பில்லியுடன் இணைத்து கட்டப்படும் கம்புக் கட்டு "அடை" எனக்கூறப்படும். இது தாய் அடை, முதலாம் அடை, இரண்டாம் அடை என கொம்பின் பருமனுக்கமைய பெரிதாகிச் செல்லும் தாயடைக்கு 4 அங்குலம், 4 அங்குலம் அளவிலான நான்கு நீளக்குற்றிகள் சேர்த்துக் கட்டப்படும். சுற்றடைகளுக்கு சுமார் 10 அங்குலம் அளவான உருண்டைக் கம்புகள் அடுக்கப்படும் அடை பொதுவாக 3.5 அடி நீளம் கொண்டதாக அமையும். அளவில் பெரிய கொம்புகளுக்கு இதன் நீளம் மேலும் அதிகரிக்கலாம். பொதுவாக அடைக்கு முதிரை, வெள்ளைக் கருங்காலி, காட்டுக் கொக்கட்டி, வெடுக்குநாறி முதலிய பாரமான மரங்களை தேடியெடுப்பார்கள்.

### ஆப்பு

தெகிழைக்கொடியால் வரிந்து கட்டப்பட்ட அடையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒரு பக்கம் கூராக்கப்பட்ட ஆப்பினை இடையில் புகுத்தி ஏற்றுவர். இத்தகைய ஆப்புக்கு புளியை அல்லது மயிலடிக் குருந்தை மிகப் பொருத்தமான தென்பர். இதனை அடித்து ஏற்று வதற்கு முதிரை, திருக்கொன்றை, பாலை முதலிய பாரமான மரங்களைக் கொண்ட தட்டுக் கட்டைகளைப் பயன்படுத்துவர்.

### நெஞ்சடிப்பலகை

பில்லியுடன் இணைத்து தாயடை கட்டப்பட்ட பின் பில்லியின் மேற்புறமாகவும் அரிப்பின் கீழ் புறமாகவும் செருகப்படும் பலகை நெஞ்சடிப்பலகையாகும். இது ஆறங்குல அகலம் கொண்டதாகவும் அடையின் அளவு நீளம் கொண்டதாகவும் இருக்கும் பின்புறம் இரண்டங்குலம் தடிப்பாகவும் மண் தள்ளப்படும் பக்கம் கால் அங்குல தடிப்பு கொண்டதாகவும் இப்பலகை கூம்பிச் செல்லும். இதற்கு முதிரைப் பலகையை உகந்ததாக கொள்வர்.

### தாய்மரம்

கொம்பு விளையாடுவதற்கு பொருத்தமான மரத்தைப் பொறுத்து இதற்குரிய இடம் தீர்மானிக்கப் படும் கோயில் வீதியில் பொருத்தமான மரம் இருந்தால் அதற்கே முன்னுரிமை வழங்கப்படும். இல்லையேல் நாற்சந்திகளில், வயல்வெளிகளில் வேறு பொது இடங்களில் உள்ள பொருத்தமான மரங்களில் கொம்பு கட்டுவர். கொம்பு கட்டுகின்ற மரத்தை தாய் மரம் என்றழைப்பது வழக்கம். ஆலை, அரசை, வம்மி, வாகை, காட்டுத்தேங்காய், மாறா இலுப்பை முதலிய பலவித மரங்களிலும் கொம்பு கட்டுவதை அறியக் கூடியதாகவுள்ளது. இம்மரம் அடி சுற்றுக்கு சுமார் 9 அடி குறைவில்லாமல் இருப்பது அவசியம். மரத்தில் மேற்பகுதி செவ்வாய்க்குற்றி சரித்து வைக்க கூடிய அளவு ஏழு அல்லது எட்டு முழம் உயரத்தில் கிளைகள் விசிறியிருத்தல் வரவேற்கத்தக்கவை.

### செவ்வாய்க்குற்றி

பனை, தென்னை. காட்டுத் தேங்காய் மரத்தின் அடிப்பகுதியை தலைகீழாக நாட்டி செவ்வாய்க் குற்றியாக பயன்படுத் துவர். பத்து விரலிடை அளவிற் குட்பட்ட கொம்புகளுக்கு பதினொரு முழமும் அதற்கு கூடிய கொம்புகளுக்கு, பன்னி ரெண்டு முழமும் இதன் உயர மாக இருத்தல் போதுமென்பர். செவ்வாய் குற்றியின் உயரத்தை

> "எந்தச் சேரியர் வெற்றி பெற்றாலும், அதனை கண்ணகி அம்மனின் வெற்றியாகவே கருதி வழிபாடு நிகழ்த்துவதுடன் வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களைப் பார்த்து வசைபாடி பாடல்களையும் பாடுவது வழக்கமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்."




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிப்பதற்கு கொம்பின் அளவோடு நாட்டப்படும் நிலத்தின் தன்மையை அவதானிக்க வேண்டும் கிட்டித்த நிலத்தில் (திட்டியான நிலத்தில்) இதனை ஒன்றரை முழம் அளவில் புதைப்பதும் மணற் பாங்கான இடமாயின் 2 முழம் ஆழத்தில் புதைப்பதும் அவசியமாகும்.

### மரவளையம்

கொம்பு இழுவைக்காக தாய் மரத்தை சுற்றிப் போடப்படும் வளையம் மரவளையமாகும். இது பருமன் கூடிய கருந்தெகிழக் கொடிகளை பலமுறை சுற்றி பின்னப்படுவது. சாதாரணமாக இதன் சுற்றளவு ஒரு முழத்துக்கு மேல் இருக்கும். (மரத்தின் அளவு)

### செவ்வாய்க்குற்றி வளையம்

கொம்பு இழுவைக்காக மரவளையம் போல செவ்வாய்க்குற்றியை சுற்றி போடப்படும் வளையம் செவ்வாய்க்குற்றி வளையம் ஆகும். இதுவும் மர வளையப் பருமன் அளவு கருந்தெகிழங்கொடியால் பின்னப்படும் என்பதுவும் இது போடப்படும் உயரம் மரவளையத்திற்கு சமனாக இருக்கும் என்பதும் குறிப்பி டத்தக்கது. (செவ்வாய் குற்றியினுடைய பருமனுக்கேற்ப)

### அரிப்பு

இது பல சுற்று கயிற்றாலானது. தென்சேரிக் கொம்பை தாய்மர வளையத்துடனும் வடசேரிக் கொம்பை செவ்வாய்க்குற்றியுடனும் இணைப்பதற்கு கொம்புமுறி வழிபாட்டின் போது இரண்டு அரிப்புக்கள் பயன்படுத்தப்படும். முன்பு ஆத்தி, நார்பட்டு, நறுபுளி, தெகிழை ஆகிய மரங்களிலும் நார்கயிறு கொடிகளிலும் இருந்து பெறப்பட்ட நார்களைக் கொண்டு புரிவிட்டு திரிக்கப்பட்ட கை பெருவிரல் அளவினதான கயிற்றினால் அரிப்பு வளைக்கப்படும்.

### வடம் தாங்கி

இரண்டு அரிப்புக்களையும் மரவளையத்திலும் செவ்வாய்க் குற்றி வளையத்திலும் உட்புறமாக கீழ் இருந்து மேல் நோக்கி எடுத்து இழுபடாத வண்ணம் மாட்டிவிடும் தடிகள் "வடம் தாங்கி" எனப்பெயர் பெறும். இதற்கு முதிரை, வெள்ளைக்கருங்காலி, விற்பனை முதலிய உறுதி கூடிய மரங்களை பயன்படுத்துவர்.

### வடம்

செவ்வாய்க்குற்றியின் மேற்புறமாகத் வளைத்து புகுத்திய ஆப்பில் இரண்டு பக்கமும் கொழுவி இரு சேரியாரும் தனித்தனியாக இழுக்கப் பயன்படும் கயிறு வடமாகும்.

கொம்பு விளையாட்டு நிகழ்ச்சிகள்

1. பொருட்களை தேடி எடுத்தலும் தயார்படுத்தலும்
2. கொம்பு தூது பிடித்தல்
3. கொம்புகளை வரிதல்
4. கொம்புகளைப் பூட்டுதல்
5. அடை கட்டலும் ஆப்படித்தலும்
6. தாய் மரத்துக்கும் செவ்வாய்க் குற்றிக்கும் இடை யில் இணைத்தல்
7. அடை பிடித்தலும் வடம் இழுத்தலும்
8. வெற்றி தோல்வி தீர்மானித்தல்

வடக்கயிறு இழுத்தல் அதே வேளை தடக்கால் கயிறு பொதுக்கயிறு. போன்றவற்றோடு, கொம்பு விளையாட்டின் போட்டியாக பல கொம்பு விளை யாட்டுப் பாடல்களும் படிக்கப்படும். உதாரணமாக

கோலாம்பணிச்சேலை கொய்துடுத்துக்
கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பர் வந்து மடிபிடித்து
மெத்தவுஞ்சிக்கிக் கொண்டார் தோழி...

காப்பிணி மங்கையர் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வேலன்
சீப்புடன் மல்லிகைப் பூமாலை தந்து
சேர்வமென்றாரடி தோழியரே

தோழியொரு வசனம்
சொல்கிறேன் கேளடிநற்றோழி
வாளிதந்தென்னையு மேயிங்கு
வரச் சொன்னாரடி மானாரே

தோற்றவர்களை வக்கணங்கள் கூறி வைதல், பாடுதல் போன்றவை கொம்பு விளையாட்டின் போது இடம் பெறுகின்ற பாடல்கள் என்பதும் குறிப்பிடத் தக்கவை.

என்ன கொம்பு உடைந்தாலும், கண்ணகி அம்மனுக்கு வெற்றி கொடுத்தும் பொங்கல் செய்து வழிபாடு நடாத்தப்படும். வெற்றிபெற்றவர்கள் சிறாம்பி போட்டு வெற்றியைக் கொண்டாடுவார்கள்.

இறுதியாக எந்தச் சேரியர் வெற்றி பெற்றாலும், அதனை கண்ணகி அம்மனின் வெற்றியாகவே கருதி வழிபாடு நிகழ்த்துவதுடன் வெற்றி பெற்றவர்கள் தோற்ற வர்களைப் பார்த்து வசைபாடி பாடல்களையும் பாடு வது வழக்கமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். மொத்தத்தில் கொம்பு வழிபாடானது அனைவரையும், ஒன்று சேர்க்கின்ற இடமாகவும், இறை நம்பிக்கை யையும், பக்தி உணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

**வடிவேல் சக்திவேல்**
ஊடகவியலாளர்
களுதாவளை மத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை தென் எருவில் பற்று பிரதேச

# கண்ணகி வழிபாடு

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து...."

மானிடப் பெண்ணான கண்ணகி தனது கற்பின் வலிமையால் மண்ணுளார்க்கு வழிபாட்டுத் தெய்வமாகவும் விண்ணோரும் போற்றும் பெருமை பெற்றாள்.

இக் கண்ணகி வழிபாடு உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்தில் மேன்மையுற்று காணப்படுவது சிறப்பு.

ஆரம்ப காலத்தில் கண்ணகிக்கு கோயில்கள் இல்லாமல் வீடுகளில் வழிபடப்பட்டதனை உணரமுடிகின்றது. இருப்பினும் பிற்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்டு சடங்குகள் இடம்பெற்று வருவது கண்கூடு.

இப் பிரதேசத்தில் கண்ணகி ஆலயங்களாக செட்டிபாளையம், தேற்றாத்தீவு, களுவாஞ்சிகுடி, எருவில், மகிழூர், கோட்டைக்கல்லாறு, துறை நீலாவணை என ஏழு ஊர்களிலும் உள்ள ஆலயங்களை பட்டியலிடலாம். இவற்றுள் பெரும்பாலானவை ஒத்துக்குடா கந்தப்பர் வருகையுடன் தொடர்புபட்டிருப்பதனை விட்டுச்செல்ல முடியாதுள்ளது.

இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சி மேலோங்கி கொண்டிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணம் முழுவதும் அவர்கள் வசம் இருந்தது. இந்து சமய வழிபாட்டுக்குத் தடையும் தண்டனையும் அரங்கேறிய வண்ணம் இருந்தது. யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் (ஒதுங்குடா பகுதி) மதிப்புமிக்க தலைவராக கந்தப்பர் விளங்கினார். இவரை அணுகி மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஏழு கண்ணகி சிலைகளையும், மூன்று பைரவர் சிலைகளையும் மற்றும் சிலவற்றையும் எடுத்துக் கொண்டு தனது மகள், இரு சகோதரிகள், இன்னும் சிலருடன் "வாடா" எனும் படகிலேறி மட்டக்களப்புக்கு வந்து வாவியூடாக மண்முனைப் பகுதியை அடைந்து எழுவான் கரைப் பகுதியில் சிறாம்பி கட்டி ஏழு கண்ணகி சிலைகளையும் இங்கு வைத்து பூசித்தனர்.



சமகாலத்தில் கண்டி இராசதானியில் விமலதர்மசூரியனின் ஆட்சி இடம்பெறுகின்றது. அவனது ஆளுகை மட்டக்களப்பை உள்ளடக்கியதாகவும் இருந்தது. அதற்கு திக்கதிபதி நியமிக்கப்பட்டிருந்தான். ஒதுங்குடா கந்தப்பர் தொடர்பில் இத் திக்கதிபதி தவறான சேதியை கண்டி அரசனுக்கு வழங்கினான். இவர்கள் போர்த்துக்கீசரின் ஒற்றர்கள் எனக் கருதிய கண்டி அரசன் கந்தப்பரையும் இரு சகோதரிகளையும் வாவியில் அமிழ்த்தி கொல்ல இடப்பட்ட உத்தரவு நிறைவேறியது. மகள் பருவ வயதானபடியால் பிரதேசத்தின் கலிங்க குலத்தில் ஒருவனுக்கு மணமுடித்து வைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து கண்ணகி சிலைகள் மண்முனை புதுக்குடியிருப்பு மற்றும் இப் பிரதேசத்தின் செட்டிபாளையம், களுவாஞ்சிகுடி, எருவில், மகிழூர் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களில் வைத்து பூசிக்கப்பட்டிருக்கலாம் என கருதமுடிகின்றது.

மறுபுறம் கண்டி இராசதானியுடன் மட்டக்களப்பு இணைந்திருந்தமையினையும் கண்டிக்கும் மட்டக்களப்பிற்கும் வர்த்தக தொடர்பு புராதன காலத்தில் இருந்தமையினையும் கொண்டு இருபிரதேசங்களுக்குமான போக்குவரத்து மார்க்கமான அம்பாரை, சம்மாந்துறை, வீரமுனை, கல்முனையினூடாக கண்டியிலிருந்து கண்ணகி வழிபாடு கொண்டுவரப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்முனையினை அடுத்து துறைநீலாவணை, கோட்டைக் கல்லாறு என்று பிரதேசங்களில் பரவியிருக்கக் கூடும்.

வழிபாட்டு முறையில் 'வைகாசித் திங்களில் வருவேன் என்று வரிசைக்கியைந்து விடை கொடுத்தாரே' என குளிர்த்திப்பாடல் கூறுவதற்கிணங்க வைகாசித் திங்களில் விழா எடுக்கப்படுகின்றது. இங்கு வைகாசித் திங்கள் என்பது பிரதேசத்தில் இரு வேறு வகையில் கொள்ளப்படுகின்றது அதாவது வைகாசி மாதத்தின் திங்கள் என்னும் பௌர்ணமி தினத்தில் நிறைவு நாள் விழாவுடன் அதிகாலை வேளை குளிர்த்தி இடம்பெறுவது ஒன்றாகவும் வைகாசி பௌர்ணமியை உள்ளடக்கி விழா எடுத்து அடுத்து வருகின்ற திங்கட்கிழமை நாளில் நிறைவு நாள் விழாவுடன் அதிகாலை குளிர்த்தியுடன் விழா நிறைவடைவதும் என மற்றயதுமாக இரு வகையில் சடங்கு இடம் பெறுவதைக் காணலாம். இவற்றின் முதல் கூறிய வகைப்பாடு களுவாஞ்சிகுடி, மகிழூர் கோட்டைக்கல்லாறு ஆகிய இடங்களும் மற்றய வகையில் செட்டிபாளையம், எருவில், துறைநீலாவணை ஆகிய இடங்களும் விழா எடுக்கின்றனர்.

இவற்றிலிருந்து வேறுபட்டதாக தேற்றாத்தீவு கண்ணகியம்மன் ஆலயத்தில் ஆனிப் பூரணையினை அண்டியதாக அடுத்து வருகின்ற திங்கட்கிழமையினை நிறைவு நாளாகக் கொண்டு விழா எடுக்கப்படுவதைக் காணலாம்.

செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் தனிச் சிறப்பிற்குரியது யாதெனில் இங்கு பிரதேசத்தின் செட்டிபாளையம், தேற்றாத்தீவு, மாங்காடு, தேற்றாத்தீவு குடியிருப்பு, களுதாவளை, குருக்கள்மடம் மற்றும் கிரான்குளம் ஆகிய ஏழு ஊர்களும் இணைந்த நிருவாக சபையும், சடங்குகள் இடம்பெறுவதும் சிறப்பு. முற் போது அம்பிளாந்துறை, பழுகாமம் ஆகிய கிராமத்தி னரும் இணைந்திருந்தமை மனங்கொள்ள வேண்டி யுள்ளது.

ஏனைய கண்ணகி ஆலயங்களிலுள்ள கிராமங் களில் அவ்வூரிலுள்ள சாதிமுறைப்படி சடங்குகள் இடம் பெறுவதைக் காணலாம். இருப்பினும் தேற்றாத்தீவு கண்ணகிக்கு ஊரிலுள்ள தெரு அடிப்படையில் முதலாம் தெரு தொடக்கம் ஏழாந்தெரு வரை ஏழு தெருக்களாக பிரித்து ஏழு நாட்கள் விழா எடுக்கப் படுகின்றது. இங்கு அம்மன் திருவுருவைத் தோரணங் கட்டி அலங்கரித்து ஆடல், பாடல்களுடன் ஊர்வலம் வந்து ஆலயத்தில் கட்டி விழா எடுப்பதை நோக்கும் போது வெகுவாக கண்டிப் பெரகரா (கண்ணகி ஊர்வலம்) வினை முற்றிலும் ஒத்திருப்பதை உணரலாம். இங்கு குளிர்த்தில் இடம்பெறுவதில்லை மாறாக வாழி பாடுதலுடன் விழா நிறைவடைகின்றது.



## பூசகர் அல்லது கட்டாடியார்

பொதுவாக கண்ணகியம்மன் ஆலயங்களில் பூசை வழிபாடுகளை மேற்கொள்பவர்கள் பரம்பரை கட்டாடிமார்கள் ஆவர். ஆயினும் களுவாஞ்சிகுடி, எருவில், மகிழூர், கோட்டைக்கல்லாறு ஆலயயங்களில் பூசகரே செய்கின்றனர். இவர்களும் பரம்பரை வழியில் வருபவர்களாகவே அமைவர். பெரும்பாலும் பத்தாசி எனப்படும் பத்ததி முறையிலேயே சடங்குகள் நடத்தப் படும். இங்கு செட்டிபாளையம் கண்ணகி ஆலயத்தில் வேடப்பத்ததி வழிபாட்டு முறை ஆரம்பத்தில் இருந்த தாயினும் ஆகம வழிபாட்டுமுறை 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஆயினும் பரம்பரை வழிவந்த கட்டாடிமாரே சடங்கினை செய்கின்றமையை அவதா னிக்கலாம். இவர்கள் ஒத்துக்குடா கந்தப்பர் மகள் வழி பரம்பரையினர் எனவும் தமிழ் நாட்டின் காரைக் காலை பூர்வீகமாகக் கொண்ட மருங்கூர் வேளாளர் என்றும் கூறப்படுகின்றது. இவர்கள் செட்டி பாளையம், தேற்றாத்தீவு ஆகிய இடங்களில் உள்ளனர். எருவில், மகிழூர் ஆலயங்களில் சான்றார் சமூகத்தைச் சேர்ந்தோரே சடங்குகளைச் செய்கின்றனர். இவர்கள் எருவில் கிராமத்தில் பத்தினியாச்சி குடியினர் என்றும் மகிழுரில் கழுவத்தன் பணிக்கொணா குடியினர் என்றும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவர்களும் ஆரம்பத்தில் கட்டாடி என்றே அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

கோட்டைக்கல்லாறு கண்ணகி பூசைகளை சமய தீட்சை பெற்ற ஆசாரி ஒருவராலேயே செய்ய முடியும். இவர் பொதுவாக குடி அடிப்படையிலின்றி தகைமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்.

களுவாஞ்சிக்குடியிலும் குறித்த பரம்பரையூடாக வந்த பூசகராலேயே சடங்குகள் செய்து வைக்கப் படுகின்றது. துறைநீலாவணையில் குறித்த மூன்று குடிவழியே வருகின்ற ஒருவராலேயே பரம்பரையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டாடி எனும் பெயரால் சடங்கு செய்து வைக்கப் படுவதைப் பார்க்கலாம்

ஒருமித்த காலத்தில் பிரதேசம் எங்கும் தூய்மையுடன் அம்மன் எண்ணமும் கதையுமாய் மஞ்சள், வேப்பிலை என்பன மணக்க மக்கள் மனங்களிலும் பக்தியும் சந்தோசமும் குடிகொள்ளும்.

### கதவு திறத்தல்

எல்லா கண்ணகி ஆலயத்திலும் வருடாந்தச் சடங்கு ஆரம்பமாகும் நாளில் முதன் முறையாக ஆலய மூலஸ்தானக் கதவை முறைப்படி திறந்து வைத்தல் இதுவாகும்.

### ஊர்காவல் பண்ணுதல்

கட்டாடி/பூசகர் அம்மன் போல் சேலை அணிந்து ஊர்சுற்றுக் காவியம் அடியவர்களால் உடுக்கு ஒலியுடன் பாடப்பட குறித்த ஊரின் எல்லைப்புறங் களினூடாக வலம் வந்து நீர் தெளித்து ஊரைக் காவல் பண்ணுவர். இவ்வாறு அம்மன் ஊர்வலம் வரும்போது வீதிகள் துப்பரவு செய்யப்பட்டு நிறைகுடம் வைத்து மஞ்சள் கலந்த நீர் கொண்டு வேப்பிலையால் அம்மனின் கால்களை கழுவி அம்மனை வரவேற்பர்.

### கன்னிக்கால்/கலியாணக்கால்

பூவரசு மரத்திலிருந்து இக் கன்னிக்கால் பெறப்படும். கண்ணகி அம்மனை கன்னியாக பாவனை செய்து அலங்கரிக்கவே இக் கால் எடுக்கப்படுகின்றது. களுவாஞ்சிகுடி, எருவில், மகிழூர், துறைநீலாவணை ஆகிய பிரதேசங்களில் கன்னிக்கால் வெட்டுதல் என்பது சிறப்பு வாய்ந்த நிகழ்வாக இடம்பெறும். பொருத்தமான காலுள்ள இடத்தை முன்னமே தெரிவு செய்து வைத்திருப்பர். ஆலயத்தில் அதற்கு வேண்டிய பூசை நிறைவுற்றதும் அப்படியே அவ்விடத்திற்கு சென்று அவ்விடத்தில் மடை வைத்து பூசை செய்து கன்னிக்கால் வெட்டப்படும். இதன் போது அக்காலில் இருந்த இலை, பட்டைகளை அடியவர்கள் முண்டி யடித்து எடுத்து தமது இல்லங்களில் சுவாமியறையில் வைப்பர். இதன்மூலம் தமக்கு இடர்கள் நேராது என்பது நம்பிக்கை. வெட்டப்பட்ட கன்னிக்கால் மஞ்சள் பூசப்பட்டு பட்டுக்களால் சுற்றி ஊர்வலமாக விழாவாக எடுத்துச் சென்று ஆலயத்தில் நட்டு அம்மனைப் போல் சேலை கட்டி மணப்பெண்ணாக அலங்கரிப்பர். பின்னர் கல்யாணச் சடங்கு செய்யப் படும். இதன்போது அலங்காரம் செய்யப்பட்ட அக்காலுக்கு கல்யாணப் படிப்பு படித்து தாலி கட்டி சிறப்புப் பூசையும் செய்வர்.

செட்டிபாளையம், கல்லாறு, தேற்றாத்தீவு ஆலயங்களில் கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு சிறப்பாக இடம்பெறாவிட்டாலும் கால் ஒன்று வெட்டப்பட்டு மேலே கூறியது போல் அலங்கரிக்கப்பட்டு கல்யாணச் சடங்கும் சிறப்பாக நடைபெறும்.


### வட்டுக்குத்து

குளிர்த்தில் சடங்கிற்காக விநாயகப்பானை எழுந்தருளச் செய்தல் உள்ளிட்ட பொங்கல் செய்வதற் காக அம்மனுக்கு நேர்த்தியாக வந்த நெல்லை எடுத்து உலரவிட்டு பூசை செய்து உரலிவிட்டு குற்றி அரிசி பெறப்படும். இதுவே விநாயகர் பானைக்கு இடப்படும் அரிசி.

### குளிர்த்தில்

எல்லா ஆலயங்களிலும் குளிர்த்தில் இடம் பெறுகின்றது. தேற்றாத்தீவு கண்ணகியைத் தவிர குளிர்த்தில் ஆடுவதற்கு பால், இளநீர், பழவகைகள், தேன், கரும்பு போன்றவற்றைக் கொண்டு பாணக்கம் தயாரிக்கப்பட்டு அண்டா (பெரியபானை) வில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்து குளிர்த்தில் பாடல் பாடி அம்மன் குளிர்த்தில் நடை பெறும். அம்மனைக் குளிர்த்தியடையச் செய்வதன் மூலம் சூட்டினால் பரவக் கூடிய அம்மன், மங்கமாயி, வைசூலி போன்ற நோய்களிலிருந்து விடுபட்டு வாழலாம் என்பது மக்கள் நம்பிக்கையாகும்

இவ்வாறு திருக்குளிர்த்தில் முடிவடைந்த பின்னர் திருக்கதவு பூட்டப்பட்டு எட்டு நாட்களின் பின்னர் எட்டாம் நாள் சடங்கு நடைபெறும். பின்னர் அடுத்த ஆண்டிலேயே மீண்டும் விழா எடுக்கப்படும்

இவ்வாறு சடங்கு காலங்களின் போது அம்மன் வரலாறு கூறும் வழக்குரைகாவியம் (வழக்குரை) ஆலயங்களில் பாடப்படும். பூசை இடம்பெறும் போது உடுகுச்சிந்து உடுக்கு ஒலியுடன் பாடப்படும் மேலும் ஊர் சுற்றி வரும்போது ஊர்சுற்றுக்காவியம் என்பனவும் பாடப்படுவது மெய்சிலிர்க்க வைக்கின்றது.

வைகாசிச் சடங்கு என்று கூறப்படும் இக்கண்ணகி விழாவிற்காக மக்கள் ஏலவே தமது வீடு வாசல் வளவுகள், வீதிகள், ஆலயம் போன்றவற்றை துப்பரவு செய்து கழுவி தயார்படுத்திக் கொண்டு மச்சம் மாமிசம் தவிர்த்தவர்களாக தூய்மையுணர்வுடன் பயபக்தியுடன் காணப்படுவர். இந்துக்கள் மட்டுமன்றி பிரதேசத்தில் வாழும் கிறிஸ்தவர்கள் கூட இவ் வழிபாட்டை மதித்து நடப்பதும் கண்கூடு.

ஒருமித்த காலத்தில் பிரதேசம் எங்கும் தூய்மையுடன் அம்மன் எண்ணமும் கதையுமாய் மஞ்சள், வேப்பிலை என்பன மணக்க மக்கள் மனங்களிலும் பக்தியும் சந்தோசமும் குடிகொள்ளும். செட்டிபாளையம் கண்ணகியம்மனைப் பொறுத்தவரையில் தற்போது ஏழு ஊர்கள் சேர்ந்து வழிபாடு இயற்றுவது பிரதேச ஒற்றுமை, சகோதரத்துவம், புரிந்துணர்வு என்பனவற்றை மேலோங்கச் செய்வதைக் காணலாம்.

கோபமுற்று வந்த கண்ணகியை குளிரச் செய்ய இடைச் சிறுவர்கள் வசந்தன் கூத்தாடி மகிழ்வித்ததாக கூறப்படுகின்றது. இவ்வாறு கண்ணகி திருச்சடங்கு காலங்களில் வசந்தன், கும்மி, கரகாட்டம் போன்றவை பயிற்றுவிக்கப்பட்டு ஆடப்படுவதை இன்றும் காணலாம். உதாரணமாக களுதாவளை, தேற்றாத்தீவு கிராம மக்களால் இங்குள்ள சிறுவர், சிறுமியரைக் கொண்டு வசந்தன், கரகாட்டம் என்பன பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றி அம்மன் ஆலய வீதியில் ஆடப்படுகின்றது பெரும்பாலும் செட்டிபாளையம் கண்ணகி ஆலயத்தில் தேற்றாத்தீவு, களுதாவளை மக்களின் சடங்கு நாட்களில் இது ஆடப்படும்.

## நேர்த்திகள்

மக்கள் அம்மன் மீது கொண்ட அதீத பக்தி, பயம் தமது வேண்டுதல் போன்றவற்றைக் கொண்டு தமது உடலை வருத்தி வாயலகு, பாற்காவடி, முள்ளுக் காவடி, பறவைக்காவடி, அங்கப்பிரதட்சணம் போன்ற நேர்த்திகளை நிறைவேற்றுவர் மேலும் அம்மனுக்காய் உடல் அங்கங்களைக் சுட்டி வடிவமைக்கப்படும் தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்றவற்றால் ஆன அடையாளப் பொருட்களை புதிதாக வாங்கியோ அல்லது ஆலயத்திலுள்ளதை கட்டுப்பணம் செலுத்தியோ பெற்று அதனுடன் பூ, பூமாலை, கமுகம்பாளை, பழவகை என்பவற்றை வைத்து ஆலயத்தில் கொடுப்பர் அவை அம்மனை சென்றடையும் என்பதே நம்பிக்கை

சடங்கு காலங்களில் கலைவிழா, புத்தக வெளியீடுகள், இறுவெட்டு (அம்மன் பாடல்களுக்காக) வெளியீடு, கல்வியில் சாதனை புரிந்தோர், நிருவாகத்தில் சிறப்பாக செயற்பட்டு ஓய்வு பெற்றவர்களை வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றது.

இவ்வாறு இப்பிரதேச மக்கள் கண்ணகி வழிபாடு அன்றேல் தாங்களும் இல்லை என்ற அளவில் அவர்களின் வாழ்வியலில் பின்னிப்பிணைந்ததாக கண்ணகியம்மன் வழிபாடு காணப்படுவது சிறப்பு எனில் மிகையில்லை.

- **கவிஞர். க.கயல்வேந்தன்** JP(B.A)
புள்ளி விபர உத்தியோகத்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் கிராமிய நாடகம் மட்டக்களப்பு **மகிடிக்கூத்து**

இலங்கை தமிழர் மத்தியில் வழக்கிலுள்ள கிராமிய நாடகங்களுள் மகிடிக் கூத்தும் ஒன்றாகும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு முதலான பிரதேசங்களில் இது முன்னர் நிகழ்த்தப்பட்டிருப்பினும் மட்டக்களப்பிலே தான் அது இன்றும் ஓரளவாவது பயில் நிலையிலுள்ளது.

மகிடி என்பதன் அர்த்தம் மந்திரத்தால் பொருளை மறைத்தலும் அதனை கண்டெடுத்தலும். இவ்விவாதத்தில் மாந்திரீகளுக்குள் நிகழும் போட்டி என்று விளக்கம் தருகின்றது. மட்டக்களப்பில் நடைபெறும் மகிடிக் கூத்துக்களில் மந்திர, தந்திர விளையாட்டுக்கள் முக்கிய இடம் பெறுகின்றன.

மட்டக்களப்பில் இம் மகிடிக் கூத்தினை அவற்றின் உள்ளடக்கம், நிகழ்த்தும் முறை என்பவற்றினடியாக மூன்று வகையாகப் பிரித்து நோக்க முடியும்.

முதலாவது வகை மட்டக்களப்பு மந்திரவாதிகளை மலையாள நாட்டிலிருந்து வந்த மந்திரவாதிகளும், ஏனையோரும் மந்திர விளையாட்டில் வென்ற கதையை நிகழ்த்திக் காட்டுவதாகும். இக்கூத்திலே பின்வரும் வாய்மொழி நிகழ்த்தப்படுகின்றது. மலையாள நாட்டிலிருந்து ஒண்டிப்புலி என்பவனும், அவன் மனைவி காமாட்சியும், அவன் தம்பி கங்காணிக்குறவனும், கங்காணிக் குறவனின் மனைவி மீனாட்சியும் புறப்பட்டு வருகின்றனர். அவர்களுடன் சில குறவர்களும் வருகின்றனர். மட்டக்களப்பை அவர்கள் அடைந்ததும் அங்குள்ள மந்திரவாதிகளின் தலைவனுடன் மந்திரப் போட்டிகளில் ஈடுபட்டு இறுதியில் காளிதேவியின் அருளுடன் வெற்றியடைகின்றனர்.

முதலாவது வகை மகிடிக் கூத்து அவைக்காற்றப்படும் முறையை நோக்கும் போது குறிப்பிட்ட நாளன்று (பெரும்பாலும் புதுவருடப் பிறப்பு முடிந்து மறு நாள் அல்லது ஓரிரு நாட்கள் கழிய) மலையாளத்தாருக்கு வேடமிடுவோர் அடுத்த ஊரில் அல்லது கூத்து மேடைக்குச் சற்று தொலைவிலுள்ள வீடு ஒன்றில் வேடமணிந்து கொண்டு மகிடி நடைபெற அமைக்கப்பட்ட அரங்கம் நோக்கிப் புறப்பட்டு ஊர்வலமாக ஆடிப்பாடி பகிடிகள் நகைப் பேச்சுக்கள் பேசி ஊராரை மகிழ்வித்தபடி வருவர். கூத்தில் ஒண்டிப்புலி, கங்காணி, குறவன், காமாட்சி, மீனாட்சி, குறவர்கள் ஆகியோர் பங்குபெறுவர். பங்கு பற்றும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒப்பனையுண்டு. பாடி வரும் இவர்களுடன் ஊரார் சிலரும் இணைந்து கொள்வர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிடி பார்க்க வருபவர்களும் இணைந்து கொள்வர்.

மகிடி மேடைக்கு அருகில் வந்ததும் மலையாளத்தார் மேடையைச் சூழ உள்ளவர் களிடம் இது எந்த நாடு? இங்கு என்ன நடைபெறுகின்றது? என்று கேட்டு, தம்மை யும் அறிமுகம் செய்து கொண்டு மேடைக்குள் நுழைவர். பின்னர் அரங்கின் இல 23 ஆம் பந்தலில் தங்கியிருக்கும் மந்திரவாதிகள் தலைவனைக் கண்டு தம்மை அறிமுகம் செய்து போட்டி விதிகளை அறிவர். அங்குள்ள கும்பங்களை அழிப்பது தான் போட்டியின் சாரமாகும். பின்னர் தமக்குரிய பந்தலுக்குத் திரும்புவர். திரும்பும் வழியில் கும்பம் சுழலும், கொடி மரம் சுழலும் வட்டா மடை எழுந்து மறையும். இதைக் கண்டு குறவர்கள் பயந்து ஓடுவர், மயங்கி வீழ்வர். அவர்களைத் தெளியப்படுத்தி மயக்கம் தெளிவித்து காமாட்சி அழைத்து வருவாள். பந்தலுக்குள் வந்த பின்னர் ஒண்டிப்புலி கும்பங்களை அழிக்க புறப்படுவான். இது மோடி எடுதத்தல் எனப்படும். ஒண்டிப்புலியும் அவன் தம்பி கங்காணிக் குறவனும் மகிடி வாத்தியத்தை ஊதி ஆடியபடி மோடி எடுப்பர். மத்தளம் வாசிப்பவர் ஒண்டிப் புலிக்குப் பின்னால் அவரது ஆட்டத்திற்கு தக மத்தளம் வாசித்தபடி செல்வர்.

தத்தா தகிந்தத்தா தத்தா தகிந்தத்தா
தகிந்ததித்தா தகிந்ததித்தா தகிந்தத்தா

என்ற தாளமே அங்கு வாசிக்கப்படும். தாளம் போடுபவரும் பின்னால் தாளம் போட்டபடியே வருவார். மேளத்திற்கும், தாளத்திற்கும் தக காலிற்கட்டிய சதங்கைகள் ஒலிக்க வலது சாரி. இடதுசாரியாக பதுங்கி யும். பயந்தும், துள்ளியும், குதித்தும் இவர் கள் இருவரும் ஆடி வருவது ரசிகர்களை கவருவதாக இருக்கும். மத்தளத்திற்குப் பதில் உடுக்கு பாவிக்கப் படுவதும் உண்டு. இந்த ஆட்டம் இலஅ27 இல் நடைபெறும்.

இவ்வண்ணம் ஆடிவரும் ஒண்டிப் புலியும், கங்காணிக்குறவனும் இல 9,8,7,6,5 இலுள்ள கும்பங்களிலுள் மடைகளை எடுத்து அழிக்க முயல்வர். அச்சமயம் அக்கும்பங்களினருகே காவலுக்கு அமர்த்தப் பட்ட சீடப்பிள்ளைகள் தம்மிடமுள்ள மந்திர நீரை ஒண்டிப்புலி மீதும் தெளித்து அவனை மயங்கிக் கீழே விழ வைப்பர். ஒண்டிப்புலி மயங்கி விழுந்து கீழே கிடந்து துடிதுடிப்பர். கங்காணிக்குறவன் ஓடிச் சென்று பந்தலில் இருந்த காமாட்சியிடம் கூற அவள் அங்கு வந்து ஒண்டிப்புலியைத் தன் மந்திர சக்தியினால் எழுப்பிக்கொண்டு செல்வாள். மந்திரவாதி தன் பந்தலில் நின்று புறப்பட்டு வந்து தன் சீடப்பிள்ளைகளை உசாரப்படுத்திச் செல்வான்.

ஐந்து கும்பங்களும் அழிக்கப்படும் வரை இந்நிகழ்வு தொடர்ந்து நடைபெறும். ஒவ்வொரு கும்பமாக ஒண்டிப்புலி காமாட்சி தந்த மந்திரம் கொண்டு அழிப்பான். கும்பம் எடுக்கப் பட்டதும் அருகிலிருந்து சீடப்பிள்ளை மயங்கி விழுவான். மந்திரவாதி தன் இருக்கை விட்டு வந்து சீடப்பிள்ளையை தன் மந்திரத்தால் எழுப்பிச் செல்வான். எழுந்த சீடப்பிள்ளை கொடி மரத்தடியில் சென்று அமர்ந்து கொள்வான்.

ஒவ்வொரு கும்பமும் அழிக்கப்பட்டதும் ஏற்படும் ஓய்வு நேரத்தில் குறவர்கள் சூழ நிற்கும் பார்வையாளர்களுடன் சென்று உரையாடுவர். மந்திரவாதியுடன் சென்று வெகுளித் தனமாகப் பேசுவர். அப்பேச்சுக்கள் நகையுணர்வைத் தோற்று விக்கும். அச்சமயம் தங்களிடமிருந்து ஊசிமணி, பாசிமணி என்பவற்றை பார்வையாளருக்கு விற்பர். பாம்பாட்டிக் காண்பிப்பர். இதே போல வட்டாமடை, பூரணகும்பம் என்பனவும் அழிக்கப்படும். மகிடியில் எல்லாக் கும்பங்களையும் ஒண்டிப் புலி அழித்த பின்னர் கொடிமரம் வரை மலையாளத்தார் முன்னேறி வந்துவிடுவர். கொடிமரத்தடியில் நடைபெறும் மந்திர விளை யாட்டுப் போட்டியில் ஒண்டிப்புலி கொடிமரத்தில் வைக்கப்பட்டிருந்த சுருக்கில் அகப்பட்டுக் கொள்வான். அவனை மீட்க முடியாத காமாட்சி அங்கு நிற்கும் தமது சகாக் களுள் ஒருவனான ஒரு குறவன் மீது மாறா தெய்வத்தை வரப் பண்ணுவாள். இம் மாறா தெய்வ அழைப்புக்கு கோயில் சடங்குகளில்பயன்படுத்த ப்படும் மந்திரம் சொல்லப்படுவதுமுண்டு. மாறா பிடித்தவனாக அபிநயிக்கும் அக் குறவன் சிறு தெய்வக் கோயிலில் மாறாவுக்கு அபி நயப்பவனைப் போலவே அபிநயிப் பான். கோயிலில் மாறா வினைக் குருத்தோலையினால் அலங் காரம் செய்வர். இங்கும் அதே அலங்காரம் செய்யப்படும். மாறா வந்துமுற்படுபவரிடம் சுருக்கில் அகப்பட்ட ஒண்டிப்புலியை மீட்க உபாயம் என்ன? என்று காமாட்சி வினவ மாறா காளியை அழைத்தால் வழி பிறக்கும், கவலை தீரும் என்று கூறும் 'கட்டு' உரைக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் தெய்வம் ஏறி ஆடிக் கட்டுரைப்பது போலவே இங்கும் மாறா கட்டுரைக்கும்.

அதன் பின்னர் அவ்விடத்தில் மீனாட்சி மணலிலே அட்சரம் கீறி அதன் மீது வேப்பிலை வைத்து அதன் மீது தேங்காய் வைத்து மந்திரம் உரைப்பாள். (அத் தேங்காய்க்குள் ஏற்கனவே சிவப்பு நிறம் கலந்திருப்பர்). கோயிலிலே கூறப்படும் காளி அழைப்பு மந்திரம் சில வேளைகளில் கூறப்படுவதுண்டு. மந்திரம் உரைத்த காமாட்சி ஆவேசம் கொண்டு தேங்காயை உடைப்பாள். தேங்காயினுள்ளிருந்து சிவப்பு நிறம் பாய காளி எங்கிருந்தோ அங்கு பிரசன்னமாவாள். (காளிக்கு அபிநயிப்பவருக்கு உருவருவதும் உண்டு) காளி பிரசன்னமானதும் ஒண்டிப்புலி விடுதலையாகி விடுவான். மந்திரவாதி பயந்து ஓடிவிடுவான். காளி காமாட்சிக்கும் அவன் கூட்டத்தாருக்கும் வரமளித்து மறைவாள். வெற்றியடைந்த மலையாளத்தார் அரங்கம் முழுவதும் ஆடி மகிழ்வர்.

இரண்டாவது வகை மகிடிக்கூத்து முதலாவது வகையை விட பல வகைகளில் வேறுபாடுடையது. குறிப்பிட்ட ஓரிடத்தில் நடைபெறும் மந்திர விளையாட்டுக்களை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள்ளைக்காரி ஆகியோர் வந்து பார்ப்பதும் அவர்களிடம் ஏற்படும் எதிர்த்தாக்கங்களும் புலிக்கு வேடமிட்டு ஒருவன் புலியாட்டம் ஆடுவதும் என பல அம்சங்களை இணைத்து இம் மகிடிக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது. இதிலே கதையம்சம் குறைவு. வேடன் ஒருவனை மையமாக வைத்து அவனுக்கும் புலிக்கும் ஏற்படும் சண்டையும் முனிவரின் அருளால் வேடன் புலியை வெல்வதுமான கதையொன்று அபிநயிக்கப்படினும் இம் மகிடிக் கூத்தில் பிரதானமாக அமைபவை மகிடி பார்க்கப் பலர் வருவதும் அதையொட்டிய வேடிக்கை நிகழ்வுகளுமே. இம் மகிடிக் கூத்தினை மேல் முழுவதும் சாம்பல் பூசிய சாம்பல் ஆண்டிமார் என அழைக்கப்படும் நால்வர் நடத்துவர். பார்வையாளர்களுக்கும் மகிடியில் நடைபெறும் விடயங்களைப் பற்றி அடிக்கடி விளக்கமளிப்போர் இவர்களே.

இதற்கென தனி மேடையமைப்புண்டு. இம் மகிடிக்கூத்தின் மேடையமைப்பும் முன் குறிப்பிட்ட முதலாவது மகிடிக்கூத்தைப் போன்றதே எனினும் சிற்சில வேறுபாடுகளுண்டு. இதனுடைய கதையின் போக்கிற்கு ஏற்பவே வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இரண்டாவது வகை மகிடி அவைக்காற்றப்படும் முறையை நோக்கும் போது, பிற்பகல் 2.00 மணியளவில் மகிடி ஆரம்பமானதும் அரங்கின் கிழக்கு வாசல் வழியாக பறைமேள ஒலியுடன் முனிவர் என்று அழைக்கப்படும் பிரதான சாம்பலாட்டி அரங்கினுள் அழைத்துவரப்படுவார். கையில் வேப்பம் இலையுடனும் வெள்ளிப்பிரம்புடனும் வரும் இவர், அரங்கினுள் நுழைந்து கொடிமரம், கும்பங்களை சுற்றி வந்து அரங்கினுள் வெளியே நின்றும் இருந்தும் கொண்டிருக்கும் பார்வையாளர்களுடன் உரையாடுவார். அந்த உரையாடலில் மகிடி நடக்கப்போவதும் அதைக் காண பல திக்குகளிலிருந்தும் ஆட்கள் வரப்போவதும் வெளிப்படுத்தப்படும். இதனைத் தொடர்ந்து இன்னும் நான்கு சாம்பலாட்டிகள் அரங்கினுள் பிரவேசிப்பார்கள். இவர்களும் மக்களுடன் உரையாடிய பின்னர் கும்பங்களுக்கு அருகிலுள்ள தத்தமக்கென இடப்பட்டிருக்கும் பீடங்களில் சென்று அமர்வர். பிரதான சாம்பலாட்டியும் கொடிமரத்தடியிலுள்ள பீடத்தின் மீது அமர்ந்து கொள்வார்.

அதன் பின்னர் முனிவர் ஒருவர் அவரது சீடப் பிள்ளையுடன் அரங்கினுள் புகுவார். அங்கு அவர் கொடிமரத்தையும் கும்பங்களையும் மந்திரம் கூறி, சக்தி ஏற்றி நிலைநிறுத்திய பின்னர் பந்தல் ஒன்றினுள் சென்று அமர்வார்.

பின்னர் பறங்கியும் பறங்கிச்சியும் அரங்கினுள் புகுவர். அவர்கள் அரங்கினுள் கொடிமரம், கும்பங்களைச்சுற்றி வேடிக்கை பார்த்து வருவர். அச்சமயம் கொடிமரம் சுழலும். அவர்கள் திகைப்பர்

இவர்களை அடுத்து வேடனும், வேடுவிச்சியும் வேடுவிச்சியின் சகோதரரும் என மூவர் அரங்கினுள் நுழைவர். இவர்களின் வருகையுடன் ஆட்டம் ஆரம்பமாகும். திட்டவட்டமான தாளக்கட்டுக்கள் இவற்றிற்கு இல்லாவிடினும் ஓசையும் ஒத்திகையும் மிக்க மத்தள அடிக்கு ஏற்ப வேடனும் வேடுவிச்சியும் ஆடுவார்கள். வேடுவிச்சிக்கு பேய் பிடிப்பதும் அதை விரட்ட அவர்கள் முயற்சி எடுப்பதும் சில மணி நேரங்கள் நடைபெறும். இச்சமயம் விரசமான மகிடிகளும் இடம்பெறும்.

பேயாட்டம் முடிந்ததும் வேடன் மரத்திலேறி தேன் எடுப்பான். (முதல் நாளே மேடையின் அருகிலுள்ள மரம் ஒன்றின் உச்சியில் தேன் வதையை இதற்கெனத் தயாராக வைத்து விடுவர்)

வேடன் மரத்தில் ஏறுவதைச் சாம்பலாட்டிகள் தடுப்பார்கள். அவன் சாம்பலாட்டிகளை ஏமாற்றப் பார்ப்பான். இந்த ஏற்கும், தடுக்கும் செயல்கள் சில மணிநேரங்கள் தொடரும். இறுதியில் வேடன் மரத்தில் ஏறித் தேன் எடுத்து அனைவருக்கும் கொடுப்பான். அதனை அனைவரும் சாப்பிடுவார்கள்.

பின்னர் புலிவேடம் அணிந்து ஒருவர் அரங்கினுள் நுழைவார். பின் புலிக் கூத்து நடைபெறும். பாய்ந்தும், பதுங்கியும், கிடந்தும், எழுந்தும் ஆடப்படும் ஆட்டம் பார்வையாளர்களுக்கு பெரு விருந்தாய் அமையும். அதன் பின்னர் அப்புலியைக் கொல்லும் முயற்சியில் அனைவரும் ஈடுபடுவர். வெள்ளைக்காரன் (மகிடியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பறங்கி என அழைக்கப்படுகின்றான்) துவக்கால் சுடுவான். வேடன் அம்பால் எய்வான். இப்போட்டியில் வேடனே புலிக்கு வேடமிட்டவனை அம்பெய்து வீழ்த்துவான். பின்னர் வீழ்ந்தவரை வெட்டுவது போன்று அபிநயித்து வெட்டிய துண்டு களை ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு பங்கெனக் கூறி வேடன் கொடுக்க அனைவரும் அதனைச் சாப்பிடுவர். (அம்பு,வில் எடுத்து சன்னதம் கொண்டாடி சுவாமிக்குப் படைக்கப்பட்ட சோறு மீது அம்பால் மூன்று தடவை எய்து, பின்னர் அதனை எல்லோரும் சாப்பிடும் வழக்க முறையொன்று மண்டூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறுகின்றது. மண்டூர் கந்தசுவாமி கோயிற் தீர்த்தம் முடிந்து 3ம் நாள் இச் சடங்கு கோயிலின் அருகாமையுள்ள வில்வமரத்தடியில் நடைபெறும்)

பிற்காலத்தில் பொலிஸ் வருதல், வேடனைப் பொலிஸார் விரட்டுதல், பைலா ஆட்டம் என்பனவும் இடம்பெற்றன. இதில் மகிடி அம்சத்தை விட வேடிக்கை பார்க்கும் அம்சமே அதிகமாக காணப்படுகின்றது.

மூன்றாவது வகை மகிடிக்கூத்தானது மந்திர தந்திரங்களை உள்ளடக்கியிருப்பினும் குறவன் குறத்தியையும் பிராமனரையும் பாத்திரங்களாகக் கொண்டதும் திட்டமிட்ட கதைப்போக்கு ஒன்றைக் கொண்டிருப்பதுமான மகிடிக்கூத்து இது. தனக்கென ஒரு நாடக ஏட்டை கொண்டிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

இம் மகிடிக்கூத்தில் இரண்டு கதைகள் உள்ளன. ஒன்று காமாட்சி, மீனாட்சி ஆகியோரின் கதை. இன்னொன்று சிங்கன், சிங்கி எனப்படும் குறவன், குறத்தியின் கதை. இரண்டையும் இணைத்து இம் மகிடியின் கதை ஆக்கப்பட்டுள்ளது.

கும்ப மீனாட்சியும், கம்ப காமாட்சியும் அக்கா தங்கைமார். இருவரும் மந்திர வித்தைகளிலே தேர்ந்தவர்கள். ஆனால் ஒருவரை ஒருவர் அறியாமற் பிரிந்து வாழ்கிறார்கள். மீனாட்சி தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட கம்ப கும்பங்களை காவல் பார்க்கும்படி தன் மகன் வசிட்டருக்கு கட்டளையிட அவரும் தன் சகாக்களுடன் அவற்றைக் காவல் புரிகின்றார்.

அக் கம்ப கும்பங்களிருக்கும் இடம் வந்து சேர்ந்த காமாட்சி தன் மந்திர வித்தைகளினால் அவற்றை அழிக்க முயல்கிறார். வசிட்டருக்கும் காமாட்சிக்குமிடையே மந்திர வித்தைகளில் போட்டி நடைபெறுகின்றது. அவ்விடம் வரும் மீனாட்சிக்கும், காமாட்சிக்குமிடையே நடக்கும் வாக்குவாதத்தில் அவர்களிருவரும் அக்கா, தங்கைமார் என்பது புலனாகின்றது. பின்னர் தன் தகப்பன் காசியாத்திரை சென்றதை தாய் மூலம் அறிந்த வசிட்டர் அவரை அழைத்து வரப் புறப்படுகின்றார். இது ஒரு கதை.

சிங்கி எனப் பெயர் பெற்ற குறத்தி ஒருத்தி சிங்கன் எனப் பெயர் கொண்ட தன் கணவனைத் தேடி கும்பங்களிருக்குமிடம் வந்து சேர்கிறாள். அங்கு கும்பங்களை அழிக்க முயலும் காமாட்சியுடன் சேர்ந்து கொள்கிறாள். அதே நேரம் குறவன் குறத்தியைத் தேடிக் கொண்டிருக்கிறான். பலரிடம் விசாரிக்கிறான். பின் கம்ப கும்பங்களுள்ள இடத்தில் குறத்தியைக் கண்டு அவளை சந்தேகித்துப் பின்னர் சந்தேகம் தீர்க்கிறான். இடையில் வசிட்டருக்கும் காமாட்சிக்கும் நடக்கும் மந்திரப் போட்டியில் அகப்பட்டு மயங்கி வீழ்ந்து பின் தெளிந்து எழுகின்றான். பின்னர் மனைவியுடன் சேர்ந்து முருகனை வணங்குகிறான். இது இன்னோர் கதை.

அக்கா, தங்கை எனத் தெரியாது பிரிந்திருந்த காமாட்சியும் மீனாட்சியும் சந்திப்பதும், தந்தையைத் தேடி வசிட்டர் செல்வதும் ஒரு கதையாக அமைய தன்னைப் பிரிந்திருந்த குறத்தியைக் குறவன் தேடுவதும் அவள் மீது சந்தேகம் கொண்டு பின் சந்தேகம் தீர்வதும்பின் இருவரும் ஒன்றாவதும் இன்னொரு கதையாக அமைகின்றது.

நாடகத்தின் இறுதியில் ஒரு வேடனும் வேடுவிச்சியும் அரங்கினுள் அமைகிறார்கள். வேடுவிச்சிக்குப் பேய் பிடிக்கிறது. அதனைக் கலைக்க வேடன் அவள் தலையில் வேப்பிலையினால் அடிக்கிறான். வேடுவிச்சி அரங்கை விட்டு ஓடுகிறாள். நகையுணர்வுடன் நாடகம் முடிகிறது. இது மூன்றாவது மகிடிக் கூத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் இன்னொரு சிறு கிளைக்கதையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலிரு கதைகளையும் இறுதியில் வரும் நகையுணர்வு தோற்றுவிக்கும் காமாட்சியையும் இணைக்கும் இடமாக கம்பமும், கும்பங்களுமுள்ள இடம் அமைகிறது.

மூன்றாவது வித மகிடி அவைக்காற்றப்படும் முறையை நோக்கும் போது மகிடி அரங்கின் முதலாம் களரிக்குள் நிற்கும் கூத்தை இயக்குபவர்கள் சபை விருத்தம் பாடுவதுடன் நாடகம் ஆரம்பமாகும். முதலாம் களரிக்குள் தோன்றி ஆடிப் பாடித் தன்னை அறிமுகம் செய்யும் குருக்கள், பின் இரண்டாம் களரிக்குள் வந்து கும்பங்களைப் பார்வையிட்டு அரங்கின் கிழக்கு மூலையிலுள்ள கோயிலுக்குள் சென்று அமர்ந்து கொள்வார். பின்னர் சிங்கன் (குறவன்) முதலாம் களரிக்குள் தோன்றி ஆடிப் பாடி அறிமுகம் செய்த பின் இரண்டாம் களரிக்குள் சென்று குறவனைத் தேடுவாள். குறத்தி சென்றதும் கம்ப காமாட்சி முதலாம் களரிக்குள் தோன்றி ஆடிப் பாடித் தன்னை அறிமுகம் செய்த பின், இரண்டாம் களரிக்குள் வந்து கம்ப, கும்பங்களை அவதானிப்பாள். அங்கு குறத்தியை சந்திப்பாள். குறத்தி தன் குறையைக் காமாட்சிக்கு கூற அவளைக் குறவனுடன் சேர்ப்பதாகக் உரைத்து காமாட்சி அவளுடன் அரங்கை விட்டு வெளியேறுவாள்

பின் வசிட்டர் முதலாம் களரியினுள் தோன்றுவார். அவரைத் தொடர்ந்து அவர் தாய் மீனாட்சி தோன்றுவாள். அவர்கள் சந்திப்பது ஆடல் பாடலுடன் முதலாம் களரியில் நடைபெறும்.

பின் நான்கு வகுத்தய்யாமார்கள் முதலாம் களரியினுள் தோன்றி ஆடிப் பாடித் தம்மை அறிமுகம் செய்த பின்னர் முதலாம் களரியினுள் வசிட்டரைச் சந்திப்பர். வசிட்டர் அவர்களிடம் கம்ப, கும்பங்களைப் பார்க்கும்படி கூற அவர்கள் இரண்டாம் களரிக்குள் வந்து கும்பங்களின் அருகில் தமக்கென இடப்பட்டிருக்கும் பீடங்களின் மீது அமர்ந்து கொள்வர்.

பின்னர் தோன்றும் குறவன், குறத்தியை மீண்டும் தேடுவதும் சபையோரிடம் அவளைப் பற்றி விசாரிப்பதும் முதலாம், இரண்டாம் களரிகளில் சந்தர்ப்பத்திற்கேற்ப நடைபெறும். குறத்தியைக் கண்டு அவன் வினாவுவதும் அவளுடன் சமாதானம் ஆவதும் முதலாம் களரிக்குள் நடைபெறும். வேடன், வேடுவிச்சி வரவு ஆட்டம் முதலாம் களரியினுள் நடைபெறும்.

வசிட்டருக்கும் காமாட்சிக்கும் நடைபெறும் மந்திர வித்தைப் போட்டிகளும் குறவன் அவர்கள் போட்டிக்குட்சிக்கி அவஸ்த்தைப்படுவதும் இரண்டாவது களரிக்குள் நடைபெறும்.

முதலாம் களரிக்குள் ஏட்டில் இருக்கும் பாடல்களும் அதற்குத்தக ஆடல்களும் இடம்பெற ஏட்டில் இல்லாத வாய்மொழிக்கதை இரண்டாம் களரியில் நடைபெறும். இரண்டு விதமான கதைகள் இணைக்கப் படினும் அங்கு குறவனே பிரதான பாத்திர மாவான். குறவன் குறத்தி சண்டை மகிடியில் பெரும் நேரத்தைப் பிடித்துக் கொள்ளும்.

மூன்றாவது வகை மகிடிக்கூத்துக்கென சில ஆட்டமுறைகள் உள்ளன. ஏனைய மகிடிக்கூத்தில் வரும் ஆட்டங்களை விட இவ்வாட்டங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டனவாய் உள்ளன. எழுதப்பட்டு பிரதிப்படி நடத்தப்படுவது இதற்கு ஒரு காரணமாகலாம். குருக்கள், குறவன், மீனாட்சி என்பார்க்குத் தனித்தனியே யான தாளக்கட்டுக்களுமுள்ளன.

மூன்று விதமாக நிகழ்த்தப்படும் இம் மகிடிக் கூத்துக்களுக்குமிடையே பல ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றன. மூன்று மகிடிக் கூத்துக்களிலும் மந்திர, தந்திர விளையாட்டுக்கள் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. மேடையமைப்பிலும் பெரும்பாலும் ஒற்றுமை காணப்படுகின்றது. கதையமைப்பு முறையில் அவைக்காற்று முறையில் சிற்சில இடங்களில் அரங்கை உபயோகிக்கும் முறையில் வேற்றுமைகளைக் காணலாம்.

இவ்வாறான சிறப்பு மிக்க தமிழர் பண்பாடு பேசும் கூத்தான மட்டக்களப்பு மகிடிக்கூத்து நம்மிடையில் அருகி வருகின்றது. இதனை வளர்ப்ப தற்கு நாடகக் கலைஞர்கள் முன்வர வேண்டும். பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

நன்றி

**உதயகுமார் சநாதனி**
மட்/பட்/ களுதாவளை தேசிய பாடசாலை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்களில்

## கிராமிய மக்களின் உணர்வுகள் வெளிப்படும் விதம்



**நா**ட்டார் இலக்கியம் என்பது "ஒரு கிராமத்தினது பாரம்பரியங்களின் குறிகாட்டியாக விளங்கும், கிராமத்து மக்களின் நாகரிக வரலாற்றையும், பண்பாட்டையும் பாரம்பரியமாக நிலவிவரும் சடங்கு முறைகளையும் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் யதார்த்தமாக எடுத்துக் கூறுபவையே" ஆகும். இவற்றை சாதாரண கல்வியறிவற்ற பாமரர்களான கிராமத்து மக்கள் தங்களது நாளாந்த தொழிலின் போதும் செயற்பாட்டின் போதும் பொழுது போக்குகளின் போதும் தங்களது மன உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் பாடியுள்ளனர்.

மண்வாசனையைப் புலப்படுத்தும் நாட்டார் பாடல்களுள் தாலாட்டு, தொழிற்பாடல், வழிபாட்டுப் பாடல்கள், காதல் கவிகள், விளையாட்டுப் பாடல்கள், ஒப்பாரி போன்றவை உள்ளடங்கும். வாய்மொழியாகப் பின்பற்றப்பட்டு வந்த இப் பாடல்களில் பெண்கள் தமது உணர்வுகள், விருப்பு வெறுப்புக்கள், எதிர்ப்புக் குரல்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளனர்.

பெண்கள் தம் மனம் விரும்பாத ஒருவரை திருமணம் செய்து வைத்த போது தமது விருப்பமின்மையை, எதிர்ப்பை நாட்டார் பாடல் மூலம் வெளிப் படுத்தியுள்ளனர். இந்த வகையில் இளம் குமரி ஒருத்தியை வயது முதிர்ந்த நரை விழுந்த கிழவனுக்கு மணம் முடித்து வைத்தமையினை எதிர்த்து

"நாணப் பூப் போல் நரைத்த கிழவனுக்கு
கும்மாளப் பூப் போல இந்தக் குமர் தானா வந்து வாழுறது"

என்று தனது வெறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளாள்.மேலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் ஆண்களை வெறுத்து எதிர்க்கின்ற பெண்களின் உணர்வினை நாட்டார் பாடல்களில் காணலாம். இந்த வகையில் வீதியால் செல்லும் பெண்ணின் பால் உறுப்புக்களை வர்ணித்து கேலி பேசும் ஆண் ஒருவனை

"மாதுளம் காயுமில்லை மருக்கலங்காயுமல்ல
பாலகன் குடிக்கும் என்ர பால் முலைடா சண்டாளா"

என எதிர்த்து துணிவுடன் வசை கூறிப் பாடுகிறாள்.

நாட்டின் பொருளாதார உயர்வில் பெரும் பங்களிப்புச் செய்யும் பெண்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பைச் சுரண்டும் போது அது தொடர்பான கோபத்தை, வெறுப்பை தமது சக தோழிகளிடம் தெரிவித்து தம்மை ஆற்றுப்படுத்தியுள்ளனர். இதனை

"ஓடி ஓடி நிரை பிடித்து
ஒரு கூடைக் கொழுந்தெடுத்தும்
பாவி கணக்கப்பிள்ளை
பாஞ்சால மயிலே எனக்கு
பத்துறாத்தல் போட்டானடி
பூஞ்சோலை குயிலே"

எனும் நாட்டார் பாடலின் மூலம் கண்டு கொள்ளலாம். அத்துடன் பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் தாய்மை எனும் உன்னத நிலையினை அடையக் காரணமான மகவிற்கு தனது நாவினை அசைத்துத் தாலாட்டுப் பாடும் போது தாய் ஒருத்தி பல்வேறு மன உணர்வுகளை வெளிப்படுத்தி விடுவாள். இந்த வகையில் குழந்தையின் அழகில் மயங்கி வர்ணிப்பாள். குழந்தையைப் பெற்றெடுக்க தான் பட்ட துன்பம், குழந்தைப் பாக்கியமின்றி இத்தனை காலமாக தான் பட்ட வேதனை மற்றும் கொடுமை, குழந்தை பற்றிய எதிர்காலக் கனவு தங்கள் குலப் பெருமை, கணவனின் வீரம் முதலியவற்றை வெளிப் படுத்தி பாடுவாள். இந்த வகையில் குழந்தை மீது கொண்ட பாசத்தை

"ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ
ஆரடித்து நீயழுதாய்
அடிச்சாரை சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணி வைப்போம்"


எனப் பாடுகிறாள். அதாவது காரணமின்றி குழந்தை அழுத போது அதன் அழுகைக்குக் காரண மானவர் தம் உறவினர்களாக இருந்த போதும் அவர்க ளையே எதிர்க்கத் துணிகிறாள் அந்தளவிற்கு தாய் தன்குழந்தை மீது கொண்ட அழகான பாசத்தை வெளிப் படுத்தி தாலாட்டுப் பாடுவதில் காணலாம்.

அத்துடன் குழந்தையுடன் விளையாடும் போது பல்வேறு உவமைகளைக் கூறி தங்கள் மகிழ்ச்சியினைப் பெண்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இந்தவகையில்

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு - என்
தாமரைப் பூவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு - என்
கோவிற் புறாவே சாய்ந்தாடு"

என்பதைக் குறிப்பிடலாம். இப்பாடலில் தன் குழந்தையை தாமரைப் பூ, குத்து விளக்கு, கோவிற் புறா என வர்ணித்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்து கிறாள்.

மேலும் வயதுக்கு வந்த தன் மகள் தன்னந் தனியே வெளியில் செல்ல ஆயத்தமாகும் போது



அவளைப் பாதுகாப்பாக செல்லச் சொல்லும் தாயின் உணர்வானது பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது.

"தண்ணிக்குப் போ மகளே
தடம் பார்த்துப் போ
முட்டாளுப் பையங்கண்டா
முகங் கொடுத்துப் பார்க்காதே

என தன் மகள் மீதான பாதுகாப்புணர்வை தாய் வெளிப்படுத்துகின்றாள்.

மேலும் பெண்கள் ஆண்களைப் பரிகசித்து தம் நகை உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வகையில்

"முப்பத்தி ரெண்டிலே
மூணு பல்லுதான் மீதி
காகக் கறுப்பு நிறம் - ஒரு
காலுமல்லோ முடமவர்க்கு"

எனப் பாடுவதைக் குறிப்பிடலாம். மேலும் ஆங்கிலேயரின் ஆசை வார்த்தைக்குள் அகப்பட்டு தம் சொந்த மண்ணை விட்டு மலையகம் வந்த பெண்கள் தம் தாய் நாட்டினை விட்டு வந்த தவிர்ப்பை

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நான் மறந்தேன்"

என வெளிப்படுத்தியுள்ளமையைக் காணலாம்.

மேலும் தன் காதலனை நேரிற் சந்திக்க வேண்டும், நிறையப் பேச வேண்டும் என ஆசை கொண்ட பெண்ணொருத்தி சிருங்கார ரசம் சொட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்தன மரத்தை மச்சான்
சந்திக்க வேணுமென்றால்
பூவலடிக்கு மச்சான்
பொழுதுபட வந்து போங்க"

என தன் காதல் உணர்வை வெளிப்படுத்தியுள்ளாள்.

மேலும் தன் மகள் பூப்பெய்த செய்தியை வயலில் வேலை செய்யும் தன் கணவனுக்கு தெரிவிக்க வழியால் சென்ற சகோதர இனத்தவரிடம் சூட்சுமமாக நாகரிகமான முறையிலே செய்தியனுப்பும் தாயொருத்தி

"ஆதங்காக்கா ஆதங்காக்கா
அவரக் கண்டா சொல்லிப்பொடு
பூவரசங் கன்னியொண்ணு
மொட்டலர்ந்து போனதென்று"

எனும் பாடலில் மாற்றானிடம் நேரடியாகக் கூறமுடியாது நாணம் அடைகின்ற நிலையினை இப் பாடலில் காணலாம்.

மேலும் ஒப்பாரிப் பாடலில் பெண்கள் தங்கள் மன உணர்வினை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வகையில் கணவன் இறந்த பின் தான் தனியாக வாழமாட்டாள் என்பதனை வெளிப்படுத்தி

"அப்பா ரோடே
சேத்தே என்னே
அனுப்பீருங்க சாமிகளே
தாலிய நான் அறுத்துப்புட்டு
தனியா இனி இருப்பேனோ"

என தன் வேதனையை, கவலையை வெளிப் படுத்தி இருப்பதனைக் காணலாம்.

மேலும் திருமணம் பார்க்க வேண்டிய வயதில் தன் மகன் இறந்த போது இச்சோகத்தினை வெளிப் படுத்தி

"வாலைப் பராயமல்லோ
உனக்கு வயது மிகச் சொற்பமல்லோ
தாலிக்கோர் நாள் பார்க்க
காவுக்கோர் நாளாச்சோ
கூறைக்கோர் நாள் பார்க்க
கொள்ளிக்கோர் நாளாச்சோ"

என தன் ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளாள்.

மேலும் தன் சகோதரி இறந்த போது மரண வீட்டிற்கு ஆட்கள் வருவதனை வெளிப்படுத்தி

"என்ர பிறவியரே
அக்கா உன்னத் தேடி வருகினமே
உங்க சின்ன முகங் காண்பதற்கு
அக்கா உன்ன நாடி வருகினமே"

என வருந்துவதும் பெண்ணின் மன உணர்வின் வெளிப்பாடே.

மேலுள்ளவற்றை தொகுத்து நோக்கும் போது



கல்வியறிவற்ற சாதாரணமான பாமரப் பெண்கள் எவ்வித ஒழிவு மறைவுமின்றி வெளிப்படையாகத் தமது உணர்வுகளான துன்பம், மகிழ்ச்சி, காதல், ஷரசம் போன்ற உணர்வுகளை நாட்டார் பாடல்களினூ டாக வெளிப்படுத்தியிருப்பதை காணலாம்.

உசாவியவை


1. பாடுமீன் ஸ்ரீகந்தராசா.சு, 2002, "மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்" மணிமேகலைப் பிரசுரம்
2. பேராசிரியர் அருணாசலம்.க, 1994, 'மலையகத் தமிழ் இலக்கியம்', தென்றல் பப்ளிகேசன், கொழும்பு
3. அனந்தராஜ்.ந, 2002, 'வடபுல நாட்டார் வழக்கு' நந்தி பதிப்பகம்
4. Dr அம்மங்கிளி முருகதாஸ், 2007, 'இலங்கைத் தமிழர்களிடையே வாழ்மொழி இலக்கியம்'. குமரன் பதிப்பகம்
5. ராமச்சந்திரன். M, 1996, 'தேயிலைத் தோட்ட மக்கள் பாடல்'
6. Dr பாலசுந்தரம்.இ, 2005, 'ஈழத்து நாட்டார் பாடல்கள் (ஆய்வும் மதிப்பீடும், மணிமேகலைப் பிரசுரம்
7. வானதி.கி, 'நாட்டார் பாடல்களில் பெண்களின் எதிர்ப்புக் குரல்கள்' ஓலை – 42. பங்குனி – 2007, கொழும்பு தமிழ்ச் சங்கம்


**- களுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களில் ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றங்கள்

ஒரு தனி மனிதனின் நடை உடை பாவனைகள் தான் ஒரு இனத்தின் கலாசாரமாக வெளிப்படுகின்றது. அதன் மூலம் இனத்தின் அடையாளம் காலத்தை வென்று வாழ்கின்றது. அது அந்த இனத்தின் தனித்துவமாக வாழையடி வாழையாக பின்பற்றப்பட்டும் வருகின்றது. அதுவே அந்த இனத்திற்குப் பெருமையும்,தொன்மையும் சேர்க்கின்றது.

இன்று கால நிலைகளும் மாற்றம் அடைகின்றது அதன் பாதிப்புக்கள் எவ்வாறு உலகை நிலை குலைய வைக்கின்றதோ? அதேபோல்தான் இனங்களின் கலாசார மாற்றங்களும் அந்த இனத்தின் சாபக் கேடாகவே அமைந்துவிடுகின்றது.

கலாசார மாற்றங்கள் சூறாவளிபோல் சுழன்றடிக்கின்றது. சுனாமியில் சிக்கியது போல் தமிழன்னை பரிதவித்து நிற்கின்றாள். பரிகாசமாக மற்ற இனங்கள் எம்மீது பார்வை செலுத்துமளவிற்கு பண்பாடுகளைத் தொலைத்து நிற்கின்றோம்.!

எமது பண்பாடுகளே எமக்கான பாதுகாப்பு அரண்களாக இருந்து எமது ஒழுக்க நெறிகளை விழுமியங்களை பாதுகாத்து எமக்கு பெயர் வாங்கித் தருகின்றன. ஒழுக்கமுள்ள ஒரு சமூகமாக தரணியில் எம்மை தலை நிமிரச் செய்கின்றன.

இன்று பெயர் வைப்பதிலிருந்து அனைத்து விடயங்களிலும் எமது பாரம்பரியம், பண்பாடு. மரபு மறந்த நிலையே காணப்படுகின்றது. எண் சோதிடம் வந்து ஆங்கில எழுத்துக்களை முன்னிலைப் படுத்தி பொருள் பொதியாத பெயர்களே குழந்தைகளுக்குச் சூட்டப்படுகின்றன. இது படித்த குடும்பங்கள் மத்தியில் அதிகம் பரவி வருகின்றது.

எண் சோதிட இலக்கத்தை மட்டும் மையப்படுத்தி நாக்குப் புரளுகின்ற நாமங்கள் நாகரிகம் என்ற போர்வையில் எமது கலாசாரத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. வயதானவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பேரப்பிள்ளைகளின் பெயர்களை சரியாக உச்சரிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அத்தகைய பெயர்களை இங்கு சுட்டிக்காட்ட தனிமனித சுதந்திரம் காரணமாக தவிர்க்க வேண்டியிருக் கின்றது. அது நாகரீகமுமல்ல. முன்பு புராண இதிகாச பெயர்களையும், கடவுள்களின் பெயர்களையும், அர்த் தங்கள் தொனிக்கவே எமது முன்னோர்கள் பெயர் வைப்பதையே ஒரு மகிழ்ச்சிகரமான சடங்காகச் செய்து வந்துள்ளனர்.

சிவராமன், தர்மன். கந்தன். சிவலிங்கம். நல்ல தம்பி. முருகமூர்த்தி. நடராஜசிவம், ராஜா, ராணி. சீதா, கௌரி, கிருஸ்ணபிள்ளை, துர்க்கா, துளசி, நளினி, செல்வமணி. அண்ணாதுரை. கண்ணம்மா, முருகன், பார்வதி. இராமன், போன்ற இலகுவான பெயர்களே அதிகளவு வைக்கப்பட்டு வந்தது. அப் பெயர்களைக் கொண்டே அவர்களை எந்த இனத்தவர் என எளிதாக அடையாளப்படுத்தக் கூடியதாக இருந்தது.

இன்று தமிழில் எவ்வளவோ அழகான அர்த் தங்களைப் பிரதிபலிக்கும் பெயர்கள் நிறையவே இருந்தும், பெயர்களுக்கு பஞ்சம் ஏற்பட்டதுபோல், நாகரிகம். எண்சோதிடம் என்று தடம்மாறி இனத்துக் கான தனித்துவத்தை பேண தவறிக் கொண்டிருக் கின்றோம். பெயர்களில் கூட பிற இரவல் கலாசாரத்தைப் பின்பற்றும் இழிநிலைக்கு மாறிக் கொண்டிருக்கின்றோம்.

ஆதி மனிதன் இலை குழைகளால் தன் உடலை மறைத்து மானம் காக்கும் பக்குவத்தை பெற்றிருந்தான். நாகரிக முதிர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் உடலை ஆடை கொண்டு முற்றாக மறைக்கும் முறைமையை பின்பற்றத் தொடங்கினான். அதிலும் முதிர்ச்சி பெற்று இன குழுமங்களை வெளிப்படுத்தும் வகையில், ஆடைகளை தயாரித்து அணியத் தொடங்கினான்.

இந் நிலையில் தான் அந்நியர் ஆட்சிகள் ஏற்பட்டு ஆடை மற்றும் இன கலாசாரங்களில் மாற்றங்கள் ஊடுருவல் செய்யத் தொடங்கின. அதுவே எமது பாரம்பரிய ஆடைகளில் மாற்றத்திற்கு அடி கோலியது. அதுவளர்ந்து எமது ஆடை கலாசாரம் இன்று இரண்டும் கெட்டான் நிலையை வேகமாக எட்டிப் பிடித்திருக்கின்றது.

ஆண், பெண் சமத்துவம் என்பது ஆடைகளில் மட்டும் பிரதிபலிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஆடைகள் முலம் ஆண் பெண் மற்றும் எந்த இனம் என்பதை வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவிற்கு இருபாலாரும் இலகுவான மேற்கத்திய ஆடைகளுக்கு நன்கு பழக்கப்பட்டவர்களாக மாறிக் கொண்டிருக் கின்றார்கள். இது இள வட்டங்களில் மட்டுமன்றி பேரப்பிள்ளைகள் கண்டவர்களுக்கும் தொற்றிக் கொண்டிருப்பதுதான் கலாசார கொடுமை.

> “இன்று
> பெயர் வைப்பதிலிருந்து
> அனைத்து விடயங்களிலும்
> எமது பாரம்பரியம், பண்பாடு.
> மரபு மறந்த நிலையே காணப்படுகின்றது.
> எண் சோதிடம் வந்து ஆங்கில
> எழுத்துக்களை முன்னிலைப்படுத்தி பொருள்
> பொதியாத பெயர்களே குழந்தைகளுக்குச்
> சூட்டப்படுகின்றன. இது படித்த குடும்பங்கள்
> மத்தியில் அதிகம்
> பரவி வருகின்றது.”

மானத்தை காப்பாற்றுவதற்குத்தான் ஆடை என்ற நிலை மாறி அரைகுறை ஆடைகள் என்ற கட்டத்தையும் தாண்டிக் கொண்டிருக்கின்றது. சினிமா மாயை ஏற்படுத்தும் தாக்கம் எமது ஆடை கலாசாரத்தை ஆட்டிப்படைக்கின்றது. முற்றுமுழுதாக ஐரோப்பிய கலாசார ஆடைகளுக்கு நிகரான ஆடைகளை துணிச் சலுடன் எம்மவர் அணிந்து எவ்வித தயக்கமுமின்றி உலா வருகின்றார்கள். எதிர்காலத்தில் உள்ளாடை மட்டும் போதும் என்ற முழுமையான மேற்கத்திய நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எமது கலாசார உடையான வேட்டியை ஆடவர்கள் கைவிட்டு நீண்ட காலம் ஆகிவிட்டது. ஐரோப்பிய பாணியில் ஆடை அணிவதே சௌகரியம் என்ற நிலை உருவாகி விட்டது. ஆலயங்களுக்குக் கூட அரை காற்சட்டைகளுடன் செல்வதும் பழக்கமாகி வருகின்றது. சுற்றுலா பயணிகள்போல் ஆலயங்களை சுற்றி வருவது கலாசார வேடிக்கையாக இருக்கின்றது.

இன்று வேட்டி கட்ட தெரியாதவர்களும் சௌகரியமாக வேட்டி கட்டக்கூடியவாறு சிறுவர் முதல் முதியோர் வரை ஒட்டு வேட்டிகள் சந்தையில் தாராளமாகக் கிடைக்கின்றது. இருந்தும் சம்பிரதாயத் திற்குக் கூட வேட்டியை நாடுவோர் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

ஐரோப்பிய நாடொன்றில் பிறந்து வளர்ந்தவர்கள் போல் தங்களை இனம் காட்டுவதிலேயே இஸ்டம் உள்ளவர்களாக மாறி வருகின்றார்கள். சிறு பராயத்தி விருந்தே அத்தகைய ஆடைமாற்றம் பெற்றோர்களா லேயே மாற்றப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

ஆலயம் தவிர்த்து மண்டபங்களில் நடைபெறும் திருமண வைபவங்களில் கூட மாப்பிள்ளையை வேட்டி சால்வையில் காண்பது அரிதாகி வருகின்றது இந்து சமயம் தமிழர் பண்பாட்டுப் பாரம் பரியங்களில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முக்கிய இடத்தை வகிக்கின்றது. அந்த இடம் கூட அன்னிய கலாசாரத்தால் அடிபட்டுப் போகும் அவல நிலையை நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஐரோப்பிய பாணியில் திருமண கேக் வெட்டுவதற்கு கோட். சூட் என்பவற்றுக்கு காட்டும் கரிசனை பட்டுவேட்டி சால்வையில் காட்டப்படுவதில்லை. திருமணத்தில் கேக் வெட்டுதல் அவசியமான ஒரு அம்சமாக இடம் பிடித்துவிட்டது. இது முழுக்க முழுக்க ஐரோப்பிய கலாசாரம் என்று தெரிந்தும் நாம் அதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் மனநிலையைத்தான் வளர்த்துக் கொண்டுள்ளோம்.

அன்று வேட்டி, சால்வை கட்டுபவர்களுக்கு சமூகத்தில் தனி மரியாதை இருந்தது. முன்பு தமிழ் ஆசிரியர்களை இலகுவாக அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. வேட்டி, சால்வை, வாலாமணி அணிந்தே பாடசாலைக்கு வந்து கற்பித்தலை கண்ணியமாக மேற்கொள்வர். அவர்களை பார்க்கும்போதே தமிழ் பாரம்பரிய உணர்வு ஊற்றெடுக்கும் நிலை இயல்பாகவே உருவாகக் கூடியதாக இருந்தது. ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் கூட இதுவே கோல உடையாக அங்கீகாரம் பெற்றிருந்தது.

அன்று சமூகத்தின் வழிகாட்டிகளாக அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தனர். நல்லொழுக்கத்திலும் நடத்தையிலும் வழிகாட்டிகளாக மேம்பட்டிருந்தார்கள்.. இளம் சமூகம் அவர்களை பின்பற்றக் கூடிய உயர் நிலை பேணப்பட்டு வந்தது. மரபுகளை காப்பதில் அவர்களின் பங்களிப்பு அபரிவிதமாக இருந்தது. கல்வி விற்பனைப் பொருளாக மாற்றமடைந்த பின் எல்லாமே வியாபாரமாக மாறிவிட்டது.

இன்று வேட்டி சால்வை வாலாமணி அணிந்து பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களை மை போட்டுத்தேட வேண்டியிருக்கின்றது. இதிலிருந்தே தமிழர் தேசிய உடைக்கு பாரிய உடை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று ஆசிரியர்களுக்கென்று கோல உடையுமில்லை. அவர்கள் அணியும் ஆடையைக் கொண்டு அவர்களை ஆசிரியர்கள் என்ற அடையாளம் காண முடியாமலும் இருக்கின்றது.

ஐரோப்பிய உடைக்கு மாறினால் கூட 'ரை' கட்டிச் செல்கின்றார்களா? என்றால் அதுவுமில்லை. எனவே ஆசிரியர்களும் தங்கள் பதவிக்காக கௌரவமாக ஆடை அணிய வேண்டியது அவசியமாக்கப்பட வேண்டும். எனினும் ஆசிரியைகள் சாறி அணிந்து பாடசாலைக்குச் செல்வது திருப்தி அளிக்கின்றது.

அறநெறி பாடசாலைகள் சிறார்களை எமது பாரம்பரிய தேசிய உடைகளுக்கு பழக்கப்படுத்தி வருவது ஆறுதல் அளிக்கும் விடயம். இவர்களின் இந்த முயற்சி மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். எமது பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இவர்கள் மூலமாக முன்னெடுக்கப்படுவது சிறந்த பயன் கொடுப்பதாக அமையும்.


"
**அறநெறி பாடசாலைகள் சிறார்களை எமது பாரம்பரிய தேசிய உடைகளுக்கு பழக்கப்படுத்தி வருவது ஆறுதல் அளிக்கும் விடயம். இவர்களின் இந்த முயற்சி மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். எமது பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இவர்கள் மூலமாக முன்னெடுக்கப்படுவது சிறந்த பயன் கொடுப்பதாக அமையும்.**
"


கலாசார தலை குனிவை ஏற்படுத்தும் ஐரோப்பிய பாணிகளில் ஆடைகள் அணிவதைத் தடுப்பதற்கு எமது பாரம்பரிய ஆடைகளின் மகத்துவம் பற்றி பாலர் வகுப்பிலிருந்தே மாணவர்களுக்கு போதிக்க வேண்டும். போதிப்பவர்களும் முன்மாதிரியானவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

உலக செம்மொழி என்ற அரிய அந்தஸ்தை தமிழ் மொழி பெற்றுள்ளது என்பதில் பெருமை கொள்கின்றோம். வீட்டில் குழந்தை தாயை மம்மி என்றே அழைக்கின்றது.

குழந்தை பிறக்கும் போதே அம்மா என்று அழுத வண்ணமே பிறக்கின்றது. பசு கன்று ஈனும் போது பிறக்கின்ற கன்றும் அம்மா என்றே அழைக்கின்றது. உயிரினங்களின் முதல் வார்த்தை (அ)ம்மா என்றே ஒலிக்கின்றது.

இயற்கையாகவே இறைவனால் தாய்மைக்கு அளிக்கப்பட்ட வரம் தான் அம்மா என்ற அமுதச் சொல். "கன்றின் குரலும் கன்னித் தமிழும் சொல்லும் வார்த்தை அம்மா. அம்மா" என்ற ஒரு சினிமா பாடல் கூட இதைச் சிறப்பாக விளக்குகின்றது. அதேபோல் அப்பா என்று அழைப்பதைத் தவிர்த்து 'டடி' என்று குழந்தைக்குச் சொல்லி கொடுக்கின்றார்கள். வளர்ந்த பின்னரும் அவ்வாறே உச்சரிக்கின்றனர்.

அம்மா. அப்பா என்ற சொற்களுக்கிருக்கின்ற முழுமையும், இனிமையும். பொருத்தமும், அழுத்தமும், ஆழமும், அன்பின் அடிநாதமும், தனித்துவமும் மம்மி, டடி என்ற சொற்களுக்கிருக்கின்றதா? அம்மாவில் இருக்கின்ற ஓசை நயம் மம்மியில் இருக்கின்றதா? ஏன் அதை வலிந்து குழந்தைகளுக்கு வலியுறுத்தி சொல்ல வைக்கின்றார்கள் என்பதுதான் புரியாத புதிர். இதுதான் ஒருவித நாகரிகம் என்பதே அவர்களின் நினைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு உணவு ஊட்டும்போது பிறமொழி துள்ளிசைகளை போட்டு அவர்கள் கவனத்தை திசை திருப்பி உணவூட்டுகின்றார்கள். உறங்க வைக்கும் போதும் அதே நிலை தான். மெல்லிசை தெரியாமலே அவர்கள் வளர்க்கப்படுகின்றார்கள். சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா, அல்லது மலர்ந்தும் மலராத பாதி மலர் போலே போன்ற தாலாட்டு பாடல் பாடி உறங்கவைப்பதெல்லாம் மலையேறிவிட்டது.

விதம்விதமான இனிமையான குழந்தைகளுக் கான மென்மையான சிந்தை கவரும் பாடல்கள் பல இருந்தும். அதற்கான தொழில் நுட்ப வசதிகள் இருந்தும் அவற்றை கைவிட்டு அன்னிய மொழி துள்ளிசை பாடல்களில் தான் அவர்கள் கவனம் இருக்கின்றது. இந்த ரசனையை இளவயதிலேயே வளர்த்துவிட்டால் அவர்கள் எவ்வாறு? எமது கலாசாரத்தை வளர்த்து பேணுவார்கள்.

இசை என்பது இதயத்தை மென்மைப்படுத்தும் ஒரு அரிய ஔடதம். மேளம் நாதஸ்வரம். புல்லாங்குழல், வீணை என்று எமக்கான இசைக் கருவிகள் எல்லாம் தெய்வீகத்தன்மை பொருந்தியவை. அவற்றின் நாதங்கள் இதயத்தை மென்மையாக வருடுபவை. மேற்கத்திய இசைக் கருவிகள் அவ்வாறல்ல.

எனவே நாகரிகம் என்ற போர்வையில் அன்னிய கலாசாரங்களில் ஆர்வத்தைக் கூட்டி எமது கலாசாரங் களில் அக்கறையற்ற அல்லது ஏனோதானோ? என்ற ஒரு ஆபத்தான நிலைக்கு அள்ளுண்டு போய்க் கொண்டிருக்கின்றோம்.

பெண்களை தெய்வமாக போற்றுகின்ற கலாசாரம் எமக்கே உரித்தானது. சேலை உடுத்து கொண்டை கட்டி அதில் கணவன் மலர் சூடிவிட குங்குமத்துடன் மெட்டி பார்த்து நடந்துவரும்போது, அப்பெண்ணை கையெடுத்து கும்பிடவே தோன்றும். அதுதான் எமது கலாசாரத்தில் பெண்களுக்குள்ள மகிமை.

ஆனால் இன்று பெண்கள் தலைவிரி கோலமாக அன்னிய கவர்ச்சி காட்டும் உடையணிந்து. தலை நிமிர்ந்து நடக்கும்போது பார்ப்பவர்கள் மனதில் தப்பான எண்ணங்கள் வருவது சகஜம். அதனால் ஏற்படும் மோசமான விளைவுகளும் அனேகம்.

ஒரு சமய பெரியார் கூறினார் இளம் பெண்கள் தலைவிரி கோலமாக திரிவது அனர்த்தங்களுக்கான முன் ஏற்பாடு என்று. பாஞ்சாலி தலை விரித்தாள் பாரதப்போர் உருவானது. கண்ணகி தலை விரித்ததால் மதுரையே எரிந்ததையும் ஒப்புவித்தார். இலங்கையில் நடந்த கோர யுத்தத்தையும் சுட்டிக்காட்டினார். நாட்டில் நடக்கும் அனர்த்தங்களுக்கும் இந்த தலைவிரி கோலங்களும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறவும் அவர் தவறவில்லை.



எனவே கலாசார காப்பு என்பது பெண்களின் கையில்தான் இருக்கின்றது. அதைக் கட்டிக் காக்க வேண்டிய பாரிய பொறுப்பும் அவர்களையே சார்ந்து நிற்கின்றது. அதை கைவிட்டு அன்னிய கலாசார கவர்ச்சியில், மூழ்குவது கலாசார தற்கொலைக்கு ஒப்பானது.

தன் மகளோ மகனோ கெட்டுப் போனால் தாய் வளர்த்த வளர்ப்பு சரியில்லை என்றுதான் சமூகம் குற்றம் சாட்டுகின்றது. தாயைப் போல பிள்ளை நூலைப் போல் சேலை என்றுதான் பழியும் வந்து விழுகின்றது. அதில் தந்தைக்கும் பங்குண்டு. அவரும் அந்த பழியில் இருந்து தப்பிக்க முடியாது. எனினும் பழி முழுக்க தாய் மீதே குறிதவறாமல் விழுகின்றது.

அந்தளவிற்கு தாயின் குடும்ப பொறுப்பு உணரப்படுகின்றது. சுற்றி வளைத்துப் பார்த்தால் அந்த தாய் எமது கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங் களுக்கு, மதிப்பும் உரிய பங்களிப்பும். அளிக்கவில்லை என்பதையே உணர்த்தி நிற்கின்றது.

ஒரு தாய் குடும்ப நலனுக்காக இராப் பகலாக இயந்திரமாக உழைக்கின்றாள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை. அதேபோல் எமது கலாசார பாரம் பரியங்களை அடுத்தடுத்த சந்ததிக்கு அப்படியே கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பையும் அதிகளவு அவளே சுமந்து நிற்கின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப்பாலை ஊட்டும் போதே அந்தக் குழந்தைக்கு எமது கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் ஊட்டித்தான் வளர்க்கின்றாள். தாய்ப்பால் ஊட்டுவதையே தவிர்த்துக் கொள்ளும் தாய்மார் உள்ள காலம் இது. அந்தக் குழந்தைகள் பெறுவது வெறும் கௌரவ அரவணைப்புத்தான்.

இயற்கையோடு ஒட்டிப் போகும் நடவடிக்கைகளை தவிர்த்து நாகரிகம் என்ற போர்வையில் எமது கலாசார பாரம்பரியங்கள் எம்மாலேயே சிதைக்கப்படுகின்றன. இக் கட்டத்தில் சமூகம் என்ற ரீதியில் ஒவ்வொருவரும் பொறுப்புக் கூற வேண்டிய சுய சிந்தனை வயப்பட வேண்டும்.

ஒருவரைச் சந்திக்கும் போது கைகூப்பி வணக்கம் சொல்வதே எமது பண்பாடு. ஆயிரத்தில் ஒருவர் கூட இவ்வாறு வணக்கம் சொல்வதில்லை. குட்மோனிங் சொல்லி விட்டு கைலாகு கொடுப்பதே நடைமுறையாகி விட்டது. கொரோனா கொடியதுதான் ஆனால் எமது பாரம்பரிய கைகூப்பும் பழக்கத்தை ஐரோப்பியர்களும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டத்தை அது ஏற்படுத்தவில்லையா? கைகூப்புவதில் உள்ள பாதுகாப்பையும், கைலாகு கொடுப்பதில் உள்ள சுகாதார ரீதியான தாக்கத்தையும் அது வெளிப்படுத்தவில்லையா? எமது பண்பாடென்பது நம்மையும் காத்து மற்றவர் களையும் காப்பாற்றுவதுதான்.

எமது பண்பாடும் நாகரிகமும் எவருக்கும் எந்த மனக் கிளர்ச்சியையும் ஏற்படுத்தாத புனிதம் நிறைந்தது. நடை உடை பாவனை அனைத்திலுமே இது துல்லியமாகப் புலப்படுத்தப்படுகின்றது. மனித நாகரிகத்தின் உச்சத்தைத் தொடுக்கின்றது. எமது கௌரவத்தின் சான்றிதழாக அங்கீகரிக்கப்படுகின்றது.

இதைவிடுத்து விட்டில் பூச்சிகள்போல் அந்நிய கலாசாரங்களில் நாமாக விழுந்து எம்மை நாமே அழித்துக் கொள்ள முனையும் விபரீதத்தில் இருந்து நாம் விடுபடுவது எப்போது?

இன்று தொலைக் காட்சிகளில் காட்டப்படும் நெடும் நாடகத் தொடர்களில் பெண் வில்லி வேடத்திற்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பெண்களின் குணாதிசயங்களுக்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் மிக மோசமாகச் சித்தரிக்கப்படுகின்றது. எம்மால் போற்றப்படும் பெண்களின் மென்மைத் தன்மைக்கு சவால் விடுப்பதாக அமைந்திருக்கின்றது. அத்தகைய நாடகங்களை நாள் தவறாமல் விழுந்தடித்து விரும்பிப் பார்க்கும் பெண்கள் தொகையும் அதிகமே.

பாரதியார் புதுமைப் பெண் பற்றி பொறுப்புணர்வோடு பாடினார். தொலைக்காட்சித் தொடர்களோ புதுமை வில்லிகளை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றது. கைத் தொலைபேசியும் கலாசார சீரழிவுகளில் முதன்மை சாதனமாக அமைகின்றது. குழந்தைகள் முதல் பெரியோர் வரை தனித்தனி கைத் தொலைபேசிகளுடன் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கின்றனர்.

சிலர் அதை பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இளவட்டங்கள் இன்றைய நாகரிகம் எப்படி இருக்கின்றது என்பதை தேடி அறிந்து அதைப் பின்பற்றவே முனைகின்றனர். கலாசார பிறழ்வுகளையும் ரசித்து பார்க்கும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளுகின்றனர். அதனால் அவர்கள் எமது கலாசார விழுமியங்களில் இருந்து விலகிச் செல்வதற்கே எத்தணிக்கின்றனர்.

இன்று தொலைக்காட்சியும் சினிமாவும் நல்ல பல விடயங்களைச் செய்தாலும் கூட எமது கலாசார பாதிப்பிற்கும் பங்களிப்புச் செய்கின்றன என்பது பகிரங்கக் குற்றச்சாட்டு. அன்னிய கலாசாரங்களை இறக்குமதி செய்து காட்சிப்படுத்துவதிலும் அவர்களுக்குள் வியாபாரப் போட்டி நிலவுகின்றது. அவை பலதார திருமணங்கள் பற்றியே கதைகளை பின்னுகின்றன. இது எமது அடிப்படை பண்பாட்டையே கொச்சைப்படுத்துவதாக அமைகின்றது.

உலக மயமாக்கலும், வியாபாரப் போட்டியும். இயந்திர மயமாக்கப்பட்ட வாழ்க்கை முறைமையும் எமது கலாசாரங்களிலும் தாக்கத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டன. இதன் விளைவு எதிர்காலத்தில் மனிதன் மந்தை கூட்டமாக மாற வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும். ஒவ்வாத நாகரிக மோகங்களால் மனிதன் என்ற தனித்துவம் மழுங்கடிக்கப்பட்டு விடும்.

எமக்கென்று தனித்துவமான கலாசார விழுமியங்கள் இருக்கும்போது மற்ற இனங்களின் கலாசாரங்களை நாமாகவே உள்வாங்குவதென்பது முற்றுமுழுதாக எமது பலவீனமே. மற்ற இனங்களின் திணிப்பாகவோ நிர்ப்பந்தமாகவோ இதை நாம் கருத முடியாது.

எனவே எமது இனத்தின் கண்களை எமது விரல்களாலேயே குத்துவது போன்ற குறித்த கலாசார மாற்றங்களை தாமாக உணர்ந்து அவற்றுக்கு விடை கொடுக்க கலாசார மாற்றங்களை பின்பற்றுவோர் முன்வர வேண்டும். எமது கலாசாரங்களின் பெறுமதியை அவர்கள் உணரும் வகையிலான விழிப்புணர்வுகள் தொய்வின்றி தொடர வேண்டும்.

**- ரவிப்ரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்விற்கு

## உணவாகவும் மருந்தாகவும் பயன்படும் மூலிகைகள்



**"மலமது சிக்கி நின்றால் வாதமே அதிகமாகும் - உடல்**
**பலமாதம் சூடு கண்டால் பகல் பித்தம் அதிகமாகும்**
**சலமென உடல் குளிர்ந்தால் சதிசேடம் அதிகமாகும்**
**நலமுறை இதுவே என்பர் நரம்பொன்றில் நாடிதானே"**

இப்பாடல் வரிகள் மூலம் நோய் நொடி அறிய முடியும். மனித வாழ்விற்கும் அவனது ஆரோக்கியத்திற்கும் அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் வீடு மனையிலும் காரியாலயங்களிலும் மூலிகை வளர்ப்பது சிறப்புடையதாகும். இறைவன் உலகைப் படைத்து உயிர்களையும் படைத்து உயிர்களுக்கு ஏற்படும் நோயையும் கண்டுபிடித்து அந் நோய்களை குணப்படுத்தும் மூலிகைகளையும் வெளிப்படுத்தி 18 சித்தர்களையும், மகான்களையும் உருவாக்கியுள்ளார். அதன் அடிப்படையில் மனிதர்களாகிய எமது உடலில் 4448 நாடி நாளங்கள் உண்டென்றும், 4448 நோய்கள் காணப்படுவதாகவும் அதில் 700ற்கு மேற்பட்ட நோய்கள் கண்டிப்பாக மனிதனை தாக்கும் என்று கண்டு பிடித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் உணவே மருந்து மருந்தே உணவு எனும் தாரக மந்திரத்திற்கமைய இம் மண்ணுலகில் காணப்படும் புல் பூண்டு மரம் செடி கொடி அனைத்தும் ஏதோ ஒரு வகையில் உணவாகவும் மருந்தாகவும் காணப்படுகிறது. அதன் அடிப்படையில் நாம் வசித்து வரும் வீட்டிலும் காரியாலயங்களிலும் மூலிகைத் தோட்டம் அமைத்து வாழ்ந்தால் நோயற்று வாழ்வதுடன் சுற்றாடலும் பாதுகாக்கப்படும். இதன் அடிப்படையில் மூலிகை சிலவற்றை நோக்குவோம். இம் மண்ணுலகில் 21/2 லட்சம் மூலிகைகள் உண்டு என்றும் சித்தர்கள் ஆய்வு கூறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

» **இஞ்சிக் கிழங்கு** தோலை நீக்கி தேனுடன் குடிக்கலாம். சிறு துண்டுகளாக அரிந்து தேன் சேர்த்து இஞ்சி முட்டி தயார் செய்து சாப்பிட்டு வருவதால் சகல வாய்வுத் தொல்லைகளும் நீங்கும். இஞ்சியை சுட்டு சம்பலாக அரைத்துச் சோற்றுடன் இடையிடை சாப்பிட்டு வருவதால் குன்ம வாய்வு நீங்கும். இஞ்சித் தேனீர் உடலுக்கு சிறப்புடையது.

» **மிளகு** உணவுக்காகவும் நோய்க்காகவும் பயன் படுத்தப்படுகின்றது. கறி சமைக்கும் போது மிளகுத் தூள் சேர்த்து சாப்பிடுவதால் உடல் குளிர்ச்சி பெறும். சகல விஷத்துக்கும் மிளகை அவித்து குடிக்க விஷம் நீங்கும். தினமும் மிளகுத் தூள் காலையில் சாப்பிட்டு வர சளித்தொல்லை நீங்கும். இவை வாத நோயை குணமாக்கும் சகல நோய் நிவாரணியாகும்.

» **திப்பிலி** அதன் காய், இலை நோய் நிவாரணி அனைத்து வைத்தியத்திற்கும் சேர்க்கப்படுகின்றது. அதன் இலையை சாறு பிளிந்து தேன் சேர்த்து குடிக்க சளி நீங்கும். வருடப் பிறப்பிற்கு கசாயமாக காய்ச்சி மருத்து நீர் வைக்கும் போது உணவாகவும் குடித்து தலை உடலில் வைப்பதால் புது வருடம் புதுப் பொலிவு பெறுகிறது. உணவிற்கும் பயன் உடையது.

» **வெள்ள வெங்காயம், சின்ன வெங்காயம்** உணவா கவும் மருந்தாகவும் பயன்படுகிறது. இரண்டையும் ஒவ்வொன்று காலையில் சப்பி சாப்பிட்டு சுடு நீர் குடித்தால் கொலஷ்ரோல் கொழுப்பைக் கரைக்கும். இரண்டுடன் உப்பு சேர்த்து சப்பி சாப்பிட்டு சுடு நீர் குடிப்பதால் உள்நாக்கு தொண்சில் வீக்கம் குறையும். வெள்ளப்பூடு நல்லெண்ணெயில் பொரித்து சாப்பிட்டால் மூட்டு வீக்கம் குறையும். பூடு வெங்காயம் உணவில் சேர்ப்பது மிக நன்று.

» **சீரகம்** உடல் சீராக்கி வெந்தயம், கடுகு, ஓமம், ஏலம், கறுவா, கராம்பு, மஞ்சள், கடுக்காய், நோய் நிவாரணியாகும். வாதம், பித்தம், கபம் சம்பந்தமான நோய்கள் மனிதர்களுக்கு ஏற்படாமல் தடுக்கும்.

» **முருங்கை கீரை** இதனை எடுத்துக் கொண்டால் அதன் இலை. பூ, காய், வேர் பிசின் மருத்துவக் குணமும் உணவாகவும் பயன்படுத்தப்படுகிறது. இலை உணவு இரும்புச்சத்துடன் ஏற்படும் கட்டிக ளை கரைக்கும் பூவை பாலில் போட்டு காய்ச்சி குடிப் பதால் உடல் சக்தி பெறும். பிசின் பாலுடன் காய்ச்சி குடிக்கலாம். ஆண்மை அதிகரிக்கும்.

» **தவசி முருங்கை இலை** உணவுக்கு பயன்படுத்து வதுடன் விஷத்துக்கு அரைத்து மிளகு வேர்கொம்பு சேர்த்து பாலில் குடிக்கக்கொடுத்து அரைத்துப் பூசுதல். இது இரும்புச்சத்து நிறைந்தது புற்று நோயைத்தடுக்கும்.



» **மணித்தக்காளி** பருப்புடன் சேர்த்து பால் கறி வைத்து சாப்பிட்டு வருவதால் குடல் புண் நோய் குணமாகும். அதன் பழம் சாப்பிட்டு வருவதால் நாக்குப் புண், உதட்டு வெடிப்பு மாறும். தொடர்ந்து சாப்பிட்டால் உடலில் கட்டிகள் வராது.

» **குப்பைக்கீரை:-** இக் கீரையை பொன்மேனி என்று கூறுவார்கள். இதை சாப்பிட்டு வருவதால் உடல் பொன்னிறமடையும். அத்துடன் நரம்பு மண்டலம் வலுப்பெறும். சொறி சிரங்கை குணப்படுத்தும்.

» **முள்ளுக்கீரை:-** சிறு நீரைப் பெருக்கும். குடல் புண்ணை அகற்றும் முள்ளுக் கீரையை காயவைத்து எரித்து மஞ்சள் சிறிது சேர்த்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து சொறி, சிரங்கு படைகளில் பூசி வர நோய் மாறும்.

» **தேங்காப்புக் கீரை:-** (கல்லுறுட்டி) இதனை சாப்பிட்டு வருவதகால் கிட்னி, சிறுநீர் பிரிவில் ஏற்படுகின்ற படிவுகளை வெளியேற்றுகின்றது. இக் கீரையை காயவைத்து தேநீராக குடித்து வருவதால் சிறுநீர் கல்லை உறுட்டி வெளியேற்றும்.

» **முடக்கொத்தான்:-** கீரை முடக்கி நிமித்தி எனப்படும் இக் கீரை சாப்பிட்டு வருவதால் உடலில் ஏற்படும் குத்துக் கடுப்பு விலகும். உடலில் ஏற்படும் மூட்டு வாதம், வாத நோய் மூட்டு வலி குறையும்.

» **மாம்பாஞ்சான் கீரை:-** ஒடுவடக்கி எனப்படும் இக் கீரையை உணவாக சாப்பிட்டு வருவதால் குடல் புண் காயங்கள் குணப்படும். வெட்டுக் காயங்களுக்கு மஞ்சள் வேர்க்கொம்பு சேர்த்து இடித்துக் கட்ட காயம் குணமாகும்.

» **குறிஞ்சாக் கீரை:-** இக் கீரையை சாப்பிடுவதால் உடலில் காப்பு தன்மை ஏற்பட்டு வைரஸ் கிருமியி னால் ஏற்படும் காய்ச்சல் தடுக்கப்படுகின்றது. இதன் வேர் விஷம் சம்பந்தப்பட்ட எல்லா விஷத் துக்கும் மிளகு பூண்டு வேர்க்கொம்பு சேர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைத்து பாலில் கொடுக்க விஷம் நீங்கும் சீனி வருத்தம் குறையும்.

» **பொன்னாங்கன்னிக் கீரை** உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது. பொன்னாங்கன்னிக் கீரைச் சாறு எடுத்து நல்லெண்ணெயில் காய்ச்சி தைலமாக தலைக்கு வைப்பதால் கரப்பான் நோய் குணமடையும். கண் பிரகாசம் பெறும்.

» **மூக்கிரட்டை கீரை** இதனை சாப்பிட்டு வருவதால் உடல் உஷ்ணத்தைக் குறைப்பதுடன் அதன் கிழங்கு, சிறுநீரகம் சம்பந்தமான எல்லா வகையான நோய்களையும் கட்டுப்படுத்தும். எரிவு கடுப்பு நோய் குணமாகும்.

» **தூதுவளைக் கீரை** இதன் பூ, காயை உணவாக சமையல் செய்து சாப்பிடுவதால் குழந்தைப்பேறு மலடை நீக்கும். இதன் இலையை துவைத்து கஞ்சாகக் காய்ச்சி பனை வெல்லம் சேர்த்து குடித்து வர சளி இருமல் கோளாறு நீங்கும். சளி நிவாரணியாகும்.

» **மஞ்சள்** பலவகை உண்டு. விரல் மஞ்சள், குண்டு மஞ்சள், பலா மஞ்சள், காட்டு மஞ்சள், மர மஞ்சள், கஸ்தூரி மஞ்சள் என்ற பலவகை மஞ்சள்களும் உணவாகவும் மருந்தாகவும் பயனுடையது.

» **சித்தரத்தை, பேரரத்தை, சித்த மட்டி** ஆகியவற்றின் வேர் மிளகு, பூடு சேர்த்து ஊறல் போட்டு குடிப்பதால் சளி இருமல் குத்துக்கடுப்பு காய்ச்சல் குணமாகும். உடல் வலி நிவாரணியாகும்.

» **கற்பூரவள்ளி** இலைச் சாற்றை தேன் சேர்த்து ஒரு மண்டலம் 48 நாள் குடித்து வருவதால் சளி இருமல் கோளாறினை குணமாக்கும். உப்புக் கலந்தும் சாப்பிடலாம்.

» **ஆடா தோடா சாறு** சளி இருமலைக் குணப்படுத்துவதுடன் அதன் இலையை மூட்டில் ஏற்படும் வாத வீக்கத்தில் கட்டி வர வாத நோய் குணமாகும். சளி வாத நிவாரணியாகும். வாத நாராயணி கறி வைத்துச் சாப்பிடுவதுடன் வாதத்திற்கு மூட்டுக்களில் கட்டிவர நோய் மாறும்.

» **சண்டி இலை** சுண்டல் செய்து சாப்பிடுவதுடன் மூட்டு வாதத்திற்கு வாட்டிக் கட்ட நோய் குணமாகும் இலெட்சை கட்டை உடல் வாதம் நீங்கும்

» **பிரண்டை** உடைந்த எலும்பை ஒட்டச் செய்வதுடன் அவித்து சம்பல் செய்து சாப்பிட்டால் எலும்பு வலிகள் நீங்கும்.

» **கற்றாளை ஜெல்** இதனை சாப்பிடுவதானால் ஏழு முறை நீரில் கழுவ வேண்டும். பனை வெல்லம் தேன் சேர்த்து சாப்பிட்டு வருவதால் வாதம் பித்தம் சூலம் நோய் நீங்குவதுடன் வெளியில் ஏற்படும்



கட்டி நெருப்புக் காயம் சொறி சிரங்கு நீங்கும். தோலில் ஏற்படும் அனைத்து நோய்களையும் குணமாக்கும்.

» **அறுலோட் (கூவான் கிழங்கு)** இக் கிழங்கு வயிற்றுக் கடுப்பு வயிற்றுளைவு நோய்க்கு மாவாக்கி கூளாக்கி தேன் சேர்த்து கொடுப்பதால் நோய் குணமாவதுடன் உடல் பலமடையும்.

» **கருணைக் கிழங்கு** நல்லெண்ணெயில் வதக்கி சாப்பிட்டு வருவதால் மூலநோய் குணமாகும். மூலத்தில் ஏற்படும் அனைத்து வீக்கமும் குணமடையும். இரத்த மூலம் நீங்கும்.

» **நாயுருவி, செந்நாயுருவி, வெண்ணாயுருவி** இலையை சகல விஷக் கடிக்கும் கட்ட விஷக்கடி நீங்கும். அதன் அரிசியை பாலில் போட்டுக் காய்ச்சி தேன் சேர்த்துக் குடிக்க உடல் பலமடையும். அதன் வேரால் பல் துலக்கி வர முகவசிகரம் ஏற்படும். இது வசிகர மூலிகையாகும்.

» **தொட்டாச் சுருங்கி** இலையை அரைத்து பசும் பாலில் கொட்டப்பாக்களவு பாலில் கரைத்து தேன் சேர்த்து குடித்து வர குடல் புண் மாறும். இலை மஞ்சள் வேர்க்கொம்பு சேர்த்து அரைத்து சொறி சிரங்கில் பூசி வர நோய் குணமடையும்.

» **கீழ் காய் நெல்லியை** அரைத்து கொட்டப்பாக்களவு பசும் பாலில் கலக்கி தேன் சேர்த்துக் குடித்து வர மஞ்சள் காமாலை காய்ச்சல் நீங்குவதுடன் தலையில் அரைத்து பூசுவதால் பித்த நோய் கண் நோய் நீங்கும்.

» **முடிதும்பை, குப்பைமேனி** இரண்டு கீரைவகையுடன் சிறிது சுண்டல் செய்து சாப்பிட்டால் சொறி சிரங்கு மாறும். குப்பை மேனி இலையை பூனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் விஷத்திற்கு பூடு மிளகு வேர்க்கொம்பு முடிதும்பை சேர்த்தரைத்து தேங்காய் பாலில் கொடுக்க நோய் குணமாகும்.

» **நன்னாரிவேர்** தேநீர் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுத்துகின்றது. அதை அரைத்து பாலில் குடிக்க எலி விஷம் நீங்கும். இலையை மஞ்சள் சேர்த்து அரைத்து எலிக்கடி வீக்கத்தில் பூச வீக்கம் குணமடையும். நன்னாரிவேர் தேநீர் உடலுக்கு புத்துணர்வு மிகுந்தது.

» **துளசி** கருந்துளசி, வெண்துளசி, செந்துளசி எனப் பலவகையுண்டு. இறை வழிபாட்டுக்குரியது. சளி தொல்லைக்கு தேன் பனை வெல்லம் சேர்த்துக் குடிக்கலாம். விஷக்கடிக்கு இதன் சாற்றில் மிளகு சேர்த்துக் கொடுக்கலாம்.

» **தென்னை** இதனை எடுத்துக் கொண்டால் அதன் ஓலையை சுட்டு கரியை நல்லெண்ணெயில் குழைத்து உடலில் ஏற்படும் புண்ணில் பூசி வர காயம் ஆறும்.

» **இளநீர்**:- வழுவல் பிடியாத இளநீரை தினமும் காலையில் குடிப்பதால் பித்தப்பையில் உள்ள கல் கரையும். இளம் தேங்காய் கட்டியை சப்பி கிழங்குடன் சாப்பிடுவதால் உடல் சக்தி பெறும் உருக்கிய எண்ணெய் சமையலுக்கு நன்று. குரும் பட்டியை தேசிப்புளி மஞ்சள் சேர்த்து அரைத்து வண்டு, தேனீ, குளவி விஷத்திற்கு பூசலாம்.

» **வாழை** பலவகை உண்டு. செவ்வாழைப்பழம், குழந்தைப் பேறை கொடுக்கும். இதர வாழை மடல், தண்டுச்சாறு விஷத்தை தடுக்கும். மொந்தன் வாழை கிட்டினி கல்லைக் கரைக்கும். பூச்சாறும் கல்லைக் கரைக்கும். வாழை இலையில் உணவு தொடர்ந்து சாப்பிட்டு வர கண் பிரகாசிக்கும். காய் கறி சமைத்து சாப்பிட்டால் மலத்தை வெளி யேற்றும். வாழைப்பழம் ஊட்டச்சத்து நிறைந்தது.

» **கரும்பு** அதன் சாறு வயிற்றுப் புண்ணைச் சுகமாக்கும். நெஞ்சு சளியை அகற்றும் கரும்பை சப்பி சாப்பிடுவதால் பல் சுத்தமடையும். இதன் சக்கையை எரித்து சாம்பலை நல்லெண்ணெயில் குழைத்து புண்களில் பூசலாம்.

» **மாமரம்** அதன் பழம் உடலுக்கு மிகுந்த நன்மை யுடையது. குழந்தைகள் கற்பிணித்தாய் மாருக்கு போசாக்கு நிறைந்த உணவு மாம்பிசின் சுண்ணாம்பு சேர்த்து நல்லெண்ணெயில் குழைத்து கால் பித்த வெடிப்பில் பூசிவர பித்த வெடிப்பு மாறும். மாவிலை மங்கலகரமான இலையாகும்

» **வெற்றிலை** லெட்சுமி கரம் நிறைந்த பொருளாகும். இறை வழிபாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. தாம்பூலமாக சாப்பிடுவதால் உணவு சமிபாடு அடைவதுடன் முகவசிகரம் ஏற்படுகிறது. விஷத்திற்கு வெற்றிலைச்சாறு மிளகுடன் சேர்த்துக் கொடுத்தால் விஷம் நீங்கும். வெற்றிலை விஷ நிவாரணியாகும்.



» **மாதுளம் பழம்** சாப்பிட்டு வருவதால் ஆண் பெண் மலடு நீங்கும். உடல் உஷ்ணம் குறையும். இதன் தோல் மிளகுடன் சேர்த்து கசாயமாக குடிப்பதால் காய்ச்சல் குணமடையும். இதன் வேர் உப்பு, மஞ்சள் சேர்த்து கழுவ கால் கையில் ஏற்படும் சொறி சிரங்கு குறைவடையும்.

» **அன்னாசிப் பழம்** வயிற்றுக் கிருமிகள் புழுக்களை வெளியேற்றும் அன்னாசிக்காய் கற்பத்தடையை ஏற்படுத்தும். கலைக்கும், உடலுக்கும் சக்தி உடையது.

» **விளாம்பழம்** உடலுக்கு சக்தி உடையது. சகல போசாக்குடையது. இன்ப உணர்வுகளைக் குறைக்கும் நரம்புகளை வலுப்படுத்தும். உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து நிறைந்தது.

» **கொய்யாப்பழம்** சகல விற்றமின்ஸ் நிறைந்த பழம் உடலுக்குத் தேவையானசக்தியைக் கொடுக்கும். வாந்தி பேதி மலர்ச்சிக்கலைக் குறைக்கும்.

» **பப்பாசிப்பழம்** குடல் புண்ணை குணப்படுத்துவதுடன் அதன் பால் சொறி, சிரங்கை குணமாக்கும். அதன் இலைச்சாறு டெங்கு வைரஸ் காய்ச்சலைக் குணப் படுத்தும். மலத்தை வெளியேற்றும்.

» **முந்திரியம் பழம்** குடல் புண்ணை குணப்படுத்து வதுடன் மலத்தை வெளியேற்றி மலச்சிக்கலைத் தடுக்கும்.

» **நாவல் பழம்** இதய நோயை குணப்படுத்துவதுடன் இரத்தத்தை சுத்தி கரித்து செயற்பட வைக்கிறது. இதன் விதை சர்க்கரை நோயைக் குறைக்கும் தன்மையுடையது.

» **வெள்ளரிப்பழம்** உடல் உஷ்ணத்தைக் குறைப்பதுடன் குடல் புண்ணைக் குறைக்கும் அதன் விதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுநீர் எரிவைத் தடுக்கும். தொப்புளில் அரைத்துப் பூசுவதால் எரிவு நீங்கும். காய் சமையலுக்கு உகந்தது.

» **அன்னமினா, சீத்தாப் பழம்** இதய நோய்க்கு சிறப்புடையதாகும். இதயம் சிறப்பாக தொழிற்பட சிறந்த பழமாகும். அதன் விதையை மஞ்சள், உப்பு சேர்த்து தேசிப்புளியில் அரைத்து சொறி சிரங்கில் பூச குணமடையும்.

» **திராட்சைப் பழம்** பொட்டாசியம் இரும்புச் சத்து நிறைந்த பழமாகும். நரம்புத் தளர்ச்சியுடையவர் இரவில் உணவிற்குப் பின் இதன் சாற்றுடன் தேன் சேர்த்து சாப்பிட நரம்பு தளர்வு நீங்கும். நடைப் பயணம் செய்பவர்கள் (யாத்திரை) உலர் திராட்சை சாப்பிடலாம். பச்சை திராட்சை மிக நன்று.

» **அப்பிள் பழம்** உடலுக்கு சிறந்ததாகும். உடலுக்குத் தேவையான விற்றமின், இரும்புச் சத்து நிறைந்தது. பச்சை அப்பிள் மிகவும் நன்று.

» **தோடம்பழம்** விற்றமின் சி நிறைந்தது. பித்த மயக்கத்தை தடுக்க வல்லது. வெயில் காலத்தில் பித்த மயக்கத்தை நீக்கும் சிறந்த பானமாகும். கர்பிணித் தாய்மார் பழச்சாற்றுடன் சிறிது உப்பு சேர்த்து குடித்து வர மயக்கம் தீரும்.

» **தேசிப்பழம்** மங்கலகரமான பொருள் விற்றமின் சி நிறைந்தது. பித்த நோயைக் குணமாக்கும். ஊறு காயாக பழம் சோற்றுடன் சிறிது உப்பு சேர்த்து தேங்காய் பாலுடன் சாப்பிட்டு வர பித்தம் சம்பந்தப் பட்ட எந்த நோயும் அணுகாது.

» **பேரீச்சம்பழம்** உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்து நிறைந்தது. 05 பழத்தை பாலுடன் சேர்த்துக் காய்ச்சி இரவில் சாப்பிட்டு வர உடல் சக்தி பெறும். நரம்புகள் வலுவடையும்.

» **சிறியாள் நங்கை** விஷம், சீனி, வாத நோயை நீக்கும். மலைவேம்பு குழந்தைப் பேறைக் கொடுக்கும்

» **வண்ணா அவுரி** விஷத்தைக் கட்டுப்படுத்தும்

» **வெள்ளெருக்கு** விஷத்தை கட்டுப்படுத்தும்.

» **விஷ முருங்கை** விஷத்தை கட்டுப்படுத்தும்.

» **இலாமிச்சை** பல நோய்களை குணப்படுத்தும்.

» **கவின் தும்பை** வெட்டுக்காயத்தை குணப்படுத்தும்

» **சுண்டை** சீனி கொழுப்பைக் கட்டுப்படுத்தும்

» **வல்லாரை** ஞாபகசக்தியை அதிகரிக்கும். கண்ட மாலையை கட்டுப் படுத்தும்.

» **கடம்பு** வாதத்தை கட்டுப்படுத்தும்.

» **பேமிரட்டி** வாதத்தை கட்டுப்படுத்தும்.

» **ஊமத்தை** முழங்கால் வாதத்தை கட்டுப்படுத்தும்.

» **பெரு மருந்து கொடி** கொடிய நோயை கட்டுப் படுத்தும்.

» **வெட்டொட்டி** வெட்டுக் காயத்தை குணப்படுத்தும்.

» **பால் சோத்தி** பால் உண்ணியை நீக்கும்.

» **நறுவுலி** நரம்பை ஒட்டும், நெஞ்சுப்புண்ணை குணப்படுத்தும்.

» **சிவனார்வேம்பு** குழந்தைப்பேற்றை ஏற்படுத்தும்.

» **யானைவணங்கி** விஷத்தைக் கட்டுப்படுத்தும்.

» **வெண்செங்கோட்டம்** இன்சுலினை ஏற்படுத்தும்.

» **பொன்னவரை** சொறி சிரங்கை கட்டுப்படுத்தும்.

» **பங்கம்பானை** என்ன பாம்பு விஷம் என்பதை இலகுவாக அறியமுடியும்.

» **புளிய இலை** கண் நோயை குணப்படுத்தும்.

» **அனலடக்கி** கண் அனலை அடக்கும்.

» **கிளிசெறியா** வழு ஒடுக்காயத்தை குணப்படுத்தும்.

» **பழப்பாசி** கட்டைக் குணப்படுத்தும்.

» **கரடியநாயகம்** கேன்சர் கட்டியை கரைக்கும்.

» **முள் விழுங்கி** முள்ளை வெளியேற்றும்.

இவ்வாறு மூலிகைகளை உணவாகவும் மருந்தாகவும் காரியாலங்களிலும் வீடுகளிலும் வளர்ப்பதால் காபணீரொட்சைட்டை உள்வாங்கி ஒட்சிசனை வெளியேற்றுகிற இச் செயற்பாடு நடை பெறுவதால் சுற்றாடல் பாதுகாக்கப்படுகிறது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு நாங்களும் மூலிகைகளை வளர்த்து உணவாக வும் மருந்தாகவும் பயன்படுத்தி சுற்றாடலை பேணி எதிர்காலச் சந்ததிக்கு விட்டுச்செல்வோம்.

"மறுப்பதுடல் நோய் மருந்தென வாகும்
மறுப்ப துள நோய் மருந்தெனச் சாலும்
மறுப்பது தினிநோய் வராதிருக்க
மறுப்பது சாவையும் மருந்தெனலாமே"

**கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்** JP
வித்தகர், சோதிடர், வைத்தியர்
குருக்கள் மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இயற்கையினுடைய ஒரு உற்பத்தி யாகும். ஐம்பூதங்களின் தொகுப்பே இயற்கை யின் தோற்றமாகும். நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பூதங்களாகும். இவற்றில் பல உயிரினங்கள் தோன்றினாலும் மனிதன் சற்று வித்தியாசமானவன். அதாவது சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். பகுத்தறிவு உடையவன். நல்லது கெட்டது எது என்று பகுத்தறிந்து அதன்படி நடக்கும் ஒரு பெறுமதியான ஆற்றல் மனித சக்திக்கு கிடைத் துள்ளது. ஆன்மாவின் மனம் பகுத்தறிவு உள்ளபடி யால் வித்தியாசமான ஒரு உயிரினமாக மாறுகிறான். இயற்கையோடு கட்டுப்பட்டு தனது வாழ்க்கையை நடத்தினான். ஆதி காலத்தில் அறிவு இருக்கவில்லை. ஆதலால் சூழலுடன் இணைந்த வகையில் இயற்கை யுடன் கட்டுப்பட்டு வாழ்ந்தான். தன்னைத்தானே கட்டுப்படுத்தாமல் கண்டவற்றையெல்லாம் உண்டு விட்டு தான் போன போக்கில் வாழ்ந்து வந்தான். அதாவது பிழையானவற்றை சாப்பிட்டதால் அழிவு களை கொண்டு சென்றது. நல்லவற்றை உண்டால் நல்லவை கிடைக்கும் என்ற நல்ல கருத்துக்கள் தோன்றுகின்றது.

மேலும் இயற்கையில் மனிதப் பிறவி பற்றி நாம் எடுத்து நோக்கினால்

"அன்பின் உள்ளான், புறத்தான் உடலாயுள்ளான்,
முன்பின் உள்ளான் முனிவர்க்கும் பிரான்
அவன் அன்பினுள் ஆகி அமரும் அரும் பொருள்
அன்பிலுள்ளார்க்கே அணை துணையாமே."

(திருமந்திரம் - 279)

இறைவன் முனிவர் பிரான் அன்பகத்தில் இருக்கிறான் புறத்தே இருப்பது பஞ்ச பூதக் கூடு தானே பஞ்ச பூதங்களும் அட்ட மூர்த்தியின் வடிவங் களேயாம். பூதங்கள், தன் மாத்திரைகள், பொறி புலன்கள், அந்தக் கரணங்கள் ஆகிய இயற்கையுடன் அவனே அவன் உலகாய் உலக நாதனாய் ஜீவ கோடிகளாய் அந்தர்யாமியான் தோன்றாத்துணையாய் இருந்து உய்விப்பான். உலகத் தோற்றத்திற்கு முன்னும் உலக அழிவிற்கு பின்னும் அழியாது நிற்பவனை யாரொருவன் அன்பு கொண்டாரோ அவரிடம் இறைவன் பொருந்தி துணையாவான். ஆகவே அன்புடன் இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

இவ்வாறு இயற்கையிலே இறைவனால் படைக்கப்பட்டு ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதனை வேறுபடுத்தி பரிணாம வளர்ச்சியினால் படிப் படியாக முன்னேறி நவீன உலகுக்குள் கால் பதிக்கின்றான் மனிதன். இவன் தன்னைத்தானே சூழவுள்ள சூழலைப் புரிந்து கொள்ள முனைந்தான்

# எமது சுகத்தை நாமே சம்பாதிக்க வேண்டும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக விஞ்ஞானம் அதன் அறிவுகள் தோன்றின. இந்த வேளையில் தான் மனித உடலையும் பற்றி புரிந்து கொள்ளத் தொடங்குகின்றான். மனித உடல் அமைப்பைப் பற்றிய விடயம் மருத்துவம் என்பவற்றை அறிகின்றான். இக்கட்டத்தில் தான் "அங்காரி பாதம்" அப்போது தெரிந்தது. மனித உடல் அமைப்பை இனங்கண்டான். உதாரணமாக இதயம், சமிபாட்டு தொகுதி, குடல், ஈரல், மூளை, சுவாசத் தொகுதி, சிறுகுடல், சிறுநீரகம், பித்தப்பை. பித்தக்கான் இவ்வாறு இனங்கண்டான். இந்த வேளையில்தான் உணவு பற்றிய அறிவு அவனுக்கு கிடைக்கின்றது. இத்தகைய உணவுகள் இரத்தத்துடன் கலந்து நல்ல அம்சங்களையும் கெட்ட அம்சங்களையும் அனுபவத்தினூடாக எது எது சாப்பிடலாம் என அறிந்தான் இவை மட்டுமல்ல தன்னுடைய உள்ளத்தையும் அறிந்தான். இவற்றைப் பற்றிய ஆய்வுகளும் இடம் பெற்றன. சமயப் பாடல்கள் ஒழுக்க விழுமியங்கள் உளத்தைப் பற்றி எடுத்துக் காட்டுகிறது.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்று மனிதப் பிறவியின் சிறப்பை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார் ஔவைப் பிராட்டியார். இத்தகைய மனிதப் பிறவியை பயனுள்ள வகையில் நல்லது கெட்டது அறிந்து நாம் வாழ வேண்டும் அப்போது தான் உடலைப் பாதுகாக்கலாம். உடலை சுகமாக வைத்தால் தான் உள்ளம் நன்றாகவும் சீராகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். அப்போதுதான் கொடிய தொற்றா நோய்த் தாக்கத்திலிருந்து விடுபடலாம். மனிதனுக்கு உள்ளம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்போது மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழலாம்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளப் பிரானார்க்கு வாய் கோபுரவாசல் தெள்ளத்
தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"
(திருமந்திரம் 1823)

பக்குவமுடைய மனித உடல் இறைவனின் ஆலயமாகவும் அவர்களின் உயிர் சிவலிங்கமாகவும் இருப்பதைக் காட்சிப்படுத்துகின்றார். திருமூல நாயனார். இத்தகைய விடயங்களை நோக்குகின்ற போது உடலையும் உள்ளத்தையும் மனிதன் தானே உணர்ந்து தமக்கு சுகம் தரக் கூடிய விடயம் என்ன? சுகம் தராத விடயம் என்ன? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சுகத்தை தரக்கூடியவைகள் வீடு (உறைவிடம்) நல்ல மனைவி, மக்கள், நல்ல சூழல், நல்ல சமூகம் என்பன இருத்தல் வேண்டும்.

எமது சுகம் உடல் சுகம், உளச் சுகம், சூழல் சுகம், சமூக விழுமிய சுகம் என்பன கிடைக்க வேண்டும். உடல் சுகத்தை யார் தேடிக் கொள்ளல் அவற்றினை மனிதனே தேடிக் கொள்ள வேண்டும். சூழலுக்குத் தேவையான சாப்பாடு தெரிவுகள் சக்தியைத் தருகின்றது. தேவையற்றவற்றால் தீமை பயக்கும் என்ற நிலைக்கு மனிதன் தள்ளப்படுகிறான். சூழலுக்குத் தேவையான சாப்பாடுகளை சரியாக தெரிவு செய்வதன் மூலம் சக்தி கிடைக்கின்றது. அவற்றை தேடி அறிந்து சாப்பிட்டால் வைத்தியர்கள் ஆலோசனை கூறினாலும் நாங்களே தேடி அறிந்து கொண்டால் இவற்றின் மூலம் நன்மைகள் கிடைக்கின்றன.

உளச் சுகம் பற்றி நாம் நோக்கும் போது நமக்கு நாமே அவற்றை உருவாக்க வேண்டும். அதாவது நமக்குத்தான் தெரியும் என்ன பிரச்சினைகள் நமக்கு இருக்கின்றது என்பது இவற்றிற்கு நாமே இவற்றிலிருந்து மீள வேண்டும். அதாவது மனிதனுடைய அங்கங்களில் ஒரு நபருக்கு கையோ அல்லது காலோ உடைவு ஏற்பட்டு விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் அந்த மனிதன் தனது உள்ளத்தால் தேர்த்திக் கொள்ள வேண்டும். சிலவேளையில் இரு காலும் அவனுக்கு இல்லாது போனாலும் மேல் உடம்பு பகுதி உள்ளது என நினைக்க வேண்டும். இத்தகைய நிலையில் உயிராவது கிடக்கின்றது என்று மனதை தன்னைத் தானே உணர்ந்து அத்தகைய தாக்கத்திலிருந்து விடுபட வேண்டும் அதாவது "மனம் கொண்டதே மாளிகை" மனமே எல்லாவற்றிற்கும் காரணம் உளச் சுகாதாரத்தை நாமே பேண வேண்டும்.

உடம்பால் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே
(திருமந்திரம் 724)

உடம்பு அழிந்தால் உயிரும் அந்த உடலை விட்டு நீங்கி விடும் பின்னர் உயிருக்கு உற்ற துணையான மெஞ்ஞானமாகிய பரம் பொருள் சிந்தனையில் அவர்களால் ஈடுபடவும் இயலாது எனவே உடம்பை அழியாது காத்திருக்கும் வழியைக் காண உடம்பிலுள்ள உயிரைக் காப்பாற்றி வளர்த்து வரலானேன் என்று உடலையும், உயிரையும் பற்றி அழகாக சொல்லப் படுகின்றன. உடம்புக்குள்ளே உத்தமனாகிய பரம் பொருள் கோயில் கொண்டுள்ளான் என்பது உண்மையே இந்த உண்மை தெரிந்த பின்னர் இவ் உடம்பினை பாதுகாத்து வருகின்றேன் என தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. அதற்கமைய உடம்பை பேணுவதில் அடங்கும் முக்கிய கூறுகள் யாதெனில் மாறுபாடில்லா நிறை உணவு. சகல உணவுக் கூறுகள் அடங்கியவை. (புரதம், மாப்பொருள். கொழுப்பு. கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்கள். நார்ப் பொருட்கள். நீர் முதலியன) மாறுபாடில்லா உண்டி மறுத்துண்ணில் ஊறுபாடில்லை உயிர்க்கு (திருக்குறள் 945) ஆசையை அடக்கி மாறுபாடு செய்யாத உணவை உண்டால் எத்தீமையும் இல்லை என புலவர் இரா இளங்குமரனார் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது போதியளவு காய்கறி, இலைக்கீரை வகைகள் தினமும் உணவில் அடங்குதல் மிகவும் அவசியமாகும். அத்தகைய விடயங்களை தாமாகவே தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனவே ஒருவன் தனது மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு எவ்வாறு வாழ வேண்டும் இப்படித்தான் வாழவேண்டும் அல்லது எப்படி வாழ வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு அமைய மனம்போன போக்கில் வாழாமல் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய வாழ வேண்டும் 'மனமே பொன் செய்யும் மருந்து' என்பது போல மனம்தான் தனது உள்ளத்தில் ஏற்படும் காயத்திற்கு பொன்னான மருந்தாக விளங்குகின்றது. (உதாரணம்) உலகத்தின் மையப்புள்ளி யார்? நிலமா? ஆகாயமா? சூரியனா? நீரா? நெருப்பா? என்ற கேள்விகளுக்கு விடை காண முற்படும் போது இவற்றை விட மனிதனே உலகத்தின் மையப்புள்ளி என்ற விடையை நாம் அறிகின்றோம் ஏனெனில் மனிதன் தான் மனிதன் என்ற மையப்புள்ளியை தனக்குரியதாக தனக்குத் தானே தீர்மானித்துக் கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக மிளிர்கின்றான்.

மேலும் சூழல் சுகாதாரத்தை நாம் நோக்கிப் பார்க்கின்ற போது நாம் வசிக்கும் வீடும் சூழலும் துப்பரவாகப் பேணுதல் இன்றியமையாததாகும் கழிவுகளை ஒரு மூடிய பாத்திரத்திற்குள் சேகரித்து உடனுக்குடன் அகற்றப்படுதல் வேண்டும் கண்ட கண்ட இடங்களில் வீசுதல் அவை ஈரலிப்புத் தன்மை கொண்டதாக அமையும் அதனால் அவ்விடம் ஈக்களின் உற்பத்தி இடங்களாக அமைந்து விடுகின்றன. பத்து நாட்களுக்கு மேல் நீர் தேக்கமடையுமாயின் (வீட்டிற்குள் அடங்கிய பாத்திரங்கள் உட்பட) அவைகள் நுளம்பின் உற்பத்தி தளங்களாக அமைந்து விடுகின்றன. இதனால் கொடிய டெங்கு நோய்கள் பரவி ஆபத்துக்களும் ஏற்படுகின்றன 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கமைய நோய் நொடியில்லாத வாழ்வே நிறைந்த செல்வமான வாழ்க்கையாகும். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடல்வளமும், மனவளமும் இரண்டறக் கலக்கின்றன. உடல்வளத்தின் உடல் பயிற்சி பாடசாலை பருவத்திலேயே வழங்கப்படுகின்றது இவற்றில் அக்கறை காட்டாமல் நிற்பார்கள் சிறு வயதிலேயே நீரிழிவு, ஆஸ்துமா, மூட்டுவலி, இருதயகோளாறு, குடல் வியாதிகள், உயர் குருதியமுக்கம், கொழுப்பு அதிகரித்தல், உடல் பருமன் அதிகரித்தல் என்பனவற்றிற்கு ஆளாகின்றனர்.

மேலும் சூழல் சுகாதாரத்திலே சூழல் எப்படி இருந்தாலும் அந்த சூழலை எப்படி பாவித்தல் என்பதனை மனிதன் தான் தீர்மானிக்கின்றான் இவை மட்டுமன்றி உலக இயக்கத்திற்கு மையப்புள்ளி மனிதன் தான் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த உலகை இறைவன் படைத்தாலும் கடவுள் இருப்பை கண்டுபிடித்துள்ளான். உயிர் வாழ்வதைக் கண்டுபிடிக்கின்றான். பிரபஞ்சத்தின் தோற்றம், அதன் இயக்கம் என்பவற்றையெல்லாம் கண்டுபிடிப்பது மனித குலமேயாகும்.

ஊன் உடம்பு ஆலயம் என்றார் திருமூலர் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடல் நலம் இன்றியமையாததாகும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம். நல்ல உடல் வளம் இருந்தால் வாழ்வாங்கு வாழ முடியும் அத்தகைய இனிய வாழ்விற்கு யோகாசனம், பிரானாயாமம், தியானம் ஆகியவை வழிவகுக்கின்றன. இப்பயிற்சியினை இனிதே செய்து நூற்றாண்டு வாழ்ந்திருக்கின்றனர். யோகாசனப் பயிற்சியின் போது சக்தி சேமிக்கப்படுகின்றது. மற்றையப் பயிற்சிகளில் சக்தி விரயமாகின்றது. நமது உடலின் சகல சக்திகளும் சேமிக் கப்படும் போது நமது உடலில் நோயெதிர்ப்பு சக்தியும் போதியளவு கிடைக்கின்றது இதனால் வந்த நோய்க ளும், வரவிருக்கும் நோய்களும் எம்மைவிட்டு விலகுகின்றன.

யோகாசனம் என்பது உடற்பயிற்சியின் தோற்றமாக விளங்கினாலும் இது வெறும் உடற்பயிற்சி மட்டுமல்ல மனதிற்கும் பயிற்சியளித்து மனதை ஒருநிலைப்படுத்தி உறுதியுடன் திகழவும் வைக்கின்றது. இத்தகைய செயற்பாட்டினை தாமாகவே தமக்கு சம்பாதித்துக் கொள்ள வேண்டும்

மேற்குறித்த கருத்துக்களை தொகுத்து நோக்கினால் உலகத் தோற்றத்திலே பல உயிரினங்கள் தோன்றுகின்றது. இவற்றில் மனித குலமே பெரும் பேறாக பெறப்பட்டது. அத்தகைய மனிதன் தங்களைத் தாங்களாகவே பாதுகாத்து அதாவது உலகை பற்றி புரிந்து கொள்ளும் போது பரிணாமவளர்ச்சி காரணமாக மனித குலம் முன்னேறி விஞ்ஞான யுகத்தினிலே கால்பதித்து உலகைப் பற்றி விழிப்படைய வேண்டும். மனிதன் சூழலிலே சிறப்பாக வாழ உணவுத் தெரிவுகளைப் பயன்படுத்திக் கொள்வதுடன் உடல், உளம், சூழல் ஆகிய மூலக் கூறுகளிலே முக்கியத்துவம் பெறுவதுடன் சுகம் என்பது நாமே தேடிக்கொள்ள வேண்டும் 'மனம் கொண்டதே மாளிகை' மனதால் உடலை பாதுகாத்து நாம் நமது சுகத்தை நாமே பாதுகாத்துக் கொண்டு வாழ முற்படலாம். அப்போது எமது சுகத்தை நாமே சம்பாதிக்க வேண்டும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

கலாநிதி, கலைச்சுடர்,இலக்கிய வித்தகர் சாமஸ்ரீ, கீர்த்திஸ்ரீ
**நாராயணப்பிள்ளை நாகேந்திரன்** (J.P)
ஓய்வு நிலை அதிபர்
கலாசார அதிகார சபையின் உபதலைவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்வை வளமாக்கும் வாஸ்து

மனிதனது அடிப்படைத் தேவையானது உணவு, உடை, உறையுள் என்பனவாகும். அவற்றுள் உறையுள் எனப்படுவது வீட்டைக்குறிக்கும். மனிதன் இளமைப் பருவத்தை அடைந்ததும், திருமணஞ் செய்து இல்லறத்தை நல்லறமாக்கி வளமுடன் வாழ்வதற்கும், மற்றவர் மத்தியிலே நலமுடன் வாழ்வதற்கும், இன்ப துன்பங்களை அனுபவித்துச் சிறந்த செல்வங்களுடன் வாழ்வதற்கும் மனை அவசியமாகும். இந்த மனை அமையும் முறைபற்றிக் கூறுவதே வாஸ்து விளக்கம் என்பர். இது மட்டுமன்றி, கிணறு, ஆலயம், மடம் முதலானவை வாஸ்து முறைப்படி அமைந்தாலேயே அதை அனுபவிப்ப வர்களும் வாழ்பவர்களும் நோயின்றியும், செல்வச் செழிப்போடும் வாழமுடியும் என்பதை மயன்நூல், பிருகத் ஜாதகம், ஜாதகாலங்காரம், சிற்பர நாகரம், ஜோதிட இரத்தின சேகரம் முதலான நூல்கள் பாடல்களுடன் விளக்கி நிற்பதோடு, தற்போது ஊடகங்கள் மூலமாகச் சிங்களத்திலும், தமிழிலும் விளக்கம் அளிக்கப்படுவதால், இதனை இன்று சகல மதத்தவர்களும் ஏற்று வாஸ்து முறைப்படி வீடு, கிணறு என்பன அமைக்கின்றனர்.

இதுபற்றி இங்கு விளக்கமாகத் தரமுடியா விடினும், இருளை அகற்றுவதற்குக் கிடைக்கும் கைவிளக்குப் போல உங்கள் நன்மைக்காக மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இங்கு தந்து உங்கள் வாழ்வை வளமாக்க முனைகிறேன். தற்போது இதில் சரியான அறிவியல் ஞானம் இல்லாதவர்கள் சிலர் தாம் விரும்பியவாறு நிலையம் எடுக்கின்றனர். இதனால் பாமர மக்களிலிருந்து, விருந்து ஓம்பி வளம் பெருக்க முடியாமல் துன்புற்று வீட்டை விற்றும், வறுமையும், மிடிமையும் அடைந்து வருகின் றனர். எனவே ஒரு மனை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இரத்தினச் சுருக்கமாகத் தருகிறேன்.


மனை என்பது வீடு மட்டுமல்ல நிலத்தையும் குறிக்கும். இந் நிலமானது,


1. மேற்கிலிருந்து கிழக்காகவும், தெற்கிலிருந்து வடக்காகவும் சிறிது பதிவாக இருக்கவேண்டும்.
2. வீட்டின் தரையும் அவ்வாறே அமைய வேண்டும்.
3. அலுமாரிகள், றாக்கைகள் என்பன குபேரன் திசை யாகிய வடக்கைப் பார்த்து அமைய வேண்டும்.

இதுபோல் வாயிற் கதவு, வீட்டின் கதவு, யன்னல், படிப்பறை, குளியலறை, வணக்கவறை, அடுப்பறை என்பன எவ்வாறு என்ன அளவுத்திட்டத் தில் எவ்விடத்தில் அமையவேண்டும் எனவும் கூறப்படுகிறது. உதாரணமாக, 09 அடியில் ஒரறை இருக்குமாயின் இல்லத்தரசி 50 வயதில் மரித்து விடுவாள் எனக் கூறப்படுகிறது. முடிந்தவரை உரிய முறையைக் கைக்கொண்டால் வீட்டில் நிம்மதியாக வும், நோயின்றியும் வாழ முடியும் என மயன்நூல் கூறுகின்றது. அத்தோடு வாஸ்துவுக்குரிய அதிபதி, எவ்வெவ் காலங்களில் எவ்வெவ் திசைகளில் தலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வைத்து, எவ்வெவ் திசைகளில் காலை நீட்டிப் படுத்திருக்கிறான் எனவும் கூறப்படுகிறது. இதனை ஈர்ப்புத் திசைகள் என விஞ்ஞான விளக்கம் தருகிறது. இது போல் வாஸ்துதேவன் நீராடுவது, உணவருந்துவது, தாம்பூலம் தரிப்பது முதலான செயற்பாடுகளையும் அதற்கான காலங்களையும் கருத்திற்கொண்டு மனையை அமைத்தால் நோய் நொடியின்றி நீண்ட வாழ்வு வாழ முடியும் என மயன்நூல் குறிப்பிடுகின்றது.

மனைத்தக்க மாண்புடையாள் தற்கொண்டானாகிய கணவனைச் சில வேளைகளில் கடிவதையும், எரிந்து விழுவதையும், அவன் மனம் வதைக்கப்படுவதையும் நாம் கண்ணால் கண்டும், கேட்டும் இருக்கிறோம். ஒரு மனையைப் பார்த்தவுடனேயே ஒரு மயன் அல்லது ஆச்சாரி அம் மனையில் தலைவன் இருக்கிறானா? இல்லையா? குடும்பத்தில் பிரச்சினை ஏற்படுகிறதா? அல்லது பிரிந்திருக்கிறானா? என்பதை இலகுவாகக் கூறிவிடுவான். அதற்கு வீட்டின் அளவுத் திட்டம், அமையும் பாங்கு என்பன எடுத்துக் காட்டும். இதனை அறிந்து கொள்ளாதவர்களும், பூரண விளக்கம் இல்லாதவர்களும் தாம் விரும்பிய அளவில் நிலையத்தை எடுக்கின்றனர். அதனால் மேலும் விளக்கங்களைப் பெற்றுச் சந்தேகங்களை நீக்கி அமைப்பார்கள் என்ற நல்ல நோக்கத்துக்காகவே இச் சிறுவிளக்கத்தைத் தரவேண்டியுள்ளது. இதனைக் கடைப்பிடித்தால் இன்று கொழும்பு போன்ற இடங்களிலிருந்து ஒருவர் ஐம்பதினாயிரம் செலவிட்டு வாஸ்து நிபுணரைக் கொண்டுவந்து வாஸ்து பார்க்க வேண்டியதில்லை.

முன்னொருபோது மூவேந்தர்கள் அரண் மனைகள், ஆலயங்கள் என்பன அமைக்கும்போது வாஸ்து முறையைக் கையாண்டிருக்கிறார்கள். அவை இன்றும் நிலைத்திருப்பது, வாஸ்துவின் மகிமையைக் காட்டுகிறது. எனவே எந்த ராசிக்கு, எந்த மாதம், என்ன வாரம், என்ன திகதி சூன்ய நாள்கள்? பாடவாரி நாள்கள், தலையற்ற, உடலற்ற, காலற்ற நாள்கள். என்ன நட்சத்திரத்துக்கு என்ன கிழமை துன்பம் தரும் என்பன கவனிக்கப்பட வேண்டும். உதாரணமாக,

» தான்ய நாட்களில் முகூர்த்தம் செய்தால் மனை பாழாகும்.
» காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்கள் மனை பாழாகும்
» ஏழு நாள்களில் சில நாள்களில் கூடும் சில நட்சத்திரங்கள் மரணத்தைச் சம்பவிக்கும்.
» பஞ்சமியுடன் மகமும், திருதியையுடன் அனுசமும், நவமியுடன் கார்த்திகையும், அட்டமியுடன் ரோகினியும், சதுர்த்தியுடன் உத்தரமும் தீமையையே விளைவிக்கும்.
» சனி செவ்வாய் தினங்கள் தீயுடன் கூடிய தீமையும் உண்டு. ஆயினும், மனை அமைக்கும்போது, வைகாசி மாதம் வடக்கு வாயிலும் ஆவணி மாதம் கிழக்கு வாயிலும் கார்த்திகை மாதம் தெற்கு வாயிலும் மாசி மாதம் மேற்கு வாயிலும் அமைய வேண்டும் எனக் கூறப்பட்ட போதிலும்,

ஆடியொடு மாசி ஆகுமென்பார் அப்புவியில்.....
சித்திரைத் திங்களில் ராவணன் பட்டதும்..

எனும் பாடல்களை நோக்கும்போது, ஸ்திர ராசிகளாகிய வைகாசி, ஆவணி, கார்த்திகை மாதங்களே மனை அமைப்பதற்கு உகந்த மாதங்கள் எனக் கொள்ளலாம். ஆனால் எமது பகுதிக்கு, விருச்சிக ராசி நிலையமே சிறந்தது. இடபத்து நிலையம் கூடாதென்பது அனுபவவுண்மை.

எனவே ஒரு மனை அமைக்கும்போது, இவ் விடயங்களைக் கருத்திற்கொண்டு அளவான, அழகான வீட்டை அமைத்துக்கொண்டால் வாழ்வில் நீண்ட காலம் நிம்மதியாக வாழமுடியும் என்பது திண்ணம்.

**பண்டிதர். தா.கோபாலகிருஸ்ணன்.**M.A.
களுவாஞ்சிகுடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசி என்று இந்து மக்களால் போற்றி அழைக்கப்படும்

# வாரணாசி தலம்

பற்றிய ஒரு விளக்கம்

இந்து சமய மக்களைப் பொறுத்த வரையில் மிக மிக முக்கிய தெய்வத் தலமாக கருதப்படுவது காசி என்று அழைக்கப்படும் வாரணாசி ஆகும். இங்கே தான் சிவன் தனது படைத்தல் தொழிலை ஆரம்பித்ததாகவும் அங்கே பாயும் கங்கை நதி சிவனின் திருமுடியிலிருந்து ஊற்றெடுத்து உலக உயிர்களை வாழ்விக்க வருவதாகவும் நம்பப்படுகின்றது. அங்கு சென்று அந்த கங்கை நதியில் ஒருமுறை நீராடி (தீர்த்தமாடி) வந்தால் தமக்கு மோட்ச வாழ்வு கிடைக்கும் என்று உலக மக்கள் நம்புகின்றனர்.

விமானங்கள் ஆகாயத்தில் பறக்க ஆரம்பித்ததற்கு முன்னர் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து காசிக்கு யாத்திரை சென்றவர்கள் தமது சொத்துக்களையும் உடைமைகளையும் தங்கள் உறவினர்களுக்கு எழுதி வைத்து விட்டு செல்வது வழக்கமாக இருந்தது. அதன் காரணம் இந்த புனித யாத்திரைக்கு வயது முதிர்ந்தவர்களே செல்வார்கள். வயது முதிர்ந்தவர்கள் அந்த வயதிலேயே காசி யாத்திரை சென்று மீண்டு வருவர் என்பது சில வேளைகளில் சாத்தியமாவதில்லை. அதையும் விட இப் புனித யாத்திரை செல்பவர்கள் புனித தலமாகிய காசியில் இறப்பதை ஒரு பெரும் பேறாக மோட்சமாக கருதினர். இன்றும் நமது இந்துக்கள் "காசியில் பிறத்தல் கதிரை மலையில் கதிர்காமத்தில் இறத்தல் மோட்சம்" என்று கூறி இந்த புண்ணிய தல யாத்திரையை மேற் கொள்வதும் கண்கூடாக நிகழ்வதை நாம் அறிகின்றோம்.

தமிழ் கூறும் உலகத்தில் பல்லாயிரம் கோயில்கள் இருந்தாலும் காசிதான் கோயில் என்ற சிறப்புப் பெயரை தனித்துவமாக பெற்றுள்ளதாகும் என்பது சிறப்பாகும் தென் இந்தியாவில் நிலை பெற்றுள்ள சைவ ஆலயங்களை சைவ இந்து மக்கள் அறிவார்கள். அங்கே ஏறக்குறைய 33000 ஆலயங்கள் உள்ளன. அதனால் தென் இந்தியாவை அதாவது"தமிழ் நாட்டை ஆலயங்கள் நிறைந்த நாடு" என்றும் அழைப்பர். இங்குள்ள ஆலயங்களில் சில மிகப் பழமையானவை . 3000 வருடங்களுக்கு முற்பட்டவை உயர் தொழில் நுட்பத்தையும் துல்லிய மான கலை நுட்பத்தையும் கொண்டு கட்டுமானப் பணியினால்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டவை. இவை தவிர ஒவ்வொரு ஆலயங்களும், அற்புதங்கள் நிறைந்த வையாக காணப்படுகின்றன. அவை அற்புதமான அர்த்தமுள்ள இந்து மதம் போல அர்த்தமுள்ள இந்து ஆலயங் களாகச் சிறப்புற்று விளங்குகின்றன.



"ஆலயத்தில் மூலஸ்தானத்தின் திரையை நீக்கிப் பார்த்தால் அங்கு எந்த மூலமூர்த்தியையும் காணமுடியாது. வெறும் சூனியமாகவே இருக்கும். ஏனைய ஆலயங்களில் எல்லாம் மூலஸ்தானத்தில் பிரதான தெய்வத்தின் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கும். இங்கே எதுவுமில்லை. மூலஸ்தானம் வெறுமையாக இருக்கிறது. ஏன் அப்படி என்று கேட்டால் அது தான் சிதம்பர ரகசியம் ஆகும்."

பஞ்ச பூதங்கள் என்று கூறப்படுகின்ற நிலம், நீர், ஆகாயம், காற்று, தீ ஆகிய இயற்கை அம்சங்களுக்கும் தனித்தனி ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இவற் றுள் நான்கு ஆலயங்கள் தமிழ் நாட்டி லும் ஒரு ஆலயம் ஆந்திரா பிரதேசத் திலும் உள்ளன. இவற்றில் ஆகாயத்தைக் குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயமும், காற்றைக் குறிக்கும் காலகஸ்தி ஆலயமும், நிலத்தைக் குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயமும் ஒரே நேர்கோட்டில் அதாவது தீர்க்கரேகை 79.41இல் கட்டப் பட்டுள்ளன. இது எப்படி கோயில்களைக் கட்டிய இந்துக்களுக்கு அக்காலத்தில் சாத்தியமானது?

பூமியிலுள்ள இடங்களை அடையாளம் காண் பதற்கும் அவற்றிற்கிடையிலான தூரத்தைக் கணிப்பதற் குமாக 19 ஆம் நூற்றாண்டில் பூகோளத்தில் கற்பனைக் கோடுகள் வரையப்பட்டன. அதற்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் இந்த ஆலயங்களைக் கட்டிய இந்துக்கள் இந்த உயர் விஞ்ஞான அறிவைப் பெற்றிருந் தனர் என்று எண்ணும் போது அது மிகவும் புதுமையாக இருக்கின்றதல்லவா?

மனித உடலைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்ட ஆலயம் சிதம்பரத்தில் கட்டப்பட்ட தில்லை நடராஜர் ஆலயமாகும். இந்த ஆலயத்தில் பல அற்புதங்கள் நிறைந்துள்ளன. இவற்றைச் சிதம்பர ரகசியம் என்று சொல்கிறார்கள். இந்த ஆலயத்தில் மூலஸ்தானத்தின் திரையை நீக்கிப் பார்த்தால் அங்கு எந்த மூலமூர்த்தியையும் காணமுடியாது. வெறும் சூனியமாகவே இருக்கும். ஏனைய ஆலயங்களில் எல்லாம் மூலஸ்தானத்தில் பிரதான தெய்வத்தின் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கும். இங்கே எதுவு மில்லை. மூலஸ்தானம் வெறுமையாக இருக்கிறது. ஏன் அப்படி என்று கேட்டால் அது தான் சிதம்பர ரகசியம் ஆகும்.

சிதம்பர ஆலயத்திற்கு ஒன்பது நுழைவாயில்கள் உள்ளன. அந்த ஒன்பது வாயில்களும் மனித உடலி லுள்ள ஒன்பது வாயில்களையும் குறிக்கும். ஆலயத்தின் கூரை தங்கத்தால் ஆனது. 21600 தங்கத் தகடுகளை அக்கூரை கொண்டுள்ளது. இது ஒரு மனிதன் நாள் ஒன்றுக்கு சராசரியாக சுவாசிக்கின்ற 21600 தடவை களைக் குறிப்பிடுகின்றது. இந்த 21600 தங்கத் தகடு களும் 72000 தங்க ஆணிகளைக் கொண்டு பொருத்தப் பட்டுள்ளன. இவை மனித உடலிலுள்ள நாடிகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

பொன்னம்பலம் மத்தியிலிருந்து சற்று இடது பக்கத்தில் அமைந்துள்ளது. இது மனித உடலில் இடது பக்கத்தில் அமைந்திருக்கும் இதயத்தைக் குறிப்பிடுகின்றது. இந்த இடத்தைச் சென்றடைவதற்கு ஐந்து படிகள் ஏறிச் செல்ல வேண்டும் இந்த ஐந்து படிகளும் சி,வா,ய,ந,ம எனப்படும் பஞ்சாட்சரங்களையும் குறிக்கும். இந்தப் படிகளை பஞ்சாட்சரப் படிகள் என்று அழைப்பர்.

கனக சபைக்குள் நுழையும் வாயில் நேராக இல்லாமல் பக்கவாட்டில் இருக்கின்றது. அந்தப் பகுதியை 4 தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன. இவை நான்கு வேதங்களையும் குறிக்கும் பொன்னம் பலத்தில் 28 தூண்கள் உள்ளன இவை 28 ஆகமங்க ளையும் குறிக்கும். இந்த 28 தூண்களையும் இணைக்க 64 மேற்பலகைகள் உள்ளன. இவை ஆய கலைகள் 64 னையும் குறிக்கும். ஆலயத்தின் பொற் கூரையில் 9 கலசங்கள் உள்ளன இவை 9 வகைச் சக்திகளையும் குறிக்கும். அர்த்த மண்டபத்திலுள்ள 6 தூண்களும் ஆறுசாஸ்திரங்களையும் குறிக்கும். அதன் அருகிலுள்ள மண்டபத்தைத் தாங்கும் 18 தூண்களும் 18 புராணங் களையும் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயத்தை பூலோக கைலாயம் என்று அழைப்பார்கள். இவை தவிர மற்றும் ஒரு முக்கிய அம்சமும் இந்தக் கோயிலில் அமைந்துள்ளதாக அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்திலுள்ள 'ஆனந்த தாண்டவம்' ஆடும் சிவபெருமானுடைய பெருவிரல் பதிந்திருக்கும் இடத்திலிருந்துதான் உலகின் காந்த மையம் ஆரம்பமாவதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். காந்த வலயம் என்பது பூமியைச் சுற்றி வட்டமாகக் காணப் படும் ஒன்று. வட்டமான பொருளுக்கு ஆரம்பமும் முடிவும் இருக்காது. எனவே சிவனுடைய பெருவிரல் பதிந்திருக்கும் இடத்திலிருந்து தான் காந்த வலயம் உருவாகின்றது என்பது பொருந்தாது என்று சிலர் வாதிடுகின்றனர். எனினும் இந்த ஆலயத்தில் அல்லது அதற்கு அண்மையில் காந்த சக்தி செறிவாகக் காணப் படுவதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்!

சிவனுடைய ஆனந்த தாண்டவத்தைப் பற்றி ஆய்வாளர்களால் அனேக ஆய்வுகள் செய்யப்பட் டுள்ளன. இது உலக அழிவைக் குறிப்பிடும் நடனமாகக் காணப்படுகின்றது. இதில் பல விளக்கங்கள் மறைந் திருப்பதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதில் பொதிந்திருக்கும் இரகசியங்கள் கருதி சுவிட்சலாந் திலுள்ள பௌதீக ஆய்வு நிலையத்தின் நுழைவாயிலில் சிவனுடைய ஆனந்த தாண்டவச்சிலை ஒன்று வைக்கப் பட்டுள்ளது. 'இது இந்து சமயத்தின் பெருமைக்குச் சான்றாகும்'

அர்த்தமுள்ள ஆலயம் போலவே பக்தர்கள் வழிபடும் சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் அர்த்த முண்டு. ஆலயங்களுக்குள் செல்லும் பொழுது தமது பாதணிகளை வெளியே வைத்துவிட்டு உள்ளே செல்வார்கள். ஆலயங்கள் பரிசுத்தமானவை புனிதமா னவை அவற்றை அசுத்தமான பாதணிகளால் களங்கப் படுத்தக் கூடாது என்பதை எல்லோரும் அக்காலத்தி லிருந்தே அறிந்திருந்தனர்.

இதைத் தவிர மற்றுமொரு விசேட அற்புதக் காரணத்தையும் இந்துக்கள் அறிந்திருந்தனர். அது என்னவெனில் ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும், சுற்றுப்புறங்களிலும் தெய்வீக அருள் சக்தி நிறைந்துள்ளன என்பதாகும். அந்த தெய்வீக சக்தியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் ஆலயத்தின் புனித புண்ணிய நிலத்தை நமது இரண்டு கால்களின் பாதங்களும் தொடும்படியாக மெதுவாக நடக்க வேண்டும். இறை சக்தி மின்சாரத்தை ஒத்தது. அந்த சக்திக்கு எதிர்மறை, நேர்மறை எனப்படும் இரு துருவங்கள் உள்ளன.நாம் நமது இரண்டு கால்களாலும் ஆலயத்தின் நிலத்தை மிதித்து நடக்கும் பொழுது அந்த தெய்வீக இறை மின்சார சக்தி எமது இரு கால்களினூடாகவும் உடலினுள் செல்லும். ஆயினும் அந்த இரு துருவங் களும் ஒன்றாக இணையும் வரை எந்தப் பயனையும் பெற்றுவிடமுடியாது. ஆலயத்துள் தீபம் காட்டும் போது நாம் அதைப் பார்த்து இரு கைகளையும் இணைத்துக் கும்பிடுகிறோம். அப்போது நமது உடலுக்குள் ஏதோ ஒன்று பாய்ந்து செல்வதை உணரமுடிகின்றது.

இரு கைகளையும் ஒன்றாக இணைத்துக் கும்பிடும் போது இறை சக்தியின் இரு துருவங்களும் இணைக்கப்படுகின்றன. அது எமக்குள்ளே ஒளியைத் தருகின்றது. அந்த ஒளி உடல் நோய்களையும், உள நோய்களையும் தீர்க்கும் இறை மருந்தாகும்.

இதே போன்று தான் இந்துக்கள் பல்லாயிரம் வருடமாகப் பின்பற்றி வரும் வணக்க முறைகளுள் ஒன்றான பிள்ளையாருக்கு தோப்புக்கரணம் பண்ணும் செயற்பாடும் நிலைபெற்றுள்ளது.


இடது கையால் வலது காதையும், வலது கையால் இடது காதையும் பிடித்துக் கொண்டு கோயிலின் கொடிகம்பத்தின் பின் நின்று 14 தரம் அல்லது 21 முறை குந்தி எழும்ப வேண்டும். ஆனால் தோப்புக் கரணங்கள் மூன்று நிமிடங்கள் செய்தால் போதுமானது. இந்த தோப்புக்கரணப் பயிற்சி உடல் உள ஆன்மீகத்திற்கும் அவசியமானது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த தோப்புக்கரணம் மூளை விருத்தி யையும் அறிவுத் திறனையும் விவேகத்தையும் தருவதாக ஆய்வாளர்கள் புதிய கண்டு பிடிப்பாக கூறுகின்றனர். தோப்புக் கரணத்திற்கு புதிய பெயராக SUPER BRAIN YOGA என்று கூறுகின்றனர்.

கணபதி என்னும் பதத்திலுள்ள 'க' விவேகத்தை யும், 'ண' அறிவையும் 'பதி' என்பது ஆசான் எனவும் பொருள்படுகிறது. 'கணபதி' அறிவு, விவேகத்தின் ஆசானாகவும் தனக்கு மேலொரு தலைவனில்லாத் தனிப் பெருந் தலைவனாகவும் உள்ளார். கணபதிக்கு தோப்புக் கரணம் போட்டு அறிவையும் விவேகத்தையும் தரும் பகுதிகள் தூண்டப்பட்டு அப்பகுதி சுறுசுறுப் படைகிறது. 'பிட்ருரறி' 'பினியல்' ஆகிய சுரப்பிகள் தூண்டப்பட்டு அவற்றின் வேலையை ஒழுங்கு படுத்துகிறது. இதனால் இயற்கையாகவே எமக்கிருக்கும் அறிவும் விவேகமும் வளர்ந்து கூர்மையடைகிறன.

தோப்புக் கரணத்தின் பயன்பாடு பற்றி கூறியுள் ளதை நாம் நோக்குவோம்:- அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சலில் பயிற்சி செய்யும் வைத்தியர் எரிக் றொவின் என்பவர் "தோப்புக் கரணம் செய்தல் மருந்து மாத்தி ரைகள் எவையும் இன்றி இலகுவாகவும், விரைவாகவும் மூளைத்திறனைப் பெற்றுத்தரும் ஒரு பயிற்சியாகும்" என்கிறார்.

இவர் தமது நோயாளர்களுள் மூளைத்திறன் குறைந்த மாணவன் ஒரு வனைப் பற்றிப் பேசும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போது பாடங்களில் ஆகக் குறைந்த புள்ளிகளி டையே பெற்றுவந்த அந்த மாணவன் ஆறு மாதங்கள் தோப்புக் கரணம் செய்த பின்னர் அதி உயர் புள்ளி களைப் பெற்று வருகின் றான் என்கின்றார். இந்த வைத்தியர் பல மாணவர் களுக்கும் தோப்புக் கரணப் பயிற்சி செய்வித்துக் கொண்டிருந்தார்.

தொழில் சார்ந்த பயிற்சி அளிக்கும் 'றெய்னா கொற்றூர்வர்' என்பவர் தான் பயிற்சி கொடுத்த மூளைப் பலம் குன்றிய ஏழு வயதுச் சிறுவன் தோப்புக் கரணப் பயிற்சியைத் தன்னிடம் பெற்றுக் கொண்ட போது அவன் மூளைத்திறனில் காணப்பட்ட வளர்ச்சி மிகவும் ஆச்சரியப்படத்தக்கது என்று கூறியுள்ளார்.

பயிற்சியை ஆரம்பிக்க முன்பு அச் சிறுவன் மிகவும் மூர்க்கமாக நடந்து வந்தான். மற்றவர்களுக்கு அடித்தல், உதைத்தல், கடித்தல், தனது தலையை முட்டிக் கொள்ளுதல் என்பன அவனின் நடத்தைகளாக இருந்தன. தோப்புக் கரணம் போட ஆரம்பித்தவுடன் இந்த நடத்தைக் கோலங்கள் எல்லாம் இல்லாமல் போயின என்று கூறினார்.

கற்றுக் கொள்வதில் சிரமப்படும் 'டெனிஸ் பீக்' எனும் உயர் பாடசாலை ஆசிரியர் இந்த வகையான மூளைப்பலம் குன்றிய மாணவர்களின் நோயைத் தீர்ப்பதற்கு தோப்புக் கரணம் ஒன்றே ஒரு சிறந்த இலகுவான பயிற்சி முறையாகும் என்று கூறுகிறார்.

இந்த வகையில் யேல் சர்வகலா சாலையின் நரம்பு ஆய்வு நிபுணர் 'ஈஜினியஸ் யாங்' என்பவர் காது மடல்களில் உள்ள விசேட இடத்தை விழிப் படையச் செய்வதன் மூலம் இந்தப் பயிற்சி மூளையை இயங்கச் செய்து அதன் வலம் இடம் ஆகிய இரு பகுதிகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் இயங்கு திறனைச் சமப்படுத்துகிறது என்றும் இப் பயிற்சியை நான் தினமும் செய்து வருகின்றேன். என்றும் கூறும் அவர் ஞாபகசக்தி குறைவான நோயாளர்களுக்கும், மூளைப்பலம் குன்றிய சிறுவர்களுக்கும் தோப்புக் கரணத்தை ஒரு விசேட பயிற்சியாக அறிமுகப் படுத்தி வருகின்றார்.

இந்து சமய மக்களால் பல்லாயிரக் கணக்கான வருடமாகப் பின்பற்றி வரும் தோப்புக் கரணம் பற்றிய நேரடி ஆய்வு ஒன்று 30 மாணவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டு அதன் முடிவுகள் 2014ஆம் ஆண்டு சித்திரை மாதம் யோகப் பயிற்சி சார்பான தேசிய அறிக்கை எனப்படும் அறிக்கை மூலம் வெளியிடப் பட்டுள்ளது. மூளையை வளம் படுத்தி அறிவையும் விவேகத்தையும் அதிகரித்துக் கொள்ள விரும்புபவர்கள்

**தோப்புக் கரணம் செய்ய வேண்டிய முறை:-**

நிமிர்ந்து நின்று இடது கைப் பெருவிரலால் வலது காது மடலின் முன்புறத்தையும் சுட்டு விரலால் அதன் பின் புறத்தையும் பற்றிக் கொள்ளவும். அது போன்று வலது கைப் பெருவிரலாலும் சுட்டு விரலா லும் இடது காது மடலைப் பற்றிக் கொள்ளவும். நாக்கு நுனியால் வாயின் உட்புற மேற் சுவரை முடிந்தவரை அழுத்திக் கொள்ளவும். குந்தும்போது மூக்குத் துவாரத்தால் காற்றை உள்ளே இழுத்து எழும்பும்போது வாயால் வெளிவிடவும். முதுகுப் புறம் எப்பொழுதும் நேராக இருக்கும் படி பார்த்துக்கொள்ளவும். தினமும் முடிந்தால் காலை கிழக்குப் புறம் பார்த்த படி நின்று கொண்டு செய்வது நன்று. ஆரம்பத்தில் 14 தடவைகள் செய்வது பொருத்தம். பழக்கப்பட்ட பின்னர் 21 தடவைகள் அதிகரித்துக் கொள்ளலாம். தினமும் மூன்று நிமிடம் பயிற்சி போதுமானது. இதை உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் நண்பர்களுக்கும் சொல்லிக் கொடுங்கள். அர்த்தம் உள்ள இந்து சமயம் என்பதாலும் அர்த்தமுள்ள ஆலயங்களுள் காசி வாரணாசி முக்கிய தலமாக இந்துக்களால் ஏற்றுக் கொள்ளப் படுவதாக அங்கு பாயும் கங்கை காசி வாரணாசி தீர்த்தத்தில் ஒரு முறை ஆடினால் தமக்கு மோட்ச வாழ்வு கிடைப்பதால் இந்துக்களும் ஏனைய ஐரோப்பிய அமெரிக்க கிறிஸ்தவ மக்களும் வாரணாசித் தீர்த்தம் ஆடுவதும் காசி ஆலயத்தின் மகிமைக்கும் மகுடம் சூட்டுவதாகும். நாமும் பெருமை சால் காசி வாரணாசி கோயிலை வணங்கி வாழ்வாங்கு வாழ்வோமாக!


கலாபூசணம், கலைச் செம்மல், வித்தகர்

**முருசேசு தம்பிப்பிள்ளை**

குருமண்வெளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து போகும்

# முதுசொம்



பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை மனித வாழ்க்கை முறை மாறிக்கொண்டே வந்துள்ளது. நடை, உடை, பாவனை, உணவு, உபகரணங்கள் என்பவற்றையெல்லாம் இவற்றில் கொள்ளலாம். அக்காலத்து மக்கள் களிமண்ணினாலான திண்ணை வீடு அமைத்து கிடுகு, வைக்கோல் கொண்டு கூரை மேய்ந்து இயற்கையான, தூய்மையான உணவுகள் உண்டு சுகதேகிகளாக வாழ்ந்தார்கள். தாம் வசிக்கும் சூழலில் மா, பலா, வாழை போன்ற இனிய கனிதரும் மரங்களும் வளவின் எல்லை வேலியில் பூவரசு, முள்முருக்கை போன்ற மரங்களும் அழகாக அமைந் திருந்ததால் தூயகாற்றும், சுற்றாடலும் சிறப்பாக அமைந்திருந்தன.

உபகரணப் பொருட்களுக்கு மட்பாண்டங் களையே பாவித்தனர். மட்பாண்டம் என்பது பொதுவாக களிமண்ணினால் செய்யப்பட்ட சட்டி. பானை, குடம், குரச்சி, கூசா போன்றவையாகும். இவ்வாறான பாத்திரங்களை இன்னோரன்ன தேவை களுக்கும் பயன்படுத்தினர் இதனால் முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் சிறுநீரக பாதிப்பு எதுவுமின்றி சுகத்துடன் வாழ்ந்தனர். உரல், திருவிலை, அம்மி, திருகைக்கல் போன்ற ஒவ்வொரு உபகரணங்களையும் பயன்படுத்தினர்.

தம் வாழ்க்கைக்கு ஆதாரமான, தொழிலாக விவசாயத்தைக் கைக்கொண்டனர். விவசாயத்தை விதைத்த நாள் தொடக்கம் அறுவடை நாள்வரை ஒருவருக்கொருவர் உதவியாக இருந்தனர். அறுவடை செய்தல், காவல் காத்தல், சூடுமிதித்தல் போன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் ஒரு குடும்பம் போன்று இயங்கி வந்தனர். கதிர் பொறுக்குதல், புதிர் உண்ணுதல் எல்லாம் காலங்காலமாக இருந்து வந்தவையே ஆகும்

வீட்டுத் தளபாடங்களை நோக்கினால் முதுரை, கருங்காலி, தேக்கு போன்ற மரங்களினால் உருவாக்கப்பட்ட பெட்டகம், தைலாப்பெட்டி, கட்டில், கதவு நிலைகள் அவற்றினால் செய்யப்பட்டவை. அலங்கார வடிவங்கள் மனதைக் கவரும் வகையில் அழகானதாகவும், உறுதியானதாகவும் அமைக்கப்பட்டி ருந்தன.

இவ்வாறு பித்தளை, செம்பு, வெங்கலம் போன்ற உலோகத்தினால் உருவாக்கப்பட்ட குத்து விளக்குகள், செம்பு, குடம், தாம்பாளம், வெற்றிலை வட்டா, சேவரக்கால், படிக்கம், பன்னீர்ச் செம்பு என்பவை கலை நுட்பம் நிறைந்தவையாகும். பனை யோலைப்பாய், விசிறி, கட்டுப்பெட்டி, நீத்துப்பெட்டி என்பனவும் சிறப்பு வாய்ந்த பாவனைப் பொருட் களாகும்.

குத்து விளக்கை குறிப்பிடுகையில் தமிழக, இலங்கைப் பிராந்தியங்களில் மிக முக்கியமான பண்பாட்டு சுட்டிகளில் ஒன்றாகவும். மதம் சார்ந்த பின்புலத்திற்கு அப்பால் பண்பாட்டு நடவடிக்கைக ளில் ஒரு கூறாகவும், விழா உள்ளிட்ட நடவடிக்கை களில் விலக்க முடியாத கூறாக குத்து விளக்குகள் விளங்குகின்றன. இவற்றில் பெரும்பாலானவை கோயில்கள், தேவாலயங்களுக்கு அப்பால் தனியார் இல்லங்களிலும் காணப்படுகின்றன. குத்து விளக்கின்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





அமைப்புக்கள் தூண்டாமணி விளக்கு, பாவை விளக்கு, தூக்கு விளக்குகள், சங்கிலியினாலோ தொங்க விடப்பட்டதாக பயன்படுத்தப்படும். இவ்வாறு அனேக பழம்பெரும் கைப்பணி உபகரணப் பொருட்கள் காணப்படுகின்றன. இங்கு குறிப்பிடப் படுபவை அவற்றில் ஒரு சில மட்டுமே.

இவை வருங்கால சந்தயினரால் உருவாக்க முடியாதவை. இவற்றின் பழம்பெரும் நம்மவர்க்கு புரிவதில்லை. உண்மையிலே ஒருவரின் வீட்டில் பழைய கலை வடிவங்கள் உபகரணப் பொருட்கள் இருப்பது சமூகப் பெறுமதி தரவல்லது. இது அவர் களால் உணரப்பட வேண்டும். இவ்வுணர்வு எல்லோ ருக்கும் இருக்குமேயானால் இக்கலைப் பொக்கி ஷங்கள் நம்மை விட்டுப் பிரிந்து போவதற்கு வாய்ப் பில்லை. எம்முடனே கூடவே காலம் காலமாகவே இருந்து நேசிக்கப்பட்டவற்றை சிறு தொகைப் பணத்திற் காக விற்பனை செய்யப்படுவது வேதனைக்குரியதாகும்.

கலை, கைப்பணி, உபகரணப்பொருட்கள் ஒரு சமூகத்தின் கலைத்திறனையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்துபவையாக விளங்குகின்றன. அவை அச் சமூகத்திற்கு உரித்தான வாழ்க்கை முறை சூழல் அவர்களின் வரலாறு பண்பாடு நாகரிகம் என்பவற்றை வெளிப்படுத்தும் சாதனமாகவும் விளங்குகின்றன.

இந்த நவீன காலத்தில் வீடுகளில் இருக்கும் பிளாஸ்ரிக் கதிரைகளும், சி.டி எலக்ரோணிக் கருவி களும் இப் பொருட்களுக்கு ஈடாகுமா? எம்முடன் இம் மண்ணில் இருக்கும் அரும் பெரும் பொருட்களை கலை வடிவங்களை, பாதுகாத்து வருங்கால சந்ததியி னருக்கு அறிமுகம் செய்ய உறுதியாயிருப்போம்.


பிரித்தானியாவிலுள்ள அரும்பொருள் காட்சி யகத்தில் (Museum) இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் 1835ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்தி னாலான 2 மீற்றர் உயரமான கண்ணகியின் சிலை ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற லூவர்(Louvre) அரும்பெரும் காட்சிச் சாலை பிரான்சில் உள்ளது. உலகின் தொல்லியல் சம்பந்தமான சிற்பங்கள் ஓவியங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தலை நகரிலும் ஒரு அரும்பெரும் காட்சியகம் உள்ளது. குறித்த சில மாவட்டங்களில் அரும்பொருட் காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப் பணியில் விழிப்புள்ளதாக காத்தான்குடியிலும் பூர்வீக அரும்பொருள் காட்சிசாலை எனும் பெயரில் ஒரு காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு குறித்த சமூகத்தின் பழமையை பறை சாற்றும் வகையில் அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் எமது சமூகத்திற் கான அரும்பெரும் காட்சிசாலை எப்போது நிறுவப் படும். மட்டக்களப்பின் வரலாற்றையும் பெருமை களையும் வெளிக்கொண்டு வரவும். இம் மண்ணின் முக்கிய மரபுரிமைப் பொருட்களை பாதுகாக்கவும் இம் மாவட்டத்தில் அரும்பொருட் காட்சிசாலை அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**கலாபூசணம் செல்லையா டானியல்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அழகான கூந்தலுக்கு யோகா

எந்த ஒரு பெண்ணுமே பளபளப்பான, ஆரோக்கியமான, வலுவான கூந்தலுடன் இருக்கவே விரும்புவாள் மயிர்க்கால்கள் வலுவுடன் இருக்கக்கூடிய முதல் இருபதாண்டு காலம் வரையே நமது கூந்தல் இப்படி இருப்பது சாத்தியமாகும் கூந்தல் உதிர்வது என்பது அப்படி ஒரு பெரிய பிரச்சினையேயில்லை. எனவே நீங்கள் தலைசீவும்போது உங்கள் சீப்பில் இருக்கக்கூடிய ஓரிரு முடியைப் பார்த்து பயந்துவிடாதீர்கள். ஒரு நாளைக்கு 75 முதல் 100முடிகள் உதிர்வது என்பது சாதாரணமாக ஏற்படக் கூடியதே.

ஒருவரின் தலைமுடியின் நிலை அவருடைய ஆரோக்கியத்தின் அடிப்படையிலே அமைகிறது. அப்படிப் பார்க்கும் போது உங்கள் தலைமுடியின் நிலையே உங்கள் ஆரோக்கியத்திற்கான அளவுகோலாக அமைகிறது. ஆரோக்கியமான தலைமுடி உங்கள் அழகிற்கு முடிசூட்டுகிறது.

மன அழுத்தம், ஹார்மோன்கள் நிலை இழத்தல், வயதாகுதல், சீரான உணவுப்பழக்கங்கள் இல்லாமை நோய்கள், போதைப் பொருட்கள், அதிகமான வர்ணப் பூச்சுக்கள், பரம்பரைக் குறைபாடுகள், புகைபிடித்தல் இது போன்றவைகளே முடி உதிர்வதற்கான முக்கிய காரணங்களாகும்.


முடி உதிர்தலை குணப்படுத்தத் தேவையானவற்றைத் தேடும் முன்பு முடி உதிராமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று புரிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். அதற்கு யோகா நிச்சயம் உதவும். உடல் மன ஆரோக்கியத்தைத் தரும் யோகா செய்தல் தலையில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்யும். ஜீரண மண்டலத்தை மேம்படுத்துகிறது. மன உளைச்சலையும் அழுத்தத்தையும் குறைக்கிறது.

ஆரோக்கியமான கூந்தலைப் பெறுவதற்கு பயில வேண்டிய யோகாசனங்கள் முன்புறம் வளைந்து செய்யக்கூடிய யோகாசனங்களெல்லாம் நமது தலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிக்கும் உச்சிக்கும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. இது மயிர்க்கால்களுக்கு புத்துயிரூட்டுவதால் ஏற்படும் மாற்றங்களை நாள்பட நிச்சயம் நாம் காணமுடியும்.

1.அதோமுக ச்வானாஸனா



கீழ் நோக்கி வளைந்த நாயின் நிலை இது தலைக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. சைனஸ் பாதிப்பை நீக்கி சளி பிடிக்காதவாறும் செய்கிறது. மனச்சோர்வையும் மன அழுத்தத்தையும் தூக்கமின்மையும் போக்குகின்றது.

2. உத்தானாசனா



நின்றபடி முன்புறம் வளைந்த நிலை நமது அயர்ச்சியையும் தளர்ச்சியையும் நீக்குகிறது. மாதவிலக்கு நின்றதால் ஏற்படும் உபாதைகளை நீக்கி ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்கிறது

3. வஜ்ராசனா




வைரம் போன்ற உறுதியான நிலை. மற்றய ஆசனங்களைப் போலல்லாமல் உணவு உட்கொண்ட உடனே கூட செய்யக் கூடிய ஆசனம் இதுவாகும். இது சிறுநீரக கோளாறுகளை சரி செய்து உடல் இளைப்பதை தடுத்து ஜீரண சக்தியை அதிகரித்து வயிற்றில் வாயு கட்டாமல் செய்யக் கூடியதாகும்.

4. பவள முக்தாசனா



வாயுவைக் குறைத்து, ஜீரண சக்தியை அதிகரிக்கச் செய்யும். அடிமுதுகுத் தசைகளை வலுப்படுத்துகின்றது. அடிவயிற்றில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பை குறைக்க உதவுகிறது

5. சர்வாங்காசனாவும் ஹலாசனாவும்



தைராய்டு சுரப்பியை சரியாக்குகிறது. இதன் காரணமாக மூச்சு மண்டலம், உணவுப்பாதை பிறப்பு றுப்பு மண்டலம், நரம்பு மண்டலம் ஆரோக்கியமாக செயற்படுகிறது.

## முடி உதிர்வதைத் தவிர்க்க உதவும் பிராணாயாமா

1. கபாலபாதி பிராணாயாமா

இதனால் மூளையிலுள்ள செல்களுக்கு அதிக பிரணா வாயு செல்கிறது. உடலிலிருந்து நச்சுப் பொருள்களை நீக்கி உடல்பருமனைக் குறைத்து சர்க்கரை வியாதிகளை போக்கி நரம்பு மண்டலத்தை புத்துணர்ச்சியடையச் செய்கிறது.


2. பஸ்திகா பிராணாயாமா

உடலிலுள்ள வாயுத் தொல்லை பித்தம் சளி இவற்றை நீக்கி நரம்பு மண்டலத்தை சுத்திகரித்து நோய் வராமல் தடுக்கிறது.

3. நாடி சோதன பிராணாயாமா

இதயம் சம்பந்தமான நோய்கள் ஆஸ்துமா மூட்டுவலி ஒற்றைத் தலைவலி மன உளைச்சல் மன அழுத்தம் கண் காது நோய்கள் இவற்றைக் குணப் படுத்துகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




4. சீதளி சித்காரி பிராணாயாமா

இது போன்ற குளிர்ச்சியூட்டும் பிராணாயாமா செய்தல் பித்தநிலை சமன்பாட்டை நிலை நிறுத்தி முடி உதிர்வதைத் தடுக்கிறது.

5. பிரமரி பிராணாயாமா

மூளையிலுள்ள செல்களுக்கும் மயிர்கால்களுக்கும் புத்துணர்ச்சியூட்டுகிறது. ஆசனா பிரணாயாமா இவற்றைத்தவிர தியானம் செய்வதால் உடலுக்கு ஓய்வு ஏற்பட்டு மன அமைதியடைகிறது. தியானம் செய்வதால் மன அழுத்தம் நீங்கி மனத்திற்கு அமைதி கிடைப்பதால் கூந்தலுக்கு புத்துணர்வு ஏற்படுகிறது.

## நினைவில் இருத்த இருக்க வேண்டிய மற்றைய குறிப்புக்கள்

யோகா செய்வதுடன் நமது உணவைப்பற்றிய கவனமும் அவசியமாகும். பழங்கள், பச்சைக்காய்கறிகள், கீரை வகைகள், பருப்புகள், முளைகட்டிய தானியங்கள், பால் சம்பந்தப்பட்ட உணவை உண்பது கூந்தலின் வளர்ச்சிக்கு அவசியமாகும்.

ஒரு வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை கூந்தலை வேப்பிலை நீரால் கழுவுவது நல்லது. தேங்காய் எண்ணெயை அழுத்தமாகத் தலையில் தேய்க்க வேண்டும். தலை முடியை அடிக்கடி அலசி விடுவதும் நல்லது. தலையில் எண்ணெய் அழுத்தி தேய்த்து இரவு பூராகவும் நன்றாக ஊறிய பிறகு காலையில் அலசிவிடுவது மிகவும் பயனுள்ளதாகும்

தீவிரமான ரசாயனக்கலவைகளையும் செயற்கையாகக் கூந்தலை வடிவமைக்கும் சாதனங்களையும் தவிர்ப்பது நல்லது.

முடி உதிர்தல் என்பது இயற்கையே அதைத் தவிர்க்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். இதை பயிலுவதாலும் குறிப்புகளை பின்பற்றுவதாலும் முடி உதிர்தலைக் குறைக்கவும் கூடுமானவரைத் தவிர்க்கவும் முடியும்

ஏன் இன்னும் காத்திருக்கிறீர்கள் உடனே தொடங்குங்கள் உங்கள் யோகாவை

நன்றி

**நாகேந்திரன் கோகுலதாஸ்**
– ஸ்ரீ யோகாசிரியர் வாழும் கலை
களுவாஞ்சிகுடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகளும்
# உவமைத் தொடர்களும்





தமிழிலக்கியப் பரப்பிலே பழமொழிகளும் உவமைத் தொடர்களும் மிகுந்த முக்கியத்துவம் பெறு கின்றன என்றால் மிகையாகாது. எமது முன்னோர்கள் பண்டுதொட்டு தமது பேச்சுக்களில், எழுத்துக்களில் இவற்றைக் கையாண்டு வந்ததுடன், இவ்விலக்கியங்கள் தமிழ் மக்களது வாழ்வியல் நெறிகளையும், பண்பாட்டு மரபுகளையும் வெளிப்படுத்துவனவாக விளங்குவது சிறப்புக்குரியதாகும்.

எமது மக்கள் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ள இலக்கியங்களில் பழமொழிகள், நாட்டார் கலைகளில் ஒன்றாகவும் பேசப்படுகின்றது. பழமொழி என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் வாக்கியம் என்றும், முதுமொழி என்றும் ஓர் அனுபவத்தை சுருக்கமாகக் கூறுவதுடன், அது பற்றிய தீர்ப்பினையும் வழங்குவது எனவும் பலவாறு பொருள் கொள்வர். பழமொழிகள் மூதறிவிலிருந்து தோன்றியவை ஆகும். பழமொழிகள் மிகப் புராதன காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதை பழமொழிகள் மொழி என்ற சொல் உறுதிப்படுத்துகின்றது.

பழமொழிகளின் தோற்றத்தினை தொல்காப் பியம் முதலான நூல்களிலும் காணலாம். இதனோடு பழமொழிநானூறு என்ற நூலிலும் பழமொழியின் சிறப்புக்களைக் காணலாம். பழமொழிகளின் தோற்றம் ஒருவரது அல்லது பலருடைய பட்டறிவை அடிப்படை யாகக் கொண்டு அமைகின்றது. அறிவாற்றல் மிக்க அவர்கள் அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மை களை அழகுறச் சுருக்கமாக பொருள் பொதிந்ததாக ஆக்கிக் கூறியுள்ளமை நோக்குதற்குரியதாகும். இதில் பழமொழிநானூறு என்னும் நூல் நானூறு வெண்பாக் களையுடைய ஒரு நீதி நூலாகும். இதில் ஒவ்வொரு வெண்பாவின் இறுதியில் ஒவ்வொரு பழமொழி அமையப்பெற்றமையினால் பழமொழி நானூறு எனும் பெயர் பெற்றது. இதனை கீழ்வரும் பாடல் எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மை புகழ்ந்துரைப்பர் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர் தளும்பல் இல்
இதில் நிறைகுடம் நீர் தளும்பல் இல்

என்ற பழமொழி மூலம் கற்றறிந்தார் தம்மை புகழ்ந்து பேசார். என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. இதன் வாயிலாக அக்கால இலக்கியங்களிலும் பழமொழிக்காக வித்திடப்பட்டுள்ளதெனலாம்.

சமுதாயத்தின் அனுபவத் திரட்டாக சந்ததி சந்ததியாக மக்கள் மத்தியிலே வழங்கி வரும் பழமொழிகள் படிப்பறிவுடையோர்களிடம் மட்டுமன்றி பாமரமக்கள் மத்தியிலும் வழங்கி வருவது குறிப்பிடத் தக்கதாகும். எமது மக்கள் மத்தியில் இப்பழமொழிகள் வாய்மொழி இலக்கியமாகப் பேசப்பட்டு வருகின்றமையைக் காணலாம். குறிப்பாக தமிழகத்தில் மட்டுமன்றி நமது நாட்டிலும் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களிலும், சந்தர்ப்பங்களிலும் இப்பழமொழிகளைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். இப்பழமொழிகள் மக்கள் வாழ்கின்ற இடம், சூழ்நிலை, தொழில், உறவுகள், உணவு, உடை, வீடு, அறிவுரை, அனுபவம் என்பவற்றிற்கேற்ப பேசப்பட்டுவருகின்றன. இவை போதனைகளாகவும், நீதிக் கதைகளின் சுருக்கமாகவும் அமையலாம். இவ்வாறான பழமொழிகள் காலத்திற்கு ஏற்றவகையில் மாற்றம் பெற்று வழங்குவதுமுண்டு, இருந்த போதிலும் எமது பண்பாட்டின் சிறப்பை வெளிப் படுத்தி நிற்பவை எனலாம்.

நாம் வாழும் பிரதேசத்திலும் மக்களிடையே இப்பழமொழிகள் செல்வாக்குப் பெற்றுள்ளதுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயின்று வருவதனைக் காணலாம். இந்த வகையில் சிறிய அடம்பன் கொடியாக இருந்தாலும், ஒன்றுபட்டால் வலிமை பெற முடியும் என்பதை எடுத்துக் கூற "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழியைக் கூறுவர். இதனை இன்றும் எமது சமூகத்தில் காணலாம்.

"எமது மக்கள் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ள இலக்கியங்களில் பழமொழிகள், நாட்டார் கலைகளில் ஒன்றாகவும் பேசப்படுகின்றது. பழமொழி என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் வாக்கியம் என்றும், முதுமொழி என்றும் ஓர் அனுபவத்தை சுருக்கமாகக் கூறுவதுடன், அது பற்றிய தீர்ப்பினையும் வழங்குவது எனவும் பலவாறு பொருள் கொள்வர்."



இது போன்று ஒருவர் சோகமாக இருந்தால் அதனைக் கண்ணுற்ற பெரியவர்கள் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பர். மேலும் நம்பிக்கைக்குரியவர்கள் அநியாயம் செய்தால் வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி என்பர். தகுதிக்கேற்ப வாழ வேண்டும் என்பதை "விரலுக்கேற்ற வீக்கம்" என்பர். நன்மை செய்தவர்க்குத் தீமை செய்தால் "வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது" என்று பழமொழி கூறுவர். இவற்றோடு "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை", "அழையாத விருந்துக்கு நுழையாதே" "ஆழமறியாமல் காலை விடாதே" "அடிக்கிற கைதான் அணைக்கும்" "அழுத பிள்ளை பால் குடிக்கும்" "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" என்று எண்ணற்ற பழமொழிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சொல்லும் பாங்கு எமது மக்களிடையே உள்ளது எனலாம்.

இவற்றோடு எமது பிரதேசத்தில் வழங்கப்பட்டு வரும் பழமொழிகளில் பல அறிவியல் செழுமை மிக்கவையாகும். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" "கந்தையானாலும் கசக்கிக் கட்டு," "எறும்பூரக் கற்குழியும், "விளையும் பயிரை முளையில் தெரியும்" போன்ற பழமொழிகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். இப் பழமொழிகள் வாய்மொழியாக இருப்பினும் ஒருவரது அறிவினை புத்திக்கூர்மையினை வெளிப்படுத்துவனவாகவும் கருத்தாழமிக்கவையாகவும் விளங்குகின்றன எனலாம்.

இவ்வாறு சூழ்நிலைக் கேற்பவும், ஒருவரது நிலையறிந்தும் எடுத்தவுடன் ஏற்ற வகையில் பழமொழிகளைக் கூறும் மனோபாவமும் அறிவும் எமது மக்கள் மத்தியிலே அனுபவமாக வந்த ஊற்றுக்களேயாகும். இப்பழ மொழிகளை இப்பிரதேச மக்கள் தமது நாளாந்த வாழ்க் கையில் இன்றும் பேசியும் உரையாடியும் வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வகையில் இப்பழமொழி கள் எமது பண்பாட்டின் மூலக் கூறுகளாக அமைகின்றன எனக் கொள்ளலாம்.

தமிழிலக்கிய பரப்பிலே உவமைத் தொடர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிடம் பெறுகின்றன. எமது மக்கள் மத்தியில் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் இவை பயன் படுத்தப்படுகின்றன. எமது பிரதேசத்திலும் மக்களி டையே இவ்வுவமைத் தொடர்களின் செல்வாக்கைக் காணலாம்.

தமிழ் மொழி செம்மொழி என்ற பெருமையைப் பெறுவதுடன், அமுத மொழியாகவும், தொன்மையும், செழுமையும், இளமையும் நிறைந்த மொழியாகவும் விளங்குவது தனித்துவமான சிறப்பெனலாம். எம் பெருமான் இறையனாரும், முருகவேளும், அகத்தியரும் எமக்களித்த தமிழ் மொழி சங்கமமைத்து வளர்த்த பெருமை மிக்கது. இத்தமிழ் மொழி காலத்தால் அழியாதது. ஞாலத்தில் பன்னெடுங்காலமாக நின்று நிலவுகின்ற பெருமை கொண்டது. இப்பெருமைமிகு தமிழ் மொழியிலே இலக்கணமும், இலக்கியமும் பயின்று வருவது சிறப்புக்குரியதாகும். இவ்வகையில் உவமைத் தொடர்களும் முக்கியம் பெறுகின்றன.

உவமைத்தொடர் என்பது நன்கு தெரிந்த ஒரு பொருளின் தன்மையை நினைவுறுத்தி தெரியாத பொருளின் தன்மையை அறிவுறுத்தும் தொடர் ஆகும். அதாவது உவமை ஒப்பிட்டுக் கூறுவதாகும். கருத்தை தெளிவாகவும், நிறைவாகவும் சுருக்கமான முறையிலும், சுவைபடவும் வெளிப்படுத்துவதற்கு உவமைத் தொடர்கள் பயன் படும் என்பர். பேச்சுக்களில், எழுத்துக்களில் உவமைத் தொடர்களைக் கையாளும் முறை மிகப்பண்டைக் காலந்தொட்டே இருந்து வருகின்றது என்பதற்கு சங்க இலக்கிய நூல்கள் சான்றாகும்.

"தமிழ் மொழி செம்மொழி என்ற பெருமையைப் பெறுவதுடன், அமுத மொழியாகவும், தொன்மையும், செழுமையும், இளமையும் நிறைந்த மொழியாகவும் விளங்குவது தனித்துவமான சிறப்பெனலாம். எம் பெருமான் இறையனாரும், முருகவேளும், அகத்தியரும் எமக்களித்த தமிழ் மொழி சங்கமமைத்து வளர்த்த பெருமைமிக்கது. இத்தமிழ் மொழி காலத்தால் அழியாதது. ஞாலத்தில் பன்னெடுங்காலமாக நின்று நிலவுகின்ற பெருமை கொண்டது."



தமிழிலே காலத்தால் முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியம் அணியிலக்கணம் பற்றிக் கூறும் முதன்மை நூலாக விளங்குகின்றது. இதில் பொருளதிகாரத்தில் உவமையில் இது பற்றிக் கூறுப்பட்டுள்ளது. இவற்றோடு தண்டியலங்காரம் போன்ற நூல்களிலும் அணியிலக்கணம் பற்றிக் கூறக் காணலாம். ஒரு விடயத்தைக் கவர்ச்சியான முறையிலே சொல்லவும் வெளிப்படுத்தவும் அணிகள் பயன்படுகின்றன. செய்யுள் இலக்கியம், வசன இலக்கியம் என்பதில் மட்டுமன்றி சாதாரண உரையாடல்களிலும் அணிகள் பயின்று வருகின்றன.


இலக்கண நூல்களிலே அணிகளை பொருளணி எனவும், சொல்லணி எனவும் இருவகைப்படுத்துவர். இலக்கியங்களிலே பொருளை கூறுகின்ற முறைமை மூலம் அழகுபடுத்தி வரும் அணிகள் பொருளணி என்றும் இதில் உவமை , உருவகம், தன்மை நவிற்சி, தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, வேற்றுப் பொருள் வைப்பு முதலான அணிகள் அடங்கும் என்றும், இலக்கியங்களில் பயின்றுவரும் அணிகளை அழகு படுத்திவரும் அணிகள் சொல்லணி எனவும் அவற்றுள் யமகம், திரிபு, சிலேடை முதலான அணிகள் அடங்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

உவமை அணி என்பது ஒரு பொருளை அதனிலும் சிறந்த ஒரு பொருளுடன் ஒப்பிடுவதன் மூலம் சிறப்பித்துக் கூறுவதாகும். ஓர் உவமைத் தொடரில் உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கு உறுப்புக்கள் அமைந்து வரும். இதில் நன்கு தெரிந்த பொருள் உவமானம் என்றும், உவமானத்தில் விளக்கப்படும் பொருள் உவமேயம் என்றும், உவமானத்தைச் சுட்டிநிற்கும் சொல் உவமை உருபு எனவும், பொதுத் தன்மையானது தொழில், பயன், வண்ணம், வடிவம் என நான்காக அமையும் என்றும், உவமை உருபுகள் போல, புரைய, ஒப்ப, அன்ன, இயைய என பயின்று வரும் என்றும் இலக்கண நூலார் குறிப்பிடுவர்.

இலக்கிய வழக்கிலும் உலகியல் வழக்கிலும் ஒரு பொருளை அதனைவிடச் சிறந்த ஒன்றோடு ஒப்பிடுவதன் மூலம் அப்பொருளைச் சிறப்பிப்பதற்கு உவமை கையாளப் படுகிறது. உதாரணமாக முகத்தைவிட தாமரை அழகானது என்ற உண்மையின் அடிப்படையிலேயே தாமரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எமது முன்னோர்களதும் மக்களதும் சிந்தனையில் உதித்த பொக்கிஷங்களான பழமொழிகளும், உவமைத் தொடர்களும் பேணிப்பாதுகாக்கப்படுவதுடன் எதிர்கால சந்ததியினர் அவற்றின் சிறப்பை அறிந்து கொள்ள இவற்றை ஆவணப்படுத்த வேண்டியது அவசியமாகும் "



போன்ற முகம் என்ற உவமை கையாளப்படுகின்றது. உவமைக்காட்சியின் போது உவமை உருபுகள் மறைந்து வரும் நிலையும் உள்ளது. அது உவமைத்தொகை எனப்படும். உவமை ஒரு பொருளிற்கும் மற்றொன் றிற்கும் பண்பு, தொழில், பயன் பற்றியும் ஒப்புமை கொண்டதாகச் செய்யப்படும். இவ்வகையில் உவமை அணியை பண்புவமை, தொழிலுவமை, பயனுவமை என வகுத்துக் கூறுவர்.

எமது பிரதேச மக்களிடையே இவ்வாறான உவமைகள் இடம்பெற்றுவருவதனைக் காணலாம். ஒருவரை பார்த்து "பவளவாய்" என்றும், "மதி போன்ற முகம்" என்றும் குறிப்பிடுவர். இவை பண்புவமைக்கு தக்கதோர் சான்றாகும். மேலும் மக்கள் மத்தியில் ஒருவரது வீரத்தைப் பற்றி குறிப்பிடும் வேளை "சிங்கம் போல் கர்ச்சித்தான்" என்பர். இது தொழில் உவமைக்கு உதாரணமாகும். "மழைபோன்ற கை" என்பது பயனுவமைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படுகிறது.

எமது நாட்டுப்புற மக்கள் இன்றும் தமது பேச்சிலும் எழுத்திலும் உவமையணி பயின்று வரத்தக் கதாக சொற்றொடர்களையும் பயன்படுத்தி வருகின்ற மையைக் காணலாம். இவை உவமைத்தொடராகும். இத்தகைய உவமைத்தொடர்களிலே "உள்ளங்கை நெல்லிக்கனி போல," "எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல" "ஓடும் புளியம்பழமும் போல" "கண்ணை இமைகாப்பது போல", "தாமரை இலைத் தண்ணீர் போல", "பசுமரத்தாணி போல", "பசுத்தோல் போர்த்த புலி போல", "வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல" முதலிய தொடர்கள் குறிப்பிடத்தக் கனவாகும். இத்தகைய உவமைத்தொடர்கள் எமது பிரதேச மக்களால் நாளாந்த வாழ்க்கையில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இவ்வாறான உவமைத்தொடர்களை அன்றுதொட்டு இன்றுவரை பேச்சுக்களிலும் எழுத்துக் களிலும் எமது மக்கள் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையிலே இனிமையான சொற்பொழிவொன்றைக் கேட்போர் அதன் சிறப்பை "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரிப் பொழிந்தாற் போல பேச்சு" என்று கூறுவர். இவை போன்று ஒருவ ருக்குப் பல தடவைகள் புத்திமதி கூறி கேட்காத நிலையில் "புறக்குடத்து வார்த்த நீர்போல எதுவித பலனுமில்லை" என்றும் பொருள்பட கூறுவர். ஒருவருக்கு துன்பத்திற்கு மேல் மென்மேலும் துன்பம் வந்தால் "வெந்த புண்ணில் வேல்பாய்ந்தது போல" என்று கூறுவர். பாதுகாக்க வேண்டியவர்கள் அதற்கு எதிராக நின்றால் "வேலியே பயிரை மேய்ந்தால் போல என்று குறிப்பிடுவர். இவ்வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுவைபடவும், கருத்துக்களை தெளிவு படுத்தியும், பொருத்தப்பாடுடையதாகவும் உவமைத் தொடர்களைப் பயன்படுத்தி வருகின்றமை சிறப்புக் குரியதாகும்.

எனவே எமது முன்னோர்களதும் மக்களதும் சிந்தனையில் உதித்த பொக்கிஷங்களான பழமொழி களும், உவமைத் தொடர்களும் பேணிப்பாதுகாக் கப்படுவதுடன் எதிர்கால சந்ததியினர் அவற்றின் சிறப்பை அறிந்து கொள்ள இவற்றை ஆவணப்படுத்த வேண்டியது அவசியமாகும் இத்தகைய கைங்கரியங்கள் மூலம் எமது சமூகத்தின் பெருமையும் பண்பாடும் நீடித்து நிலைபெறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

சைவப்புலவர்
**இளையதம்பி கோபாலபிள்ளை**
தேற்றாத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி உழைக்கின்றான்

சிறுகதை

**கா**லையில் அந்தப் பையனைக் கண்டது முதல் மலருக்கு மனங்கிடந்து தவிக்கத் தொடங்கியது. யார் அந்தப் பையன்? இவனை எங்கையோ பார்த்த மாதிரியிருக்கிறதே. ஆனாலும் யாரென்று தான் தெரியவில்லை. ஒன்றுக்குப் பத்துத்தடவைகள் அவனைப்பற்றி நினைத்துப் பார்க்கத்தொடங்கினாள். அப்போதுதான்

ஊரிலிருந்த அம்மாவின் கோள் வந்தது. அதற்கு மேல் இவளால் அவனைப்பற்றி நினைக்கவே முடியவில்லை.

மலரு உங்கப்பா படுத்த படுக்கையாகக் கிடக்கிறாருடீ. எதுக்கும் நீ ஒரு தடவ வந்தீட்டுப்போம்மா. அவரைப் பார்க்கவே பாவமாயிருக்கிறது. கை, கால் இழுத்ததோடு இப்போது வாய் பேசவும் முடியல்லடீ சொல்லி விட்டு அம்மா அழத் தொடங்கி விட்டாள்.

சரி சரி அழாதம்மா சொல்லிவிட்டு மலர் கொஞ்சநேரம் மௌனமாய் நின்றாள். பிறகு எப்படீம்மா அப்பாவுக்குத்தான் என்னைக்கண்டாலே ஆகாதே நான் எப்படி வரமுடியும்.?

என்னால முடியல மலர் தனியக் கிடந்திற்று நான் என்ன பண்ணுவன் சொல்லு. உன்னைப் பார்த்தாலாவது மனசுக்கு ஆறுதலாயிருக்கும்.

நீ சொல்லுறது சரிதானம்மா அப்பாவைப் பார்க்கக் கூடாதென்று எனக்கென்ன வேண்டுதலா?

அப்போ புறப்பட்டு வாயேன்.

என்னம்மா, பேசிற நீ போன தடவ உன் பேச்சைக் கேட்டு நான் அங்கு வந்து பட்ட அவமானம் போதாதா? "நான் செத்தாக் கூட நீ இந்த வீட்டுப்பக்கம் வரக்கூடாதுடீ" என்று நானே கைக்குழந்தையோடு வந்த என்னை அப்பா விரட்டி விட்டார்.

நீ சொல்வது சரிதான் மலரு. உடம்புல ஆட்டம் இருக்கும் வரையும் எல்லாரும் அப்படித்தான் ஆடுவாங்க. ஆட்டம் அடங்கிப்போனால். அவங்களும் அடங்கிக்கிடக்க வேண்டியது தான். இப்போ அவரால ஒன்றும் பண்ண முடியாது மலர். ஒரு தடவையாவது நீ வந்திட்டு போ மலர். அம்மாவின் கெஞ்சலின் மலர்விழியின் மனசு இளகி விட்டது.

சரிம்மா அவரோடையும் பேசிப்போட்டு உனக்கு முடிவு சொல்றன் சரியா நீ எதுக்கும் கவலைப்படாமல் தைரியமாயிரு. அவள் போனை வைத்துவிட்டாள்.

அப்பாவுக்கும் அவளுக்கும் இடையில் அப்படி என்ன தான் வில்லங்கம். இப்போ மலர்விழியின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசுக்குள் அந்தப் பழைய நினைவுகள் தான் ஒரு நிமிடம் ஓடி மறைந்தது.

அவளுடைய அப்பா ஒரு சாதாரண பள்ளி வாத்தியார் தான் ஆனால் எல்லா விடயங்களிலும் ரொம்ப கண்டிப்பானவர். அம்மாவுக்குப் பரந்த மனசு. மலர்விழிக்கு ஒரு தம்பி மனோகரன். அவன் டாக்டருக்கு படிச்ச கையோடு லண்டனுக்கு போய் விட்டான். மலர்விழிக்கு 'நர்ஸ்' வேலை கிடைத்தது. காலி பெரியாஸ் பத்திரியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த விடயத்தில் வாத்தியாருக்கும் பெரிய சந்தோசம் தான். இனி அவளுக்கொரு கலியாணத்தைப் பேசி முடித்து விட்டால் நிம்மதி என்று நினைத்தவர். மகளுக்கு மாப்பிள்ளை தேடத் தொடங்கினார். அதற்கிடையில் மலர்விழியே ஒரு மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டாள். என்பது தான் அவருடைய கோபம்.

சரத் உண்மையிலேயே நல்ல பையன் மலர்விழி வேலை பார்க்கும் ஆஸ்பத்திரியிலேயே அவனும் எக்கவுண்டனாக வேலை பார்த்து வந்தான்.

இருந்தும் அவன் என்ன சாதி சமயமோ குலம் கோத்திரமோ என்று காரணம் சொல்லி ஒதுக்கி விட்டார். மலர்விழி கேட்டுப்பார்த்துவிட்டு ஒரு நாள் அவர் முன்னே மாலையும் கழுத்துமாக அவள் அவனோடு வந்து நின்றதை அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை. அன்றைக்கு அவளை வீட்டை விட்டுத் துரத்திய மனுசன் அதன் பின் எக்காரணம் கொண்டும் அவளைப் பார்க்க விரும்பினாரில்லை.

இருந்தும் அம்மாவுக்கு வருத்தம் கடுமை என்று கேள்விப்பட்டு இடையில் ஒரு தடவை கைக் குழந்தையோடு வீடு தேடி வந்தவளை வீட்டு வாசல் படி மிதிக்கக் கூடாதென்று அவர் விரட்டிய போது தான் மலர்விழியின் மனசும் கல்லாய்ப்போனது.

உலகத்தில் நடக்காத தப்பையா அவள் செய்து விட்டாள். இந்த லட்சணத்தில் மறுபடியும் அவர் முன்னே போய் நின்றால் என்ன நடக்குமோ? நினைக் கவே அவளுக்கு பயமாயிருந்தது.

அம்மா தான் பாவம் தனியாகக் கிடந்து அல்லாடு கிறாள். வாறது வரட்டும் எதுக்கும் ஒரு தடவ போய் பார்த்துவிட்டு வரவேண்டியதுதான். முடிவெடுத்து விட்டாள் அவள். 'டியூட்டி' முடிந்து வீட்டுக்கு போனதும் எல்லா விடயத்தையும் சரத்திடம் சொல்லி முடித்தாள்.

பாவம் அவன் எந்த வித மறுப்பும் சொன்னா னில்லை. நீ போயிட்டு வா மலர். அம்மாவும் நானும் பிள்ளைகளை பார்த்துக் கொள்ளுவோம் தானே. நீ கவனமாக போயிட்டுவாம்மா. சந்தோசமாக அவளை வழியனுப்பி வைத்தான் அவன்.

அவள் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது. அம்மா அனுப்பிய ஆட்டோக்காரன் வந்து அவளை ஏற்றிச் சென்றான். ஸ்டேசனில் இருந்து வீட்டுக்கு செல்ல சுமார் இருபத்தாறு கிலோ மீற்றரைக் கடக்க வேண்டும். இருபது வருடங்களுக்குப் பிறகு வருகிறாள் அப்பாடா எவ்வளவு பெரிய மாற்றம். இது நம்ம ஊர்தானா அவளால் நம்பவே முடியவில்லை. போகும் வழியெல்லாம் புதுப் புது மாடி வீடுகளும், கடைகளும், கோயில்களும் ஊரே மாறிப்போயிருந்தது. ஆட்டோக் காரரிடமே எல்லா விடயங்களையும் மலர்விழி விசாரித்துக் கொண்டே வந்தாள். கடைசியாக ஒரு வீடு. அவர்கள் வீட்டுக்கு போகும் 'பெண்டில்' நீலமும் வெள்ளையுமாகக் கலர் அடித்த அழகான இரண்டு மாடிக் கட்டிடம்.

இது யாரோட வீடண்ண. மலர்விழி தான் கேட்டாள். உங்கப்பாவோட மச்சாளாம். சரசக்கா என்று சொல்லுவாங்களே அவங்களோட வீடுதானம்மா.

ஓ சரசு மாமியோட வீடா! மலர் விழி விரலை வாயில் வைத்துத் தன் வியப்பை வெளிப்படுத்தினாள். பிறகு ஏனண்ணை சரசு மாமியோட பிள்ளைகள் யாரும் வெளிநாட்டில் இருக்கிறானுகளோ?

ஆட்டோக்காரன் சிரித்தான். மலர்விழிக்கு அவனுடைய சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை. அதனால் கேட்ட கேள்வியினை மறுபடியும் அவனிடம் கேட்டாள் அவள்.

எங்கம்மா வெளிநாட்டில? சரசக்காவுக்கு ரெண்டு பொடியன்கள் தானே மூத்தவன் என்னமோ 'டூரிஸ்டுக் கைட்டாம்' மற்றவன் படிக்கிறானாம் போல, அவையிர வீட்டுச் சங்கதியெல்லாம் நமக்கென் னம்மா தெரியும். சொல்லிக் கொண்டே மலர் வீட்டு வாசலில் ஆட்டோவை நிறுத்தினான் அவன்.

ஆட்டோவைக் கண்டதும் உள்ளேயிருந்த அம்மா தான் ஓடி வந்தாள். இருபது வருடத்துக்குப்பிறகு மகளைக் கண்ட சந்தோசம் அவளுக்கு. மலரு எப்பிடிடா இருக்கே. அவளைக் கட்டிக்கொண்டே அழுதவள் நேராக தகப்பனாரிடம் அழைத்துச் சென்றாள். எலும்பும் தோலுமாய் அப்பா பேச்சு மூச்சற்றுப்படுத்தி ருந்தார். கைகால்கள் கூட இயங்காத நிலை.எவ்வளவு அட்டகாசமாக இருந்த மனுசன் இப்படி அடங்கிப் போய்க் கிடக்கிறாரே. என்ற எண்ணம் மனதுக்குள் வந்து செல்ல மலர்விழி அவர் கால்களைப்பற்றிக் கொண்டு கண்ணீர் விடத்தொடங்கினாள்.

உணர்ச்சிகளற்ற மரக்கட்டையால் என்ன பண்ண முடியும்? எழும்பக் கூட திராணியற்றவராய், ஒரு சின்ன எதிர்ப்பைக் கூட அவரால் வெளிக்காட்ட முடியவில்லை. அவர் கண்களிலிருந்து மட்டும் கண்ணீர் லேசாகக் கசிந்து கொண்டிருந்தது.

இது எதனால்? தன் இயலாமையை நினைத்து அவர் அழுகிறாரா? அல்லது இந்தக் கழுதையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்க வரக்கூடாதென்று எத்தனை தடவைகள் சொல்லியும் வந்து விட்டாளே என்ற வெறுப்புணர்வா? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. இப்போது அவள் அம்மாவைப் பார்த்தாள்.

இப்படித்தானம்மா ஒரே அழுதபடி இருக்கிறார். நான் என்ன செய்ய முடியும்? அம்மா சொல்வது சரிதான் இனி அப்பாவுக்கு ஒன்றுமே செய்வதற்கில்லை யென்பது மலர்விழிக்கு நன்றாகத் தெரியும். டாக்டர்களும் கைவிட்டு விட்டார்கள் இருந்தும் அவள் தன் மனத்திருப்திக்காக ஒத்தடம் கொடுப்பது, எண்ணெய் பூசுவது, மசாஜ் பண்ணுவது என்று ஏதேதோ செய்து கொண்டுதானிருந்தாள்.

எப்படியோ ஊருக்கு வந்து ஒரு வாரம் ஓடி விட்டது. சரத்திடம் அப்பாவைப்பற்றி சொன்னவுடன் பரவாயில்லை மலர் எங்களைப்பற்றி நீ கவலைப்படாத பிள்ளைகளை நாங்கள் கவனிப்பம். நீ அப்பாவை கவனித்து விட்டு வா என்றான்.

அன்றும் அப்படித்தான் அப்பாவுக்கு 'சேலைன்' போட்டுக் கொண்டிருந்தாள் மலர் வெளியில் யாரோ அம்மாவுடன் கதைத்துக் கொண்டிருப்பது துல்லியமாகக் கேட்டது. என்னக்கா மலர்விழி வந்திட்டாமென்று கேள்விப்பட்டன் மெய்தானா?

ஓம் சரசு வந்து ஒரு கிழமையாச்சு எத்தனை நாளைக்குத்தான் அவளும் நிக்கேலும் நாளைக்கு போக வேணுமெண்டாள். அம்மாதான் சரசு மாமிக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். அது சரி அவளால தானே அண்ணனுக்கு இந்த நிலை அவர் சொல்லை மதியாமல் தன்ர இஸ்டத்திற்கு கலியாணம் செய்து கொண்டு என்றைக்கு ஓடினாளோ அண்டைக்கே அவன் உடைஞ்சுபோனான்.

எவ்வளவு கம்பீரமாக இருந்தவர் இண்டைக்கு இப்பிடிக் கிடக்கிறார். போலிக்கு பெருமூச்சு விட்டாள் சரசு மாமி. என்னசொல்லி அவள் வாயை அடக்குவதென்று தெரியாமல் மௌனமாக நின்றாள் மலர் விழியின் அம்மா.

சரி அக்கா நாகராசண்ணனை ஒருக்காப் பார்த்திட்டுப் போறன் என்றபடியே, சரஸ்வதி உள்ளே வரவும் மறுவழியால் மலர்விழி வெளியே போகவும் சரியாக இருந்தது.

மலர்விழி வெளியே வந்து அம்மாவைப் பார்த்தாள். மகளின் மனவேதனை அவளுக்கு புரிந்தது. நீ ஒன்றும் கவலைப்படாத மலரு. கொட்டுறது தானே தேளுக்குக் குணம். அது மாதிரித்தான் சரசுவும் சொல் லுறதைச் சொல்லட்டும். நீ பேசாமல் இரு என்று மகளைச் சமாதானப்படுத்தி விட்டு உள்ளே போனாள்.

நாகராசா அண்ண ஓடிப்போன உன்ர மகள் உன்னைத் தேடி வந்திருக்கிறாள். எழும்பிப்பாரண்ணை. நீ தான் ஓடுகாலி ஓடுகாலி என்று புலம்புவியே. இண்டைக்கு வீடு தேடி வந்திருக்கிறாள். எழும்பு எழும்பண்ணே. ஏதோ பாச மழையில் பேசுவதைப் போல் பேசிய அவள் வார்த்தைகளைக் கேட்டதும் மலர்விழியின் அம்மாவுக்கு வேதனை தாங்கமுடியவில்லை.

இப்போதெல்லாம் அவள் இப்படித்தான், பணத்திமிரில் யாருக்கு என்ன பேசுவதென்றே யோசிப்பதில்லை. எடுத்தெறிந்து பேசுவதையும், கிண்டலடிப்பதையும் கைவந்த கலையாக வைத்திருக்கிறாள்.

அவள் பேச்சுக்கு யாரும் எதிர் பேச்சு பேசவில்லையே என்ற ஏமாற்றத்தில் வெளியே வந்த சரசு. எங்கக்கா மலரைக் காணயில்ல என்று வினவினாள். குளிக்கிறாள் போல சரசு. இரு கோப்பி ஊத்திக்கொண்டு வாறன். இல்லையில்ல கோப்பியொண்டும் வேண்டாம் நான் அவசரமாகப் போக வேணும். கண்டியோ மலரு ஊருக்கு போக முதல் வீட்ட வரச் சொல்லக்கா அவளைக் கண்டு வருசக்கணக்காகுதல்லவா நான் வாறன். ஒரே மூச்சில் மலரின் அம்மாவுக்கு பதில் சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

இரண்டு நாட்கள் கழித்து மலர்விழி ஊருக்கு போக ஆயத்தமானாள். சரி போயிற்றுவாரணம்மா. இரவில உங்க சித்தப்பா மகன் சந்திரன் படுக்கைக்கு வருவான். பகல்ல வேலைக்காரப் பையனோடு நான் சமாளிப்பன். நீ கவலைப்படாமல் போயிற்றுவா மகள். அடுத்த தடவ வரும் போது குடும்பத்தோடு வா மலர்.

அம்மா சொன்னதும் மலருக்கு மனசு குளிர்ந்து போனது. மலரு போக முதல் மறந்திராம சரசு மாமி வீட்டுக்கொருக்கா போயிட்டு வந்திடம்மா. ஏம்மா அவ இன்னும் என்னை அவமானப்படுத்த வேணுமெண்டு நினைக்கிறியா? இல்ல மலரு நீ வந்தும் வராமல் போயிட்டியே என்று ஆயுசுக்கும் சொல்லிக் காட்டுவாள் அது தான் சொல்லுறன்.

அம்மாவுக்காக அன்று மாலையில் சரசு வீட்டு வாசலில் போய் நின்றாள் மலர். வீட்டுக்கேற்றோடேயே ஹாலிங் பெல் சுவீட்சைப் பொருத்தியிருக்கிறார்கள். மனசுக்குள் நினைத்தபடியே சுவிட்சை அழுத்தியதும் இரண்டாம் மாடியில் நின்று எட்டிப்பார்த்தாள் சரசு மாமி.

பிறகு, ஓ! மலரா வாம்மா வா கீழே வந்து கதவைத் திறந்து வரவேற்றாள். விஸ்தாரணமான முற்றம், உள்ளே பெரிய பூந்தோட்டம் வீடு அழகாய் இருந்தது. எப்படியும் செலவு கோடிக்கணக்காகியிருக்கும். வீட்டைப் பார்க்கவே மலருக்கு வியப்பாக இருந்தது.

எப்படி மலர் வீடு நல்லாயிருக்குதா? சூப்பராயிருக்குது மாமி சரசுவுக்கு பதிலளித்தாள் மலர்விழி. ஓம் பிள்ள எல்லாம் என்ர மூத்தவன் கைலாசுவின்ர உழைப்புத்தான் மலரு சரியான கஸ்டப்பட்டு குடும்பத்தை நிமிர்த்திப் போட்டான் பார்த்தியா? பெருமையாகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சொன்னாள் சரசு. பிள்ளையள் உழைச்சால் சந்தோசம் தானே மாமி. ஓம் பிள்ளை வா உள்ளே போய் வீட்டைச் சுற்றிப்பார். நான் டீ ஊத்திக் கொண்டுவாறன் சொல்லி விட்டு சரசு உள்ளே சென்றதும் மலர் கீழிருந்தபடியே ஹாலைச் சுற்றிப்பார்த்தாள்.

நீலப் பெயின்ற் அடித்த சுவற்றில் நாலைந்து படங்கள் அலங்கார மின் விளக்கொளியில் அழகாகக் காட்சியளித்தது. கடைசியாக ஒரு படம். ஒரு வெள்ளைக் காரனோடு வாட்டசாட்டமான ஒரு இளைஞன். படத்தைக் கூர்ந்து பார்த்த மலர்விழியின் மூளையில் மின்னலடித்தது. இந்தப்பையன் சந்தேகமேயில்லை இவனேதான். மலர்விழிக்கு புரிந்து விட்டது. அன்றைக்கு ஆஸ்பத்திரியில் சூட்டுக் காயத்தோடு ஒருவனை அழைத்துவந்த பையன் இவனேதான். சரசுமாமி டீ கோப்பையோடு மலரை நோக்கி வந்து கொண்டிருந்தாள். என்ன மலரு படத்தில இருக்கிறது யாரென்று யோசிக்கிறியா? அவன் தான் என்ர மூத்தவன் கைலாசு.

ஓ! இவன் தானா மாமி. அது சரி இவன் எங்கே வேலை பார்க்கிறான். எண்டு சொன்ன நீங்கள்?

அவன் நல்ல பெரிய வேலையில இருக்கிறான். பிள்ள. வெளிநாட்டாக்களோடு தான் வேலை.

“கவனம் மாமி காலம் கெட்டுக்கிடக்கிறது. உங்கட நல்லதுக்கு தான் சொல்லுறன். மலரின் வார்த்தைகளைக் கேட்டதும் சரசுவுக்கு ஒரு மாதிரியாய் போய்விட்டது. என்ன மலரு சொல்லுறாய் நீ? என்ர பிள்ளையென்ன பொய் களவா செய்கிறான். கோபத்தோடு கேட்டாள்.

இல்ல மாமி நம்மோட பிள்ளைகள் எங்க போகிறார்கள் எப்படி உழைக்கிறார்கள்? யாரோடு பழகிறார்கள் என்றெல்லாம் நாம தான் கவனிக்கவேணும் மாமி அதைத் தான் சொல்லுறன்.

மலர் சொன்ன பதிலில் ஏதோ உட்குத்து இருப்பதை உணர்ந்தாள். சரசு. எனவே மறுபடியும் இல்ல உன்ர பேச்சு எனக்கு சரியாய்ப்படல்ல மலரு ஏன் இப்படிச் சொல்லுறாய் சொல்லு பார்ப்பம் என்றாள்.

இந்தக் காலத்தில் எவன் எப்பிடி உழைக்கிறான் என்று கவனமாயிருக்க வேணும் மாமி. கண்டவனையும் நம்பிக் கடைசியில் வாழ்க்கையைச் சீரழிக்கக் கூடாதல் லவா. மகன் வந்தால் விசாரிச்சுப்பாருங்க நான் வாறன்.

பட்டும் படாமலும் சொல்லிவிட்டு மலர் விடை பெற்றுவிட்டாள். சரசு மாமி ஒன்றும் புரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். அதுவரை நேரமாக உள்ளே படுத்துக்கிடந்து எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சரசுவின் புருசன் வெளியே வந்து “ஏன்டி பைத்தியக்காரி அந்த ஓடுகாலி பொறாமையில ஏதேதோ சொல்லிப்போட்டு போறாளென்றால் அதைக் கேட்டு நீ மண்டை குழம்பியிருப்பியா போடி போய்த் தேத்தண்ணியைக் கொண்டு வா.... சொல்லிய படியே டீவியைப் போட்டவர் அப்படியே இடிந்து போய் ஐயோ கடவுளே என்ற படியே சரிந்து வீழ்ந்தார்.

அது வேறொன்றுமில்லை. பிரபல போதை வஸ்துக் கும்பல் கைது என்ற செய்தியோடு கைலாசின் படமும் பெரிதாகக் காட்டப்பட்டது தான் காரணம். இதுவரை நாளும் ‘தம்பி உழைக்கிறான் எனக் கர்வத்தோடு திரிந்த சரசு மாமி கண்ணீர் விட்டுக் கதறி அழத் தொடங்கினாள்.

போதை வஸ்துக் கடத்தல் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுடைய உடமைகள் அனைத்தும் அரசுடமை ஆவதோடு குற்றவாளிகள் மரண தண்டனைக்கு ஆளாவார்கள் எனச் செய்திகள் தொடர்ந்தது. கடவுளே கடவுளே என்ர பிள்ளையைக் காப்பாற றப்பனே என்றபடி புலம்பிய சரசுமாமியின் குரல் இப்போது மலர்விழியின் வீடுவரையும் கேட்கத் தொடங்கியது.

கலாபூசணம் **திருமதி அனுராதா பாக்கியராஜா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சளின் மகிமை



**தெ**ற்காசிய மக்கள் மஞ்சளை ஒரு மங்கலப் பொருளாக கருதுகின்றனர். மஞ்சளை அதிகம் உபயோகிக்கின்றனர். நம் நாட்டில் மஞ்சளைத் தெரியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஆன்மிகவாதிகள், பெண்கள், மஞ்சளைத் தினமும் உபயோகித்து வருகின்றனர் எனலாம். இந்துக்களின் திருமணத்தின் போதும், மத வைபவத்தின் போதும் மஞ்சளுக்கு உகந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்..

பெரியோர் மணமக்களை மஞ்சள் குங்குமத்தோடு நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். எமது வாழ்க்கையில் மங்கல கரத்தை பறைசாற்றுகின்ற மஞ்சளுக்கு உயிரிலும் மேலான ஸ்தானம் கொடுக்கப்பட்டுள்ளது எனலாம். இக்கால கட்டத்திலே வீட்டிலோ, வர்த்தக நிலையத்திலோ தினமும் காலை மாலை வேளைகளில் மஞ்சள் நீர் தெளிப்பதனை அவதானிக்கலாம். மஞ்சளுக்கு கிருமிகளை (Viras) கொல்லும் ஆற்றல் நிறைய காணப்படுகின்றது. மஞ்சளைப் பெண்கள் முகம், கை, மற்றும் தேகம் எங்கும் பூசி அழகையும் வசீகரத்தையும் மெருகூட்டுகின்றனர்.

தமிழ் நாட்டில் மஞ்சள் மங்கலகரமான பொருளாக தாலிக்குப் பதிலாக மஞ்சள் துண்டினை கட்டும் வழக்கம் உண்டு. அதனால் தங்கத்திற்கு ஈடாக மஞ்சளைக் கருதுகின்றனர். நாம் அன்றாடம் மஞ்சளை உணவிற்கு மாத்திரம் பயன்படுத்துகின்றோம். ஆனால் மஞ்சளில் மறைந்திருக்கும் நோய் நிவாரணங்களை அறிந்தால் ஆச்சரியப்படுவோம். மஞ்சள் பசியைத் தூண்டும் தன்மையுடையது. மஞ்சள் உணவுப் பதார்த்தத்தில் கிடைக்கும் நிறம் மாத்திரம் அன்று உணவுகளில் தேவையற்ற கிருமிகளையும், வயிற்று கிருமிகளையும் அழித்து விடுகின்றன.

மஞ்சள் வேப்பிலை இரண்டையும் ஒன்றாக அரைத்துப் பூசிவர அம்மையினால் ஏற்பட்ட தழும்புகள் மறைந்து விடும். மஞ்சள் துண்டை சுட்டு அதில் வரும் புகையை நுகர்வதால் மூக்கில் நீர்வடிதல், ஜல தோஷம் நீங்கும்

அடிபட்டதால் ஏற்பட்ட வலி வீக்கமுள்ள அவயங்களில் மஞ்சளை அரைத்து சூடாக்கி பற்றாகப் போட்டால் சுகம் கிடைக்கும். மஞ்சளையும் ஆடாதோடா இலையையும் பசுவின் சிறுநீரில் அரைத்துப் பூச சொறி, சிரங்கு சுகமாகும்.

மஞ்சளில் பலவகையுண்டு. கறி மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், நாக மஞ்சள், பூசு மஞ்சள் அவற்றில் சில.

அக்காலத்தில் அம்மியில் அரைத்து தூய்மையான மஞ்சளை பாவித்தார்கள். மஞ்சளின் மகிமை தூய்மையான மஞ்சளிலிருந்தே பெறக் கூடியதாக இருக்கும். இக் காலத்தில் வியாபார நோக்கத்திற்காக சேர்க்கை மஞ்சள் தூள் விற்கப்படுகின்றது. இது கேடு விளைவிக்கும். இலங்கையில் 'கொரோனா' ஏற்பட்ட போது மஞ்சளுக்கு மௌசு அதிகரித்தது.

மஞ்சள் முற்காலத்தில் சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் முதன் முதலாகப் பயிரிடப்பட்டது. அங்கிருந்தே ஆசிய நாடுகளுக்கு பரவியதாக வரலாறு கூறுகிறது. நமது அண்டை நாடான இந்தியாவில் வணிகப் பொருளாக பயிரிடப்படுகிறது. இலங்கையிலும் தற்பொழுது மஞ்சள் பயிரிடப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திருமதி. மகேஸ். டானியல்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உழைப்பே உயர்ச்சி

குனிந்தபடி புல்வெளியில் பசுக்கள் மேயும்
குறைவின்றி இருபொழுதும் காலை மாலை
கனிவோடு பால் சொரியும் கலையும் பொங்க
காலமெலாம் எமதூரில் வளமே தங்கும்!

குளத்து மடுச் சேற்றினிலே புரண்டு நாளும்
குளித்தபடி எருமைகளும் புல்லை மேயும்
வளமான பால் பொழிந்து தயிரை மாந்தி
வளர்ந்துயர எமக்களிக்கும் நிதமும் பாலே!

பார்க்குமிடமெங்கணுமே பசுமை கொஞ்சும்
பரந்த வயல் வெளிகளிலே கதிர்களாகும்
வேர்த்தொழுகும் உடலோடு உழவர் மக்கள்
விடியல் முதல் மாலை வரை உழைத்துமாய்வர்.!

வயலுழுது வரப்புயர்த்திக் கட்டி நீரை
வளங்காணப் பயிருக்கு நிறைவாய்ப் பாய்ச்சி
உயர் விளைச்சல் கண்டுய்யும் வண்ணம் நாளும்
உழைப்பதனால் எமதுழவர் உயர்ச்சி காண்பர்!

கத்திரி, நல் வெண்டியோடு கச்சான், சோளம்
கறிக்குதவும் வெங்காயம், கொச்சிக் காயும்
சத்தான மரக்கறிகள் மரவள்ளிக் கிழங்கு, பீற்றூட்
தவறாமல் காலைக்குள் விளையச் செய்வர்.

பறங்கியொடு நல்லிதரை, கதலி, மொந்தன்
பல வகையில் வாழையினம் தனை வளர்ப்பர்
உறங்காமல் நல்லுழைப்பில் கவனமது வைத்த எங்கள்
ஊரவர்கள் வறுமையற்று வாழ்தல் காண்பீர்!

**கலாபூசணம், வித்தகர் வி.அருள்மொழிராஜா**
களுதாவளை 01.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியுமா...?

நெடுந்தூரப் பயணத்தின் தொடக்கத்தில்
அவளும் அவனும்
காதல் என்ற ஒற்றைச் சொல்
மதம் ஜாதி என வேற்றுமையாய் பிரிந்ததால்
தனிமையாய் இவர்கள் ஒன்றாகினர்

காதல் என்ற சொல் மனதை நிரப்பலாம்
ஒரு சாண் வயிறு கேட்குமல்லவா....?
ஒரு வேளை உணவையாவது
உழைப்பால் பணம் இதுவே தீர்மானம்

காலையில் எழுந்ததும் நீரால் வயிற்றை நிரப்பி
மனைவியிடம் "கவலை கொள்ளாதே"
என்ற ஆறுதல் வார்த்தையோடு
வெளியே செல்கிறான் வேலை தேடி

காலைச் சூரியன் நடுப் பாகத்திற்கு வந்த போதும்
கிட்டவில்லை இன்னும் அவனுக்கொரு வேலை
எது கிடைத்தாலும் செய்து விடலாமென்றெண்ணினாலும்
எங்கும் இயந்திரமானதால் எங்கே கிடைக்கும் வேலை

நண்பகலும் கடக்கிறது.
வயிறும் கடகடக்கிறது
மனைவியை நினைத்தால் கண்களும் பணிக்கிறது

இவனின் வேண்டுதலால் கடவுளின் அருளோ
விறகு கொத்தும் வேலை கிட்ட
வியர்வை வடிய வடிய செய்கிறான்
இடையிடையே நீரால் அவனைப் பலப்படுத்தியபடியே...

வேலை முடிந்ததும் பணத்தை வாங்கிக் கொண்டு
பறக்கிறான் வீட்டை நோக்கி
கொண்டு வந்த பணமோ சிறிதானாலும்
சுவையாய் பசி போக்குகிறான்

இன்றைய நாள் முடிகிறது
இறைவனுக்கு இருவரும் நன்றி கூற
கணவன் இருக்கிறானென்ற நம்பிக்கையில்
தூங்கி விடுகிறாள் மனைவி

நாளை எப்படி விடியுமோ என்ற கவலையில்
தூங்காமல் தவிக்கிறான் கணவன்
விடியுமா...?
கடவுளின் கைகளிலே...

**-தேனூர் கௌசிகன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோலுக்கு மினுக்குமில்லை...!

**கவிஞர் ஆழிவேந்தன்**

ஊரிலே இருக்கும்
ஊமைக் குசும்பர்களுக்கும்
தேரிலே இருக்கும் - அழகான
தேவதை நானானேன்

பார்த்துப் பகிடி பண்ண
பாவையாகிக் காத்திருந்தேன்
சேத்து வைப்பதற்கு – எனக்குச்
சீதனமும் போதவில்லை

ஓலைக் குடிலொண்டும்
ஓட்டைப் பாயொண்டும்
சீலைத் துண்டொண்டும் - ஊட்டுல
சோறாக்கப் பானையொண்டும்

பாலுக்குப் பசுவொண்டும்
பாவாடை சட்டையொண்டும்
கீலமாகிச் சொத்தெண்டு – என்னட்ட
கேவலமாக் கிடக்கு

மேலுக்குப் பவுசிமில்ல
மோகினியாத் திரியவில்ல
தோலுக்கு மினுக்குமில்ல – என்னத்
தோகையாக்க நகையுமில்ல

நேத்து வர நான்
நேத்தி வச்சேன் சாமிக்கு
ஆத்தா கண் துறந்தா - இண்டைக்கே
ஆணழகன் எனக்கமைவான்

ஆத்தாவும் கருணையில்ல
ஆக்களையும் காணவில்ல
ஆத்தாவும் அப்பனும் - ஐயோ
ஆராரோடோ போனாங்க


மூத்த குமராகி
மூதேசி ஆகிவிட்டேன்
சேத்து வைப்பதற்கு – என்னட்ட
சீதனமும் போதவில்ல.

காத்து இரிக்கேன் நான்
காலம் வருமெண்டு
காலமும் வரவில்ல – அந்தக்
காலனும் பார்க்கவில்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழு சுருக்காகுமோ நம் நட்பு



எறும்புகள் அணிதிரளும்
புள்ளிக்கோட்டு சவாரிக்கூடத்தில்
ஒற்றுமைக்காய் படைக்கப்பட்ட
மர்மதேசத்தின்
மாயஜால சித்திரங்கள் - நாம்

நோக்கம் ஒன்றின்
துவக்கப் பெருவெளியில்
நீண்ட இறுக்கங்களால்
கோர்க்கப்பட்ட அன்பால் விளைந்த
அழகிய பிரயாணம் - இது

சிற்பம் உருவாக முன்
உழியின் பிடியில் ஓங்கி அடித்த
வேகம்தனில் சிவந்து வீங்கிய
கைகளில் கிடக்கிறது
உடைந்த கண்ணாடி இதயம்

கோர்த்த புகழ்மாலை அப்படியே
தூரத்தில் தொங்குகிறது - கழுத்தின்றி
இருண்டு தவறும் மாரிகால
மழைமேகத்துள்
வெயில் கீற்றாய்
உதிக்கும் உன்
மர்மதேச மாயங்களால்

வலிகொடுக்கும்
நின் மௌனங்கள்
மரங்கொத்தி பறவைகளின்
தனி சாம்ராச்சியங்களுக்கு
கைதியாய் அழைத்து சென்று
கண்ணை கட்டி
இதயத்தை ருசிக்க செய்கிறது

காரணம்
விழுங்கிய கொக்கு தாடையில்
அகப்பட்ட கொய் மீனாய்
அப்படியே செமிபாடடைய
எத்தனிக்க முயல்வேனே தவிர
தாடை கிழித்து தப்பும் கலைகள்
கற்ற மேலாடை களைந்த
கானல் நீர் மீனல்ல - நான்

நீண்ட இராத்திரிகளின்
தூரத்தில் உதிக்கும்
சூரியனின் ஒளி வெள்ளத்தில்
அள்ளுண்டு கரையொதுங்க
மறுக்கும்
சிப்பிக்குள் ஒளிரும் முத்தாகும்
என் பாசம்

போர்வை இல்லாவிடினும்
போர்த்துக்கொள்வேன்
உன் ஞாபகங்களை
குளிர் தணிக்க அல்ல
போர்வை சூட்டின் ஈர்ப்பில் பரந்து
கிடக்கும்
பசுமையான நினைவுளை

சொல்லிவிட்டுப்போ
அல்லது
தந்துவிட்டுப்போ
துயரங்கள் கொல்லன் பட்டறையில்
சிவந்து கிடக்கிறது
நீறுபூத்த இரும்பாய்
மழையென பெய்ய
கார்மேகத்திற்கு
சைகை சொல்லி சிலநாளாச்சி காரணம்
நதியும் வளைய மறுக்கிறாள்
நீரின்றி
உணர்வும் உயிர்ப்பின்றி
கிடக்கிறது
உன் நட்பின்றி...

**கவிஞர். மயில்வாகனம் புவிதரன்**
செட்டியூர் சிந்தனைப்பித்தன்
செட்டிபாளையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்தில்

# புகழ் பூத்த கலைஞர்கள் வரிசையில்

## செட்டியூர் சிந்தனைச் செல்வன் அமரர் க.மயில்வாகனம் அவர்களின்

### கலை ஆற்றுகை பயணம் - நினைவு 01



முழுப் பெயர் : அமரர் கணபதிப்பிள்ளை மயில்வாகனம் (செட்டியூர் சிந்தனைச் செல்வன்)

விலாசம் : வைத்தியசாலை வீதி, செட்டிபாளையம்

பிறந்த திகதி : 1938.09.05

துறை : கவிதை

செட்டிபாளையம் கிராமத்து கலைத்துவ மரபுகள் நீண்ட பதிவுகளை உடையவை பாவைப்பிள்ளைக் கூத்து நடைபெற்ற கிராமமாக இக்கிராம வரலாற்று பதிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

செட்டிபாளையத்தை சேர்ந்த கணபதிப்பிள்ளை புலவரும் கவியாற்றல் சோதிடம், வைத்தியம், மாந்திரிகம் முதலியவற்றில் ஈடுபாடு பெற்றிருந்தார். அது மட்டுமன்றி தனது கலைத்தோழன் மாரிலன் என்பவருடன் இணைந்து பாவைப் பிள்ளை கூத்து என்னும் பொம்மலாட்டத்தையும் இக்கிராமத்தில் அரங்கேற்றினார்.

கோயில் திருவிழாக் காலத்திலும் சித்திரை வருடப்பிறப்பு நாட்களிலும் செட்டிபாளையத்தில் பொம்மலாட்டம் நடைபெற்றதை தனது இளமைக்காலத்தில் பார்த்ததாக இக்கிராமத்தில் பிறந்த இலக்கிய கலாநிதி க.தா. செல்வராஜகோபால் பதிவிட்டுள்ளார்.

இத்தகைய கலை முயற்சிகள் 1930 தொடக்கம் 1940 இடைப்பட்ட காலத்தில் செட்டிபாளையம் கிராமத்தின் கலை முகவரிக்கு சான்றானவை.

1943ம் ஆண்டு காலகட்டம் இலங்கை வரலாற்றில் முக்கியமான காலகட்டம் அவ்வேளையில் கல்வித்துறை சார் விசேட குழு அறிக்கை வெளியிடப்பட்டது

கலைகளை சுதந்திரமாக வளர்க்கவும் சுவாசிக்கவும் உரிய தருணங்கள் உருவாக்கப்பட்டன. கவியாக்கம் செய்வது மட்டுமன்றி கவியாற்றுகையிலும் 1940 தொடக்கம் 1950 வரையிலான காலம் செட்டிபாளையம் வரலாற்றில் முத்திரை பொறித்தது.

சமயச் சார்பான பிரபந்தங்களை இயற்றுவதில் செட்டிபாளையம் இரட்டைப் புலவர்கள் பங்களிப்புச் செய்தனர். இக்கிராமத்தை சேர்ந்த கலைஞர்கள் மேஸ்திரிகள் என அழைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு அழைக்கப்பட்டவரே மேஸ்திரிதன்மர் ஆவார். இவர் புலவர் கணபதிப்பிள்ளையின் பாட்டனார் மரச் சிற்ப வேலைகள், மர வீடுகள் கதவு ஜன்னல்களை கலைத்துவத்துடன் செய்பவர்களே மேஸ்திரிகள் என அழைத்தனர்.

எனவே கணபதிப்பிள்ளை புலவரின் பாட்டனார் காலத்தில் இருந்தே கலை ஆற்றல் மிக்க சமூக கட்டமைப்பு செட்டிபாளையம் கிராமத்தை அடையாளப்படுத்தியது.

இத்தகைய கலை வடிவங்களின் நீட்சி 1950 முதல் 1960 வரையிலான காலகட்டத்தில் இக்கிராமத்தில் செல்வாக்கு பெற்றது.

1960களை தொடர்ந்து நவீன கலை வடிவங்களாக நிலைமாறு காலம் ஏற்பட்டது. பல்கலைக்கழகம், ஆசிரியர் கல்லூரிகளில் இத்தகைய மாற்றங்கள் போதனைக்குட்பட்டன இந்த காலகட்டமே இக்கிராமத்தின் நவீன கவிதை வெளியாக விசாலித்தது.

இச்சூழலில் கற்பித்தல் வெளியில் உலாவந்த சிந்தனைச்செல்வன் கா. மயில்வாகனம் கலை வெளியில் சுவாசிக்க தொடங்கினார்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரி மூலம் புடம் போடப்பட்ட கலைஞர் பளபள என மின்னத்தொடங்கினார். தனது முயற்சியை கவிதைக்கே காணிக்கையாக்கினார்.

"எந்த நேரம் பார்த்தாலுமே நீங்க ஏதோ ஒன்றை கையில் வைத்து சிந்தனையில் இருப்பதென்ன தெரியாமல் தான் கேட்கிறேனே"(தன்னானே தானதன்னே தான தென்னா தன்னானனா)

கற்பித்தல் வெளியில் கவிஞர் மயில்வாகனம் அவர்களது சங்கமம் 09/11/1959ல் ஆரம்பமானது கொடுவாமடு அ.த.க பாடசாலையில் அவரது முதல் நியமனம், அதனைத் தொடர்ந்து பொலநறுவை மாவட்ட ஹெவம்பிட்டிய, திருகோணமலை மாவட்டத்தில் இறால்குழி, பட்டித்திடல் ஆகிய பாடசாலைகளிலும் சேவையாற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி, தேத்தாத்தீவு, துறைநீலாவணை, அம்பிளாந்துறை, செட்டிபாளையம் ஆகிய கிராமப் பாடசாலைகளிலும் பணி செய்தார். செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் 1971 தொடக்கம் 1983 வரை கலையையும் கல்வியையும் சமாந்தர பாதையில் வேரூன்ற செய்து பல வாரிசுகளை சமூகத்திற்கு இனங்காணச் செய்தார். இறுதியாக தாழங்குடா பாடசாலையில் அதிபராக பணி செய்தார். பாடசாலை விழாக்களில் கலைவிருந்தளித்தார்

அப்பாடசாலையை தரம் உயர்த்தி அவ்வூர் மக்களின் இதயத்தில் நீங்கா இடம்பிடித்தார்.

பல பாடசாலைகளுக்கும் பயணம் செய்யும் போதும் தாம் பெற்ற அனுபவங்களே கவிதைக்கு கால்கோளாகின நாடகத்துக்கு நடுகல்லாகியது. இவ்வாறு பாடப்பட்ட கவிதை வெளியில் உள்ளுறையான உணர்வுகள் சித்திரமாகின தினபதி பத்திரிகையின் கவிதா மண்டலத்தில் பதிவாகிய கவிதை நிலவுபெண். நீல கடலாக பெண்ணை வருணித்து நிஜமாகவே தன் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணை உவமித்த கவிதை அதுவாகும்.

1970களில் மகாகவிருத்திரமூர்த்தி கவிதை என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பின்வரும் பாடலில் காட்டினார்.

"மின்னல் கடல் சோலை தென்றலை மறவுங்கள்
இன்னல் உழைப்பு ஏழ்மைதனைப் பாடுங்கள்"

என்று கவிதையின் உள்ளடக்கத்தை வரையறை செய்ய கவிஞர் மயில்வாகனமோ கடலை வருணித்து ஒரு பெண்ணின் மன உணர்வு சித்திரத்தை படம் பிடித்தார். அவர் மானுடனை பாடினார் மானுட உணர்வுகள் கவிதைக்குள் கலந்தன.

நதி நங்கை என்னும் மற்றுமொரு கவிதை ஆசிரியர் கலாசாலை காலத்தில் (1968-1969)ல் கலாசாலை மலரில் வெளிவந்தது. செட்டியூர் சிந்தனைச் செல்வன் பிரபஞ்சவெளி வர்ணனை கவிஞன் அல்ல என்பதை நதி நங்கை புடம் போடுகின்றது நதியை பெண்ணாக்கி வர்ணிக்கும்போது

"பாடுபட்டே பயிர் செய்திடும் - எங்கள்
பாட்டாளி மக்களை உயர்த்துகிறாள்"

என்ற கவிதை வரிகள் 1968இல் பாடப்பட்டதாகும். இன்னலும் உழைப்பும் கலந்து பயிர் செய்யும் பாட்டாளி மக்களை இயற்கை வர்ணனையுடன் இணைத்து பாடிய கவிதை மகாகவிருத்திரமூர்த்தியின் கவிதை வெளிவந்த சூழலிலேயே முகம் காட்ட வைத்தது.

மரபுக் கவிதை வடிவத்தில் புதிய தரவைப் பதிவிறக்கிய அமரத்துவ கவிஞரை நினைவு கூருவது காலத்தின் தேவையாகும்.


கவிதை வாழ்க - கவிஞன் வாழ்க

**பே.பேரின்பராசா**
செட்டிபாளையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2019இல் நடைபெற்ற கலாசார, இலக்கிய விழாவின் போது கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள்

### மூத்த கலைஞர் கௌரவிப்பு



முழுப் பெயர் : திரு. குஞ்சித்தம்பி அமரசிங்கம்
விலாசம் : விஷ்ணு கோவில் வீதி, மகிழூர்முனை.
பிறந்த திகதி : 1947.06.18
துறை : கூத்து



முழுப் பெயர் : திரு. ஆறுமுகம் நாராயணபிள்ளை
விலாசம் : கிழக்கு வீதி, தேற்றாத்தீவு - 02
பிறந்த திகதி : 1951.04.10
துறை : நாடகம்



முழுப் பெயர் : திரு. இளையதம்பி தருமலிங்கம்
விலாசம் : அம்மன் கோவில் வீதி, குருமண்வெளி -12
பிறந்த திகதி : 1949.10.20
துறை : கூத்து



முழுப் பெயர் : திரு. நாராயணன் சந்திரன்
விலாசம் : மாரியம்மன் கோவில் வீதி, எருவில் தெற்கு
பிறந்த திகதி : 1949.02.21
துறை : கைப்பணி



முழுப் பெயர் : திரு. கனகரெத்தினம் இராசலிங்கம்
விலாசம் : வன்னியார் வீதி, களுதாவளை - மத்தி
பிறந்த திகதி : 1947.08.05
துறை : கிராமிய நடனம்

### இளங்கலைஞர் பாராட்டு



முழுப் பெயர் : திரு. நாகேந்திரன் விஜயதாஸ்
விலாசம் : பிள்ளையார் கோவில் வீதி, களுவாஞ்சிகுடி.
பிறந்த திகதி : 15.10.1988
துறை : குறுந்திரைப்படம்



முழுப் பெயர் : திரு. நவரெத்தினம் கனகரெத்தினம்
விலாசம் : கண்ணகி அம்மன் கோவில் வீதி எருவில்
பிறந்த திகதி : 1980.05.18
துறை : கவிதை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மண்முனை தென் எருவில்பற்று கலாசார பேரவையினால் கௌரவிக்கப்படும் கலைஞர்கள் – 2021

# மூத்த கலைஞர் கௌரவிப்பு



முழுப்பெயர் :- திரு. பூபாலப்பிள்ளை கிருபைரெத்தினம்

விலாசம் :- பிரதான வீதி, களுதாவளை-04

பிறந்த திகதி :- 1951.12.23

கௌரவிக்கப்படும் துறை :- சிற்பம்

*களுதாவளை - 04ல் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு பூபாலப்பிள்ளை கிருபைரெத்தினம் அவர்கள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக சிற்ப கலையில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவர் ஆலய சிற்பங்கள், கலை இரசனை மிக்க சிற்பங்களை அழகாகவும், நேர்த்தியாகவும், வடிவமைத்து வருகின்றார். இவரால் வடிவமைக்கப்பட்ட பல சிற்பங்கள் கிராம மட்டத்தில் பலரது பராட்டுக்களைப் பெற்றுள்ளது.*

*2009ல் மாகாண ரீதியில் நடாத்தப்பட்ட சிற்பக் கண்காட்சியில் இவரது சிற்பங்கள் 2ம் இடத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு நாடகத்துறையிலும் சிறந்த ஈடுபாடு கொண்டவர்.*

*சிற்பக்கலையில் கலைஞர் திரு பூபாலப்பிள்ளை கிருபைரெத்தினம் அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பினை பராட்டி கௌரவிக்கும் வகையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.*



முழுப்பெயர் :- திரு. கந்தப்பன் சோமசுந்தரம்

விலாசம் :- பழைய தபால் கந்தோர் வீதி, தேற்றாத்தீவு தெற்கு-02

பிறந்த திகதி :- 1948.10.20

கௌரவிக்கப்படும் துறை :- நாடகம்

*தேற்றாத்தீவு தெற்கு -02ல் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு கந்தப்பன் சோமசுந்தரம் அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும் காலப்பகுதியில் இருந்து தனது கலைப்பயணத்தை ஆரம்பித்து வருகின்றார். நாடகம், கூத்து, வசந்தன், கிராமிய இசை, கிராமிய நடனம் போன்ற துறைகளுக்காக கடந்த 40 வருடங்களாக தன்னை அர்ப்பணித்து வருகின்றார்*

*இவர் நாடகத்துறையில் சமூக நாடகம், இதிகாச புராண நாடகம் என 15க்கும் மேற்பட்ட நாடகங்களில் பாத்திரமேற்று நடித்துள்ளார். இவர் நடித்த நாடகங்களில் "மன்னவன்", "சுமைகள்" போன்ற பல நாடகங்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. அத்தோடு கிராமிய பாடலுக்கான அபிநயங்களையும் வழங்கி சிறந்த நடன கலைஞராகவும் இருந்து வருகின்றார்.*

*நாடகத்துறைக்கு கலைஞர் திரு. கந்தப்பன் சோமசுந்தரம் அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.*



முழுப்பெயர் :- திரு. நல்லதம்பி இராசரெத்தினம்

விலாசம் :- தபால் கந்தோர் வீதி, கோட்டைக்கல்லாறு

பிறந்த திகதி :- 1938.04.13

கௌரவிக்கப்படும் துறை:- சமயம் (அறநெறிக்கல்வி)

*கோட்டைக்கல்லாறில் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு. நல்லதம்பி இராசரெத்தினம் அவர்கள் 50 வருடங்களுக்கும் மேலாக அறநெறிக் கல்வி வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கி வருவதுடன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அறநெறி ஆசிரியராகவும் இருந்து வருகின்றார். தெய்வநெறிக் கழகம் எனும் அறநெறிப் பாடசாலையின் அதிபராகவும், ஆசிரியராகவும் இருந்து சமயம் சார்ந்த கலை நிகழ்வுகளை மாணவர்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தி வருவதுடன் சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்களை இவரே நிகழ்த்தியும் வருகின்றார். தன்னிடம் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பூமாலை கட்டுதல், தியானம், யோகாசனம், முதலான கலைப் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றார்.

அறநெறிக்கல்வி வளர்ச்சிக்கு துடிப்புடன் செயற்படும் இவரின் செயற்பாட்டிற்காக 2016ம் ஆண்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவருக்கு சிறந்த அறநெறி ஆசிரியருக்கான விருதினையும் வழங்கியுள்ளது.

அறநெறிக் கல்வி வளர்ச்சிக்கு திரு. நல்லதம்பி இராசரெத்தினம் அவர்கள் வழங்கி வரும் பணியினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021ம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.

---



**முழுப்பெயர் :- திரு. கணபதிப்பிள்ளை நீதிராஜா**
**விலாசம் :- நித்திலம் பேக்கரி வீதி, கோட்டைக்கல்லாறு**
**பிறந்த திகதி :- 1954.01.15**
**கௌரவிக்கப்படும் துறை:- கிராமிய பாடல்**

---

கோட்டைக்கல்லாறில் வசித்து வருகின்ற மூத்த கலைஞர் திரு கணபதிப்பிள்ளை நீதிராஜா கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக கிராமிய மண்வாசனை பொருந்திய பல கிராமிய பாடல்களை தானே இயற்றி, மெட்டமைத்து, பாடி வருவதுடன், அவற்றை இறுவெட்டுகள் மூலமும் வெளியிட்டுள்ளார். மாரியம்மன் தாலாட்டு, முருகன் காவியம், முதலான பல இறுவெட்டுக்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. அத்தோடு கவிதை எழுதுவதிலும் தேர்ச்சி பெற்றவர். மேலும் இவர் மட்டக்களப்பு தமிழ்ச்சங்க நிருவாக சபையின் உறுப்பினராகவும், கிராம மட்ட கலை இலக்கிய குழுக்களின் பிரதி நிதியாகவும் இருந்து கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். தற்காப்புக் கலையிலும் கூட சிறந்த தேர்ச்சி பெற்றவர்.

கிராமிய இசைக்கு கலைஞர் திரு. கணபதிப்பிள்ளை நீதிராஜா அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021 ஆம் ஆண்டுக்காக மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.

---



**முழுப்பெயர :- திரு. கிருஸ்ணப்பிள்ளை இராசநாயகம்**
**விலாசம் :- சிவனார் கோயில் வீதி, எருவில்**
**பிறந்த திகதி :- 1949.02.17**
**கௌரவிக்கப்படும் துறை:- பாரம்பரிய வைத்தியம்**

---

எருவில் கிராமத்தில் வசித்து வருகின்ற திரு கிருஸ்ணப்பிள்ளை இராசநாயகம் அவர்கள் 45 வருடங்களுக்கும் மேலாக பாரம்பரிய வைத்திய துறையில் ஈடுபட்டு வருகின்றார். விஷக்கடி வைத்தியம், முறிவு வைத்தியம் போன்ற துறைகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். பாரம்பரிய வைத்தியத் துறையில் இவர் வழங்கிவரும் சேவையினைப் பலரும் பாராட்டியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட பாரம்பரிய கலை கலாசார மேம்பாட்டுக் கழகத்தினராலும், புதுக்குடியிருப்பு ஆயுள்வேத வைத்தியசாலையினாலும், கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தினராலும் பாராட்டப்பட்டுள்ளார்.

பாரம்பரிய வைத்திய துறைக்கு கலைஞர் திரு. கிருஸ்ணப்பிள்ளை இராசநாயகம் அவர்கள் வழங்கி வரும் பங்களிப்பினை பாராட்டி கௌரவிக்கும் வகையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021ஆம் ஆண்டுக்கான மூத்த கலைஞர் கௌரவிப்பினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் பாராட்டு



முழுப்பெயர் :- திருமதி. ரினுஜா சிவசங்கர்

விலாசம் :- பிரதான வீதி, களுவாஞ்சிகுடி வடக்கு- 01.

பிறந்த திகதி :- 1987.11.19

கௌரவிக்கப்படும் துறை :- ஓவியம்

களுவாஞ்சிகுடியை பிறப்பிடமாக கொண்ட திருமதி.ரினுஜா சிவசங்கர் அவர்கள் ஒரு சிறந்த ஓவியக் கலைஞர். இவர் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் கட்புலக்கலை துறையில் இளம் நுண்கலைமாணி பட்டம் பெற்று அதே துறையில் உதவி விரிவுரையாளராக 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை கடமையாற்றி தற்போது அங்கு விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். அதன் ஒரு பகுதியாக இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள தமிழ்நாடு டி.ஆர்.ஜே. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் ஓவியத்துறையில் முது நுண்கலைமாணி (Master of Fine Arts)painting பட்டப்படிப்பினை பயின்று வருகின்றார். இவர் ஓவியத்துறையில் மட்டுமல்ல சிற்பத்துறையிலும் விசேட பயிற்சி பெற்றவர். இவர் சமுகம் சார்ந்த பிரச்சினைகளையும், பாரம்பரிய விடயங்கள் தொடர்பாகவும், குறிப்பாக பெண்கள் சார்ந்த விடயங்களையும் தனது ஓவியத்தின் ஊடாக வெளி உலகிற்கு கொண்டு வந்துள்ளார். பல நூல்களிலும் சஞ்சிகைகளிலும், இவரின் ஓவியங்கள் அட்டைப்படமாக வெளிவந்துள்ளன. தற்போது களிமண் சிற்பங்கள், மணற்சிற்பங்கள் போன்ற சிற்பத் துறைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் எண்ணெய் வர்ண ஓவியங்கள், நீர் வர்ண ஓவியங்கள், பஸ்ரல்வர்ண ஓவியங்கள், பென்சில் ஓவியங்கள், பேனா ஓவியங்கள் என பல வகை ஓவியங்களை வரைந்துள்ளார். பல தடவைகள் ஓவியக் கண்காட்சியினையும் வைத்துள்ளார். கைவினை, கவிதை, பாடல், திறனாய்வு என பன்முகத்திறமைகளைக் கொண்டவர்.

2020இல் இந்திய நிறுவனம் நடாத்திய நீர்வர்ண சர்வதேச ஓவியப் போட்டியில் இவரின் ஓவியம் சிறந்த ஓவியங்களில் ஒன்றாகத் தெரிவாகி சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் இணையத்தில் கண்காட்சிக்கும் வைக்கப்பட்டது. 2019 இல் மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நடைபெற்ற மணற் சிற்பக்கண்காட்சியில் மணலினால் செய்யப்பட்ட சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 2018 இல் இலங்கையின் கிழக்கு பல்கலைக் கழகம் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் "தோரணம்" எனும் ஓவியக்கண்காட்சியில் இவரது ஓவியங்கள் பல காட்சிப்படுத்தப்பட்டன. தொடர்ந்து 2018 இல் மட்டக்களப்பு களுதாவளையில் கண்ணகி விழாவை முன்னிட்டு கண்ணகி வழிபாடு தொடர்பான பல ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 2015 இல் இந்தியாவின் கேரளாவில் நடைபெற்ற ART MAESTRO AWARD சர்வதேச ஓவியப் போட்டியில் சான்றிதழ் பெற்றதுடன் இவரின் ஓவியமும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. 2012 இல் மட்டக்களப்பில் உள்ள அரங்க ஆய்வு கூடத்தில் 'கட்புல நர்த்தனம்' எனும் ஓவிய சிற்பக் கண்காட்சி ஒன்றையும் நடத்தியுள்ளார். 2006 இல் சுனாமி அனர்த்தத்திலிருந்து மீளக்கட்டி எழுப்புவோம் எனும் தலைப்பில் நியுயோர்க்கில் நிகழ்ந்த ஓவியப் போட்டியில் தெரிவாகி சான்றிதழும் பணப்பரிசும் பெற்றுள்ளார். 2006 இல் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஓவியர்களின் ஓவியங்களில் இவரின் சுனாமி ஓவியமும் தெரிவாகி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. தேசிய மட்ட கண்காட்சியில் ஓவியங்களை காட்சிப்படுத்தி பாராட்டும் சான்றிதழும் பெற்றுள்ளதோடு சர்வதேச ஓவியப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றார்.

ஓவியக்கலை வளர்ச்சிக்கு ஓவியக்கலைஞர் திருமதி ரினுஜா சிவசங்கர் அவர்கள் வழங்கிவரும் பங்களிப்பினை பாராட்டும் வகையில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் பாராட்டினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழுப்பெயர் :- திரு. தங்கவேல் ரமீஸ்குமார்

விலாசம் :- பிரதான வீதி, எருவில் தெற்கு

பிறந்த திகதி :- 1983.01.05

கௌரவிக்கப்படும் துறை :- பல்துறை

எருவில் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட திரு. தங்கவேல் ரமீஸ்குமார் அவர்கள் 20 வருடங்களாக கூத்து, மேடை நாடகம், கவிதை, பாடலாக்கம், குறுந்திரைப்படம் போன்ற துறைகளில் அர்ப்பணிப்புடன் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். அத்தோடு இவர் கவியரங்கு. பட்டிமன்ற நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி தலைமைதாங்கி நடாத்தியும் வருகின்றார். இவர் பாத்திரமேற்று ஆடிய இதிகாச புராண கூத்துக்களில் பத்ம சூரன்வதம் (வீரபாகு), கும்பகர்ணன் வதம் (இராமன்), கர்ணன்போர்(அர்ச்சுனன்), மயானம் காத்த மன்னன் (விசுவாமித்திரர்), அலங்கார ரூபன் நாடகம்(அலங்காரரூபன்), ஆடகசவுந்தரி (அமைச்சன்) போன்ற கூத்துக்களும், பாரி வள்ளல்(மன்னன் பாரி) எனும் சமூகக் கூத்தும், வெங்காயப் போடியார்(வெங்காயப் போடி) எனும் காசியக் கூத்தும் குறிப்பிடத்தக்க கூத்துக்களாகும்.

மேலும் இலக்கியத் துறையில் பாடலாக்கம், கவிதை போன்ற துறைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். உதிராக் குரும்பட்டிகள் (வசனக்கவிதை), சுள்ளென்ற சூரிய நேர்மை(மரபுக்கவிதை) போன்ற கவிதை நூல்களையும், கூடி வாழ்வோம் எனும் சிறுவர் நாடக நூ லினையும் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து குறுந்திரைப்படத் துறையிலும் சிறந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றார். பிஞ்சு, 50ரூபா போன்ற குறுந்திரைப்பட உதவி இயக்குனராகவும், பார்வை, வெற்றுத்தோட்டா, உரு போன்ற திரைப்படங்களில் நடிகனாகவும் இருந்து குறுந்திரைப்படத் துறைக்கு சிறந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

கூத்து, மேடைநாடகம், கவிதை, பாடலாக்கம், குறுந்திரைப்படம் போன்ற பல்துறை வளர்ச்சிக்கு கலைஞர் திரு தங்கவேல் ரமீஸ்குமார் வழங்கி வரும் பங்களிப்பினை பாராட்டும் முகமாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கலாசார பேரவை இவருக்கு 2021ஆம் ஆண்டுக்கான இளங் கலைஞர் பாராட்டினை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றது.


தொகுப்பு

**திருமதி. ராதிகா கருணாகரன்,**

கலாசார உத்தியோகத்தர்

மண்முனை தென் எருவில் பற்று,

களுவாஞ்சிகுடி.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரதேச இலக்கிய விழா - 2020/2021
## பாடசாலை மட்ட பெறுபேறுகள்

### பாலர் பிரிவு - கையெழுத்துப் போட்டி

1. முதலாமிடம் **செல்வன். ஸ்ரீ.கரிசாத்** மட்/பட் களுவாஞ்சிகுடி வினாயகர் வித்தியாலயம்
2. இரண்டாமிடம் **செல்வன். இ.நதுஜன்** மட்/பட் களுதாவளை விக்னேஸ்வரா வித்தியாலயம்
3. மூன்றாமிடம் **செல்வி. கா.சதுஷ்ரிகா** மட்/பட் எருவில் கண்ணகி மகா வித்தியாலயம்

### சிறுவர் பிரிவு - கவிதைபாடல் போட்டி

1. முதலாமிடம் **செல்வன். ம.மகோதரன்** மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம்
2. இரண்டாமிடம் **செல்வன். அ.அக்ஸிகன்** மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை
3. மூன்றாமிடம் **செல்வி. ச.கனிஸ்கா** மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை

### கையெழுத்து போட்டி

1. முதலாமிடம் **செல்வி. ச.கனிஸ்கா** மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை
2. இரண்டாமிடம் **செல்வன். அ.அக்ஸிகன்** மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை
3. மூன்றாமிடம் **செல்வன். ம.மகோதரன்** மட்/பட் விநாயகர் வித்தியாலயம் களுவாஞ்சிகுடி

### கனிஷ்ட பிரிவு - கட்டுரைப் போட்டி

1. முதலாமிடம் **செல்வன். நா.கிருதஞ்ஞன்** மட்/பட் பட்டிருப்பு தேசிய பாடசாலை

### கவிதை எழுதுதல்

1. முதலாமிடம் **செல்வன். நா.கிருதஞ்ஞன்** மட்/பட். பட்டிருப்பு தேசிய பாடசாலை
2. இரண்டாமிடம் **செல்வி. ர.திபானகா** மட்/பட். தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்

### கவிதை பாடல்

1. முதலாமிடம் **செல்வி. ஏ.லஷ்மியா** மட்/பட் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம்
2. இரண்டாமிடம் **செல்வி. நா.லிக்ஸ்ணவி** மட்/பட் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம்
3. மூன்றாமிடம் **செல்வி. அ.கிருஸ்ரிகா** மட்/பட் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயம்

### சிரேஷ்ட பிரிவு கட்டுரை போட்டி

1. முதலாமிடம் **செல்வி. வி.யாதவி** மட்/பட் துறைநீலாவணை மகா வித்தியாலயம்
2. இரண்டாமிடம் **செல்வி. ம.அர்ச்சனா** மட்/பட் தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்

### நாடகப்பிரதி எழுதுதல் போட்டி

1. முதலாமிடம் **செல்வன். க.அகிலாஸ்** மட்/பட் தேற்றாத்தீவு மகா வித்தியாலயம்

## திறந்த மட்ட பெறுபேறுகள்

### பாடல் ஆக்க போட்டி

1. முதலாமிடம் **திரு. தா.கோபாலகிருஸ்ணன்** குமரன் கலாமன்ற வீதி, களுவாஞ்சிகுடி
2. இரண்டாமிடம் **திரு. க.கயல்வேந்தன்** சாஸ்திரியார் வீதி, எருவில்
3. மூன்றாமிடம் **செல்வி. நா.மிதுசிக்கா** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி

### நாட்டார் கலை கற்றல் போட்டி

1. முதலாமிடம் **திரு. நா.நாகேந்திரன்** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி
2. இரண்டாமிடம் **திரு. இ.கோபாலப்பிள்ளை** பிரதான வீதி, தேற்றாத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய விவரண போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. இ.கோபாலப்பிள்ளை** | பிரதான வீதி, தேற்றாத்தீவு |

**சிறுகதைப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திருமதி. பரமேஸ்வரி பேரின்பராசா** | சந்திப்பலாவடி வீதி, தேற்றாத்தீவு |
| 2. இரண்டாமிடம் | **செல்வி. கு.வேணுஜா** | வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |
| 3. மூன்றாமிடம் | **திரு. க.சிவபாதம்** | விபுலானந்தாவீதி, களுவாஞ்சிகுடி |

**சிறுவர் கதை ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. தா.கோபாலகிருஸ்ணன்** | குமரன் கலாமன்ற வீதி, களுவாஞ்சிகுடி |
| 2. இரண்டாமிடம் | **செல்வி. கு.வேனுஜா** | வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |

## பிரதேச இலக்கிய விழா - 2021/2022 பாடசாலை மட்ட பெறுபேறுகள்

### பாலர் பிரிவு

**கையெழுத்து போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வன். அ.சகிஷ்ணு** | மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் |
| 2. இரண்டாமிடம் | **செல்வன். நி.ருக்ஷாம் குருஸ்** | மட்/பட் மகிழூர்முனை சக்தி வித்தியாலயம் |

### சிறுவர் பிரிவு

**கையெழுத்து போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. கீ.அபிஷாகரி** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| 2. இரண்டாமிடம் | **செல்வன். பி.ஜய்பிருந்தன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| 3. மூன்றாமிடம் | **செல்வன். அ.அக்ஸிகன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| 4. மூன்றாமிடம் | **செல்வன். ம.மகோதரன்** | மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் |

### கனிஷ்ட பிரிவு

**கட்டுரை போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. அ.ஹரிஸ்வினி** | மட்/பட் களுதாவளை விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| 2. இரண்டாமிடம் | **செல்வன். தி.அக்ஷயபவன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| 3. மூன்றாமிடம் | **செல்வன். பி.நதுமிதன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |

**கவிதை எழுதுதல்**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. நி.ஸவில்லானி குருஸ்** | மட்/பட் மகிழூர்முனை சக்தி வித்தியாலயம் |
| 2. இரண்டாமிடம் | **செல்வன். தி.அக்ஷயபவன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |
| 3. மூன்றாமிடம் | **செல்வன். பி.நதுமிதன்** | மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை |

**கவிதை பாடல்**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. ஸ்ரீ.தருணிதா** | மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் |
| 2. இரண்டாமிடம் | **செல்வி. சி.லுக்சனா** | மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் |
| 3. மூன்றாமிடம் | **செல்வி. ஜெ.தர்ஷாழினி** | மட்/பட் களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட பிரிவு

### கட்டுரை போட்டி

1. முதலாமிடம் **செல்வன். நா.கிருதஞ்ஞன்** மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை
2. இரண்டாமிடம் **செல்வி. ம.ஹரணி** மட்/பட் துறைநீலாவணை மகா வித்தியாலயம்

### நாடகப்பிரதி எழுதுதல் போட்டி

1. முதலாமிடம் **செல்வன். நா.கிருதஞ்ஞன்** மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை

### கவிதை எழுதுதல்

1. முதலாமிடம் **செல்வன். நா.கிருதஞ்ஞன்** மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை

## திறந்த மட்ட பெறுபேறுகள்

### பாடல் ஆக்க போட்டி

1. முதலாமிடம் **திருமதி. சரோசா கோபாலப்பிள்ளை** பிரதான வீதி, தேற்றாத்தீவு 02
2. இரண்டாமிடம் **திரு. நா.கிதுஷிகன்** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி
3. மூன்றாமிடம் **திரு. நா.நாகேந்திரன்** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி

### நாட்டார் கலை கற்றல் போட்டி

1. முதலாமிடம் **திரு. நா.நாகேந்திரன்** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி

### இலக்கிய விவரண போட்டி

1. முதலாமிடம் **திரு. இ.கோபாலப்பிள்ளை** பிரதான வீதி, தேற்றாத்தீவு

### சிறுகதை போட்டி

1. முதலாமிடம் **திருமதி. சோதிமலர்.திருக்கேதீஸ்வரன்** பிரதான வீதி, தேற்றாத்தீவு
2. இரண்டாமிடம் **செல்வி. கு.வேணுஜா** வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி
3. மூன்றாமிடம் **திரு. க.சிவபாதம்** விபுலானந்தர் வீதி, களுவாஞ்சிகுடி

### சிறுவர் கதை ஆக்க போட்டி

1. முதலாமிடம் **திருமதி. சரோசா கோபாலப்பிள்ளை** பிரதான வீதி, தேற்றாத்தீவு 02
2. இரண்டாமிடம் **செல்வி. கு.வேணுஜா** வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி

### கவிதை போட்டி

1. முதலாமிடம் **திரு. நா.கிதுஷிகன்** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி
2. இரண்டாமிடம் **செல்வி. நா.மிதுஷிக்கா** கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி
3. மூன்றாமிடம் **திரு. க.சிவபாதம்** விபுலானந்தர் வீதி, களுவாஞ்சிகுடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிஸ்ட பிரிவு

**சிறுகதை போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. நி.மோரக்ஷகா** | மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் |

**கவிதை பாடல்**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. இ.யேதாஸ்வினி** | மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் |

## சிரேஷ்ட பிரிவு

**கவிதை ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி.ச.கேசாயினி** | மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் |

## அதி சிரேஷ்ட பிரிவு

**சிறுகதை ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. நி.மேகஸ்யா** | மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் |

**கவிதை பாடல் போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **செல்வி. நி.மேகஸ்யா** | மட்/பட் குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் |

## திறந்த மட்ட பெறுபேறுகள்

**சிறுவர் கதை ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. நா.நாகேந்திரன்** | கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி |
| 2. இரண்டாமிடம் | **செல்வி. கு.வேணுஜா** | வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |

**கிராமியக்கலை**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. நா.நாகேந்திரன்** | கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி |

**கவிதை போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. க.கயல்வேந்தன்** | சாஸ்திரியார்வீதி, எருவில் |
| 2. இரண்டாமிடம் | **திரு. த.ரமீஸ்குமார்** | பிரதானவீதி, எருவில், தெற்கு |
| 3. மூன்றாமிடம் | **செல்வி. கு.வேணுஜா** | வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |
| 4. மூன்றாமிடம் | **திரு. நா.நாகேந்திரன்** | கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி |

**சிறுகதை போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. த.ரமீஸ்குமார்** | பிரதானவீதி, எருவில், தெற்கு |
| 2. இரண்டாமிடம் | **செல்வி. குவேணுஜா** | வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி |

**பாடல் ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. த.ரமீஸ்குமார்** | பிரதானவீதி எருவில், தெற்கு |
| 2. இரண்டாமிடம் | **திரு. க.கயல்வேந்தன்** | சாஸ்திரியார்வீதி, எருவில் |
| 3. மூன்றாமிடம் | **திரு. நா.நாகேந்திரன்** | கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி |

**செய்யுள் ஆக்க போட்டி**

| | | |
|---|---|---|
| 1. முதலாமிடம் | **திரு. நா.நாகேந்திரன்** | கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

- எழுவான் சிறப்பு மலரினை வெளியிடுவதற்கு பலரும் பல வழிகளில் பங்களிப்பு செய்துள்ளனர் அவ்வகையில்
- எழுவான் சிறப்பு மலரினை சிறப்பிப்பதற்கு பல ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கி எம்மை வழிப்படுத்தி வருகின்ற மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. சத்தியகௌரி தரணிதரன் அவர்களுக்கும்,
- எழுவான் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்கிய ஸ்ரீ இராமகிருஸ்ண மிஷன் சுவாமிகள் அவர்களுக்கும்,
- எழுவான் சிறப்பு மலருக்கான வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அவர்களுக்கும்,
- விழாவிற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கிய பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் அவர்களுக்கும்,
- இம் மலருக்கான ஆக்கங்களை வழங்கிய கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இம் மலரினை வெளியிடுவதற்கு உதவிய மலர்க்குழுவினர்களுக்கும்,
- விழாவில் கலை நிகழ்வுகளை வழங்கிய கலைக் கழகத்தினர்களுக்கும்,
- இம்மலரினை அச்சிட்டு வழங்கிய வணசிங்க அச்சகத்தினருக்கும்,
- இம்மலருக்கான அட்டைப்படத்தினை வடிவமைத்து வழங்கிய திருமதி ரினுஜா சிவசங்கர் அவர்களுக்கும்,
- கலாசார விழாவில் பல வழிகளிலும் பங்களிப்பு வழங்கிய எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியம், செட்டிபாளையம் திருவருள் நுண்கலைமன்றம், மற்றும் கோட்டைக் கல்லாறு சிகரம் கலாசார மேம்பாட்டு அமைப்பினருக்கும்,
- மற்றும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்ட கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் மற்றும் நன்றி கூற தவறவிடப்பட்ட அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்

**திருமதி. ராதிகா கருணாகரன்**
கலாசார உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா நிகழ்வுகளின் நிழல்கள் - 2018



அனுசரணை

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

கிழக்கு மாகாணம் - திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org